மொழியியற் பேராசிரியர்

# ஆறுமுகம் சதாசிவம்

அவர்களின்

# ஆய்வுகளும் புலமைத் திறன்களும்



பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Gifted By
Prof. Sathasivam's Family

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியியற் பேராசிரியர்
# ஆ. சதாசிவம் அவர்களின்
# ஆய்வுகளும் புலமைத் திறன்களும்


பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி

தமிழ்த்துறைத் தலைவர்
தென்னாசிய நுண்கலை கற்கை மையம்
அண்ணாமலை கனடா
ரொறன்ரோ.



வெளியீடு
சுவாமி விபுலாநந்தர் தமிழியல் ஆய்வு மையம்.
ரொறன்ரோ – கனடா.
2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book | : Research and Scholarly Skills of Linguistics Professor A. Sathasivam |
| Author | : Prof. Balasundaram Elayathamby<br>Head-Tamil Department<br>South Asian Institute of Fine Arts<br>Annamalai Canada, Toronto. |
| Subject | : Biography and Academic Skills |
| Publisher | : Swami Vipulananda Tamil Research Centre- Canada |
| Copy Right | : Mrs. Vimala Balasundaram M.A. (Sheffield.UK) |
| Language | : Tamil |
| Edition | : First Edition |
| Year of Publication | : 2022 |
| Font Size | : 12 |
| No. of Pages | : ... |
| No. Copies | : 200 |
| Printers: | : A Fast Print, Toronto |
| ISBN | : 978 – 0 – 9731932 -5 – 1 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

அணிந்துரை.............................................................................i

பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் மாணவன் தன் நினைவிலிருந்து எழுதுவது......................................vii

முன்னுரை..............................................................................xi

**இயல் - 1** பேராசிரியர் சதாசிவம் அவர்களின் கல்விப் புலமை....1

**இயல் - 2** பேராசிரியரின் மொழியியல் ஆய்வுகளும் ஆய்வு நூல்களும்..............................................................5

(நூல் - 1) Sumerian - A Dravidian Language – 1965..................13

(நூல் - 2) Porto-Sumerio-Dravidian: The common Origin of Sumerian and Dravidian-2017..................................20

(நூல் - 3) தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி – 2006...........23

(நூல் - 4) மொழியியலும் தமிழ்மொழி வரலாறும் - 2021.........47

சங்க நூல்களில் ஒலிக்குறிப்பு:..............................................59

அசைமொழிக் காலத் தமிழ்நாடு..............................................61

**இயல் - 3** இலக்கிய ஆய்வும் ஆய்வு நூல்களும்..................69

(நூல் - 1) ஞானப் பள்ளு (திருத்திய பதிப்பு:1968) இரண்டாம் பதிப்பு: 2018.........................................83

(நூல் 2) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் -1966........87

(நூல் -3) ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை - 1963, 2020........94

(நூல் - 4) கருத்துரைக் கோவை – 1959...............................97

**இயல் - 4** சைவ நெறிமுறைகளை மக்களுக்கு உணர்த்திய சைவப் பெரியார்..................................................101

சமயங்களும் உலக சமாதானமும்.....................105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயல் - 5** கொழும்புப் பல்கலைக்கழகத்திற் பேராசிரியரின் வினைத்திறன்கள்..........110

**இயல் - 6** இலக்கிய மரபுசார் இயக்கமும் பேராசிரியரின் செயல் திறன்களும்..........119

இலக்கிய மரபு பேணலிற் பேராசிரியரின் பங்களிப்பு:..........125

ஆய்வுத்துணை நூல்கள், இதழ்கள்:..........129

பின்னிணைப்புக்கள்- I – IX..........131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொழியியற் பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

பல்கலை நகர் – 625 021, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.

(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)

(தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவினரால் 4ஆம் சுற்றில் ஏ++ அங்கீகாரம் பெற்றது)

**முனைவர் போ.சத்தியமூர்த்தி,**
தலைவர், தமிழியல் துறை, தமிழியற்புலம்
இயக்குநர் (பொ), திருக்குறள் இருக்கை.
இயக்குநர் (பொ), தமிழ்ப் பண்பாட்டு மரபுச்செல்வங்கள் நடுவம்.

கைபேசி : 94886 16100
மின்னஞ்சல் : tamilkanikani@gmail com
mkutamil2010@gmail com

# அணிந்துரை

'கண்டறியாதன கண்டேன் பேராசிரியர் ஆ.சதாசிவம்' என்னும் முகவரியை. "ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதைப்போல, அச்சு வழியில் கண்டேன், உண்டேன், அகம் மகிழ்ந்தேன்.

நான் காணாத தமிழ் ஞானி; தங்களின் நூல் வழி கண்டேன் ஆ.சதாசிவம் என்ற தமிழ் ஞானி. உலக மொழித் தளத்தில் பண்பாட்டின் சிகரந்தொட்ட மொழி தமிழ் மொழி. அழியா இளமை, இனிமை, ஏற்றங்கள் பல கொண்ட மொழி. தகைசால் பண்பால் சங்கம் முதல் இன்று வரையில் தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களின் படைப்புத்தளம் மிக விரிந்ததாகி வரும் நிலை "எண்ணத்தக்கது. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" ஆற்றல் மிக்கப் புலவர்கள் காலந்தோறும் கவிபாடியும், உரை நிகழ்த்தியும், உரைநடை இலக்கியங்கள் யாத்தும் வருகின்றனர். செழுமைமிகு தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்திய வரைப்படம் தாண்டி, இலங்கை நாட்டில் பைந்தமிழும் தொன்மை மாறா வழக்குச் சொற்களும் உயிர்ப்பித்ததோடு உலா வரும் நாடு. நனி புகழ் இலங்கையின் தமிழ், ஏற்றமிகு சங்கத் தமிழின் சார்புத் தமிழாகும். பண்டுதொட்டு இன்று வரையில் பாண்டித்தியம் பெற்ற தமிழறிஞர்கள் பல நூறு நூல்களைக் காலந்தோறும் இயற்றித் தருகின்றனர். அப்படிப்பட்ட தமிழ்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையாளர்களுள் ஒருவர்தான் பேராசிரியர் கலாநிதி ஆ. சதாசிவம் அய்யா அவர்கள்.

கலாநிதி ஆ. சதாசிவம் அய்யா அவர்களின் முறையான கல்வி, தொடர்ந்த கல்வி, ஆய்வுக்கல்வி வரையில் அயராது கற்றுள்ள மாண்பு கண்டு வியந்தேன். அவருக்குக் கல்வியறிவூட்டிய பேராசிரியர்களை எண்ணியும் வியந்தேன். அவர்தம் மொழியியல் ஆய்வு, தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிக் குடும்பங்களின் ஆய்வுக்கு மிகப்பெரும் பயனாய் அமையும் தன்மையன. 'தமிழ் மொழியின் வினைச் சொல் அடிகள்' என்ற ஆய்வு உலகில் ஆ. சதாசிவம் யார்? என்பதை அடையாளப்படுத்திய ஆய்வாகும். பேராசிரியர் பணியோடு தம்முடைய எழுத்துப் பணியிலும் ஆய்வுப்பணியிலும் ஆழங்கால் பட்டவர். அந்த வகையிற் சுமேரிய மொழியையும் திராவிட மொழிகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பல உண்மைகளை மொழியியல் துறையில் வெளிக்கொணர்ந்தவர். அந்த ஆய்வு நூல் உலகப்புகழ் பெற்ற பேர்க்கிலிப் பல்கலைக்கழகத்தில் நூலாக வெளியிடப்பட்டது என்ற செய்தியும் அவர்தம் ஆய்வுத்திறத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

"சுமர் மொழி கி.மு.*6000* ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையுடையது. சுமர் மொழி பேசிய மக்கள் தாம் விடடுச் சென்ற சுடுமண் ஏடுகள் கால வெள்ளத்தால் மண்ணுள் புதையுண்டு போயின. அம்மொழி பற்றி ஆய்வு மேற்கொண்டோராற் சுமர்மொழி பொறிக்கப்பட்ட களிமண் ஓடுகள் கி.பி.*1850*-இல் கண்டுபிடிக்கப்பட்டு வாசிக்கப்பட்டுள்ளன. ஆனால் சுமார் *3500* ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த தமிழ் நூல்களையும் எழுத்து ஓவியங்களையும் தமிழ் மொழி இழந்துள்ளது. தமிழர் பனை ஓலையில் எழுதும் பழக்கம் உடையோராக இருந்துள்ளனர். அவை கடற்கோள்களால் அழிந்து போனமையாற் சான்றுகள் இல்லாது போயின. தமிழரில் ஒரு பகுதியினரான சுமர்மொழி மக்கள் விட்டுச்சென்ற சுடுமண் ஓடுகளிலுள்ள அசைச் சொற்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அடிச்சொற்களுடன் ஒத்துக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக gar = kar, bar. Pad என்ற சுமர்மொழி அசைச்சொற்கள் தமிழில் ஒரே பொருள் கொண்ட காண், பார், நாடு என்ற தமிழ்ச்சொற்களுடன் ஒத்துக் காணப்படுகின்றன. எனவே சுமர்மொழியில் உள்ள அசைச்சொற்களெல்லாம் பண்டைத் தமிழ் மொழியின் அசைச் சொற்கள் எனக் கருதப்படுகின்றன" என்று கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களின் ஆய்வு நுண்மாண் திறத்தை வெளிப்படுத்தியுள்ளார் நூலாசிரியர் பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி.

கலாநிதி ஆ. சதாசிவத்தின் இலக்கியப் பயணம் என்பது மரபுக்கானது; செந்தமிழின் காப்புக்கானது; தமிழ் மொழியின் மரபு, பண்பாடு, கலை ஆகியவற்றைப் பேணிக் காப்பது என்னும் தன்மைகளாக அமைந்ததையும் பேராசிரியர் இளையதம்பி குறிப்பிட்டுக் காட்டி நூலாக்கம் செய்துள்ளார். போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்களின் ஆட்சிமைக் காலங்களில் ஈழத்தில் செந்தமிழுக்கு இன்னல் ஏற்படாது காத்த பெருமையும் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களுக்கு உரியதாகும்.

ஈழத்தில் பண்டிதர்களுக்கு, அவர்களின் பண்பாட்டு வாழ்வியலுக்கு குந்தகம் ஏற்பட்டபோது அவற்றை எதிர்த்துப் "பண்டிதர்கள் பழமையும், பண்பாடும் மிக்கவர்கள்; புலமை மிக்கவர்கள்; அவர்களைப் பழைமைவாதிகள் என்று ஒதுக்கிவிடக் கூடாது" என்று குரல் கொடுத்தவர் சதாசிவம் அய்யா அவர்கள். பழைமை இல்லை என்றால் புதுமை வந்துவிடாது என்றும் எச்சரித்தவர். சமுதாய வளர்ச்சி எத்தகைய புதுமை கொண்டிருந்தாலும் அதன் குறிக்கோள் பழைமையானதே என்பதை உணரவேண்டும் என்றும் புதுமைக்கும் பழமைக்கும் உள்ள முரண்பாட்டைக் களைந்து, இரண்டும் இணைந்து இருப்பதே சாலச் சிறந்தது என்பதையும் இளையோர்களுக்கும் புதுமைவாதிகளுக்கும் உணரவைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. சதாசிவனாரின் அரிய இலக்கியக் காப்பில் மிகப்பெரிய சாதனை ஞானப்பள்ளு என்ற சிற்றிலக்கியத்தை இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாம் பதிப்பாக கொண்டு வந்ததைக் குறிப்பிடும் பேராசிரியர் இளையதம்பி, "முதற்பதிப்பை அமிர்நாதபிள்ளை பதிப்பித்த போது, மூல ஏட்டுப் பிரதியில் உள்ளவாறே சிறிதும் மாறுபடாமல் அப்படியே பதிப்பித்திருந்த உண்மை தவறாத உத்திமுறையைக் காட்டியுள்ளார். ஓர் இலக்கியம் *250* ஆண்டுகளாகப் பலராலும் தலைமுறை தலைமுறையாகப் பிரதி பண்ணும்போது ஏடெழுதுவோரின் மொழியாற்றலைப் பொறுத்து அதில் தவறுகள் ஏற்படுதல் இயல்பே. அன்றியும், பள்ளு இலக்கியத்தில் வரும் கதை மாந்தரின் பேச்சு வழக்குச் சொற்கள் பெரிதும் இடம்பெறுதல் இயல்பாகும். அவர்களது உச்சரிப்பைச் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால் அந்நூலைப் பதிப்போர் பல தவறுகளை அப்படியே பதிப்பிக்க நேரிடுகிறது. பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் சிறந்த மொழியியல் அறிஞர்களில் ஒருவர். அத்துடன் பேச்சுத் தமிழ்ச் சொல்லகராதியையும் தொகுத்த பட்டறிவு மிக்கவர். இவர் இந்நூலின் முதற் பதிப்பிற் காணப்பட்ட அத்தவறுகளைத் தனது பதிப்பிலே திருத்தியுள்ளார். அத்தவறுகளை அடிக்குறிப்பாகத் தந்துள்ளமை ஒரு பதிப்பாசிரியரின் சிறந்த பண்பாக அமைகிறது. முதற்பதிப்பு நூல் *(1904)* கிடைக்காத நிலையிற் பேராசிரியர் *1968*-இல் திருந்திய மறுப்பதிப்பாக வெளியிடப்பட்ட நூல் வாசகருக்கு மூலநூலின் தன்மையை எடுத்தியம்புவதாக அமைந்துளது" என்று புலப்படுத்தியுள்ள கருத்தாக்கத்தால் ஆ. சதாசிவம் அவர்களின் பதிப்புப் பணி எத்தகையது என்பதை உணரமுடிகிறது. ஒரு செம்பதிப்பை எங்ஙனம் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு ஞானப்பள்ளு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கலாநிதி ஆ. சதாசிவனாரின் சித்தாந்த அறிவும் ஈழ மக்களுக்கு சிறந்த வழிகாட்டுதலை ஏற்படுத்தியுள்ளது. அவர் யாவருக்கும் கடினமான சித்தாந்தத் தத்துவங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிதாக எடுத்துரைத்தவர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றை அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் பெற்ற முத்தி நிலைகளில் விளக்கிக் காட்டி நால்வகை மார்க்கத்தின் தெளிவை எடுத்துரைத்தவர். இதனால் சைவசித்தாந்தம் மக்களிடம் ஒரு புரிதலை ஏற்படுத்தியது என்பதையும் இந்நூலாசிரியர் விளக்கிக் காட்டியுள்ளார்.

இவர்தம் சாதனைகள் என்பன தமிழ் மொழிக்கும் தமிழ் இளைஞர்களுக்குமானது என்பதை யாவரும் அறிவர். கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலே தமிழ் மாணவர்களை அதிக எண்ணிக்கையில் சேர்த்தது. பௌத்த நாகரிகத்தைத் தமிழ் மாணவர்களும் அறிய வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தமையாலும் இவரின் புகழ் ஈழத்தில் பரவியது.

பேராசிரியரின் கற்பித்தல் ஆற்றலும் எல்லோரும் பாராட்டும் தன்மையது. அவர் தம் உரையில் தெளிவு, அழுத்தம், கவர்ச்சி, இனிமை முதலான பண்புகள் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ள கருத்துகளும் ஒரு நல்ல பேராசிரியராக அவர் இருந்தமையை அறியமுடிகின்றது. ஐந்து அரிய தமிழ் நூல்களையும் மூன்று ஆங்கில நூல்களையும் இருபதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் வெளிப்படுத்தியுள்ள அவரது நூல்கள் யாவும் எக்காலத்திற்கும் பயன் நல்கும் என நம்பலாம்.

இந்த அரிய நூலுக்கு அணிந்துரை நல்குமாறு கனடா நாட்டுத் தமிழறிஞர் பேராசிரியர், கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி அவர்களும், கனடா நாட்டில் தனிப்பெரும் தமிழ்ப்பணி ஆற்றி வருகிறார்கள். புலம்பெயர் நாட்டிலே தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிவரும் தமிழ்ப் பற்றாளர் பாலசுந்தரம் இளையதம்பி அவர்கள், கொழும்புப் பல்கலைக்கழகத்திற் பேராசிரியர் ஆ. சதாசிவனாரிடம் கல்வி கற்றுப், பின்னர் அப்பல்கலைக்கழகத்திலே அவருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த்துறையிற் கல்விகற்பித்தவர். தனது ஆசிரியரின் தமிழ்ப் பணிகளை தமிழ் உலகு அறியும் வகையில் இந்நூலை அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளமை பாராட்டுதலுக்கு உரியதாகும். தனது ஆசிரியரைப் போற்றும் பண்புடைய பேராசிரியர் பாலசுந்தரம் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தையும் பாராட்டையும் வெளிப்படுத்திக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். உலகில் தமிழ்நெறி பரப்பும் தமிழ்ச் சான்றோர்களுக்கு இதன் வழி எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன். நல்லுள்ளம் படைத்த உலகத் தமிழர்கள் யாவரும் இந்த நூலை வாசிக்க வேண்டும். கலாநிதி ஆ. சதாசிவனாரின் தமிழ் ஊற்றத்தையும் ஏற்றத்தையும் அறிய வேண்டும்.

மதுரை - தமிழ்நாடு

05.09.2022







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் மாணவன் தன் நினைவிலிருந்து எழுதுவது...

பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் மாணவரும், பேராசிரியருடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றியவருமான பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் பேராசிரியரின் "ஆய்வுகளும் புலமைத் திறன்களும்" பற்றி எழுதும் இந்த நூலக்கு "மாணவன் தன் நினைவிலிருந்து எழுதுவது" என்ற தலைப்பிற் பேராசிரியர் சதாசிவம் பற்றிய நினைவுகளை எழுதித் தரும்படி கேட்டார் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977ஆம் ஆண்டு முதலாகப் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் என் நினைவில் நிறைந்துள்ளார். பேராசிரியர் அவர்கள் தலைசிறந்த தமிழ் அறிஞராவார். அவர் இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர்களில் சிறந்த கல்வியியல் அறிஞராகத் திகழ்ந்தவர். அவரிடம் கல்வி கற்றதைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன். 1977 ஆம் ஆண்டிலே நான் கொழும்புப் பல்கலைக்கழகத்திற் கல்வி கற்கச் சென்றபோது, பேராசியருடன் அறிமுகமாகி, அவருடன் பழகும் வாய்ப்பும் கிடைத்தது.

முதலாம் வருட மாணவர்களுக்குப் பல்கலைக்கழகச் சூழல்கள் எல்லாமே புதிதாக இருக்கும். குறிப்பாக இரண்டாம் வருட மாணவர்களின் பகிடிவதையிலிருந்து தப்பி விரிவுரைக்குச் செல்வது மிகவும் கடினமான காரியமாகும். பாடசாலை வகுப்பறைக் கல்வியிலிருந்து முற்றிலும் மாறுபட்ட கற்பித்தல் முறை; மிகப் பெரிய விரிவுரை மண்டபம். ஒலிபெருக்கி மூலம் விரிவுரைகள் இடம் பெற்றன. பேராசிரியரின் முதலாவது விரிவுரை 'தமிழ்மொழியும் பண்பாடும்' பற்றியதாகும். ஒருவாறு மண்டபத்தைக் கண்டுபிடித்து விரிவுரைக்குச் சென்றேன். பேராசிரியர் சதாசிவம் அவர்கள் மேடையில் மிகவும் அமைதியாகவும், சிரித்த முகத்துடனும் காணப்பட்டார். இன்றும் அக்காட்சி என் நினைவில் நிழலாடுகின்றது. அவரது விரிவுரைகளைச் செவிமடுக்கும்போது, அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான பரந்துபட்ட அறிவுப் புலமையையும், மாணவரின் மனத்தைப் பிணிக்கும் வகையில் விரிவுரையாற்றும் திறனையும் கண்டு பெரிதும் வியப்படைந்துள்ளேன். அவரது விரிவுரைகளைத் தவறவிடாது மிக ஆவலோடு எல்லா மாணவரும் அவரது விரிவுரை கேட்பதற்கு வருவதை நான் அவதானித்திருக்கின்றேன். தமிழ் மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் என்பனவற்றில் அவருக்குள்ள புலமையை அவரது விரிவுரைகளிற் கேட்டுப் பூரிப்படைந்திருக்கின்றேன். அவர் மாணவருடன் மிகவும் அன்பாக உரையாடியதையும் நினைத்துப் பார்க்கின்றேன்.

1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பல்கலைக்கழகம் மூடப்பட்டது. தமிழ் மாணவர் அனைவரும் பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் தங்கியிருந்து பல நாட்களின் பின்னர் தத்தம் வீடுகளுக்கு அனுப்பப்பட்டோம். அப்போதும் பேராசிரியர் எங்களுக்கு உதவியாக அமைந்தார். நிலைமை சீராகி மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு வந்தபோது பேராசிரியர் அவர்கள் எங்களிடம் காட்டிய அன்பும் அரவணைப்பும், தந்தை மகனிடம் காட்டும் அன்பும் அக்கறையும் போலிருந்தன.

பேராசிரியர் அவர்கள் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின் காப்பாளராவார். தமிழ் மன்றச் செயற்குழுவில் இணைந்து பேராசியரின் வழிநடத்தலிற் பணியாற்றியதும் பசுமையான நினைவுகளாகும். தமிழ் மன்றத்தின் ஆண்டு விழா இதழின் இணையாசிரியராக இருந்து, விழா மலரைச் சிறப்புற வெளியிடுவதற்குப் பேராசிரியரின் வழிநடத்தல் பெரிதும் துணையாக இருந்தது. அவரிடம் பெற்ற அனுபவம் இன்றுவரை பல மன்றங்களுடன் நான் இணைந்து செயற்படுவதற்குத் துணையாக உள்ளதென்பதை மகிழ்வுடன் பதிவுசெய்கிறேன்.

மொழியியல் வல்லுநரான பேராசிரியர் சதாசிவம் அவர்கள், தமிழ்மொழி, திராவிடமொழிகள் என்பன பற்றிய ஆய்வுகளுக்கான புலமைப் பரிசுகள் பெற்றுப் பல நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் ஆய்வுகள் மேற்கொண்டதோடு, ஆய்வுநூல்களும் வெளியிட்டுள்ளார். பன்னாட்டு மொழியியல் மாநாடுகளிற் பங்கு கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். பேராசிரியர் அவர்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பெரும் பணியாற்றியவராவார். பேராசிரியர் அவர்கள் அரிதின் முயன்று தேடித்திரட்டி, "ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்'', என்ற நூலை 1966இல்வெளியிட்டார். அடுத்து ஈழத்திலே 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய ''ஞானப் பள்ளு" என்ற நூலை நன்கு ஆராய்ந்து திருத்திய பதிப்பாக 1968இல் வெளியிட்டார். இவ்விரு நூல்களும் பேராசிரியர் சதாசிவம் அவர்களை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே பதிவுசெய்துள்ளன.

மொழியியல் அறிஞராகத் திகழ்ந்த பேராசிரியர் சதாசிவம் அவர்கள் சமஸ்கிருதம், பாளி, மலையாளம், தெலுங்கு கன்னடம், ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய மொழிகளிலே தேர்ச்சிபெற்ற புலமையாளராவார். தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு ஆகியவற்றின் தொன்மையை நிலைநாட்டுவதிலே பேரார்வம் கொண்டு செயற்பட்ட, தமிழ்ப் புலமையும் தமிழ்மொழி ஆர்வமும் கொண்ட கல்வியாளரிடம் கல்வி கற்ற மாணவன் என்று கூறுவதில் நான் மிக்க பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

கணபதிப்பிள்ளை குமரகுரு, M. A.
தமிழ் விரிவுரையாளர்.
தென்னாசிய நுண்கலை கற்கை மையம் -
அண்ணாமலை கனடா.

1240 Ellesemere Road, #101
Scarborough, ON Canada, M1P 2X4.
ரொறன்ரோ. 18. 08. 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் மொழியியல் ஆய்வுத்துறையில் உலகு அறிந்த மொழியியல் அறிஞர்களில் ஒருவராவார். அவர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராக, பல்கலைக்கழக விரிவுரையாளராக, ஒக்ஸ்போட் பல்கலைக்கழக மொழியியல் கலாநிதியாக, மொழியியல் வல்லுநராக, மொழித் தூய்மையும் மரபும் பேணிய செந்தமிழ்க் காவலராக, பழந்தமிழ் இலக்கிய ஆளுமை மிக்கவராகப், பதிப்பு ஆசிரியராக, ஆய்வாளராக, உயர்நிலை ஆராய்ச்சி மாணவருக்கு நல்ல வழிகாட்டியாகப், பன்முகத்திறன்கள் வாய்க்கப் பெற்றவராகத் திகழ்ந்தார். தமிழ், ஆங்கிலம், வடமொழி, பாளி, மலையாளம் முதலிய மொழிகளைக் கற்றறிந்த பேராசிரியர், மொழியியல் துறையிற் சுமேரியம், திராவிடம் ஆகிய மொழிகளுக்கு இடையிலான ஒப்புமைகளை சுமார் இருபது ஆண்டுகள் ஆராய்ந்து தமிழ் மொழியினதும் தமிழ் இனத்தினதும் தொன்மையை நிறுவிய பெருமைக்குரியவர். சுமேரிய மொழி, தமிழ் - திராவிட மொழிகள் தொடர்பாக வெளிவந்துள்ள அவரது மூன்று நூல்கள் தமிழரின் தொன்மையை ஆராய முற்படுவோருக்குத் தகுந்த துணை நூல்களாகவும் வழிகாட்டி நூல்களாவும் அமையத்தக்கன.

பல்கலைக்கழகங்களில் ஆய்வு செய்யும் மாணவருக்கும் பண்டிதர் வகுப்பு மாணவருக்கும் பயன்படும்வகையில் **ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை** என்ற நூலை 1963இல் எழுதியிருந்தார். ஈழத்து மரபு வழி இலக்கியங்களில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த பேராசிரியர் சங்க காலம் முதல் 20ஆம் நூற்றாண்டுவரை ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களின் செய்யுள்களைச் சேகரித்து **'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்'** எனத் தொகுத்து ஆவணப்படுத்திய சாதனையாளர். அதுபோன்றே ஈழத்தின் பள்ளு இலக்கியமான **ஞானப் பள்ளு** என்ற நூலையும் பேராசிரியர் 1968இல் வெளியிட்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சதாசிவம் அவர்கள் 1965இல் கொழும்புப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்றுப் பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டார். மாணவருக்குக் கற்பித்தலோடு, முனைவர் பட்ட ஆய்வில் ஈடுபட்ட ஆய்வு மாணவர்களை நெறிப்படுத்தியும் வரலானார். அத்துடன் தமிழகத்துப் பல்கலைக்கழகங்கள், மலேசியப் பல்கலைக்கழகம், எடின்பரோப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் முனைவர்ப்பட்ட ஆய்வேடுகளின் வெளிநிலைத் தேர்வு மதிப்பீட்டாளராகவும் இறுதிக் காலம்வரையும் செயற்பட்டார்.

பேராசிரியரின் மொழியியற் புலமையும், சுமேரிய – திராவிட ஒப்பிட்டு ஆய்விற் காட்டிய ஈடுபாடும் அவருக்குப் பல புலமைப்பரிசில்கள் கிடைக்க வாய்ப்பாயிற்று. பல்வேறு பல்கலைக்கழகங்களின் புலமைப்பரிசில்கள் பெற்று, உலகப் புகழ் பெற்ற மொழியியல் அறிஞர்களான தோமாஸ் பரோ, எமனோ, லீக் லிஸ்கர் (American Linguist & Phonetician), வி. அய். சுப்பிரமணியம் முதலியோருடன் ஐரோப்பா, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழக மொழியியல்துறைகளில் ஆய்வுசெய்து நூல்கள் வெளியிட்ட பெருமை ஈழத்திற் பேராசிரியர் சதாசிவம் அவர்களுக்கே கிடைத்தது.

தமிழினம், தமிழ்மொழியின் தோற்றம், மொழி வரலாறு, மொழி மரபு பேணல் என்ற விடயங்களுடனேயே பேராசிரியரின் வாழ்நாட் செயற்பாடுகள் அமைந்திருந்தன. தமிழ் மொழியின் எழுத்து, சொல் என்பவற்றின் தோற்ற வரலாற்றைச் சுமேரியமொழியுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தார். தமிழ்மொழி வரலாறு பற்றித் தனித்தனி ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார். அவை இப்போது நூலாக்கம் பெற்றுள்ளன. இனத்தின் அடையாளம் மொழி; மொழி சிதைந்தால் இனத்தின் அடையாளமும் சிதைந்து விடும் என்பது பேராசிரியரின் கொள்கையாகும். அதனால் மொழி பேணல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய மரபு பேணல் என்பதில் பேராசிரியர் மிகவும் தீவிரமாகச் செயற்பட்டவர் என்பதையும் அவரது வாழ்க்கை வரலாற்றில் அறிந்து கொள்ளலாம்.

இலங்கைப் பல்கலைக்கழகத்திற் பேராசிரியர்கள் க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம், ஆ. சதாசிவம், சு. வித்தியானந்தன், எஸ். தனஞ்செயராசசிங்கம், க. கைலாசபதி, பொ. பூலோகசிங்கம், ஆ. கந்தையா, அ. சண்முகதாஸ் ஆகியோரிடம் தமிழ் கற்ற வாய்ப்பும் பெருமையும் எனக்குள்ளது. ஆயினும் பல்கலைக்கழகத் தமிழ்க் கல்வியைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் எனக்குத் தொடக்கி வைத்தவர் என்ற பெருமை பேராசிரியர் சதாசிவத்திற்கே உரியது. அது போன்றே பட்டப் படிப்பின் இறுதியாக முனைவர் பட்ட ஆய்வுக்கும் அவரே எனக்கு மேற்பார்வையாளராகவும் செயற்பட்டவர். 1971 முதல் 1982 வரை பேராசியருடன் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த காலம் மிகவும் சிறப்பாகவும், அனுபவம் மிக்கதாகவும் அமைந்திருந்தது. 1977இல் கொழும்பில் நடைபெற்ற இனக்கலவரத்தின்போது பேராசிரியர் அவர்கள், எனது குடும்பத்தை உயிராபத்திலிருந்து காப்பாற்றியதோடு, தனது வீட்டில் எங்களுக்கு அடைக்கலமும் தந்தவர் என்பதைக் குறிப்பிடுதல் நன்றிக் கடனாகும். அப்பெருந்தகை யாழ்ப்பாணத்தில் **1988இல்** இயற்கை எய்தியபோது நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற் சிரேஷ்ட விரிவுரையாளனாக இருந்தேன். அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்தமையாற் பேராசிரியரின் இறுதிக் கிரியைகளிற் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது.

உலகிலே 'தம்பெயர் நிறீஇத் தாம் மாய்ந்த" சான்றோர் பலராவர். அவர்களது, வாழ்வியல். அவர்களது வரலாறு எதிர்காலச் சமூகத்தின் வழிகாட்டியாகவும், உந்து விசையாகவும் அமையும் தன்மையன. அதனாலேயே வாழ்க்கை வரலாற்று நூல்கள் (Biograpghy) காலத்திற்குக் காலம் எழுதப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்க்கை வரலாற்று நூல்கள்" என்ற இலக்கிய வகைமைக்குள் இடம்பெறலாயின. வாழ்க்கை வரலாற்று நூல் எழுதுவது எளிதான செயற்பாடன்று. இதனை எழுதத் துணிவோர் எவரைப் பற்றி எழுத முற்படுகிறாரோ அந்த எழுத்தாளர் உண்மையாக அப்பெரியாருடன் வாழ்ந்தவராகவோ அல்லது அவர் வாழ்ந்த காலத்தவராகவோ, அவருடன் சேர்ந்தோ அல்லது அவர் வழியிற் பயணித்தவராகவோ அல்லது அவரது நெருங்கிய உறவினராகவோ இருத்தல் இத்தகு நூல் எழுதுவதற்கு நன்கு வாய்ப்பாகிறது. மேலும் அவருடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் நன்கு அறிந்தவராக இருத்தலும் இன்றியமையாததாகும். இவ்வகையிற் பேராசிரியரின் வாழ்க்கை வரலாற்றுடன், அவர் மேற்கொண்ட ஆய்வுகள், வெளியிட்ட நூல்கள், அவரது புலமைத் திறன்கள் என்பன பற்றி எழுதுவதற்கு எனக்கு அனைத்துப் பின்னணிகளும் அமைந்திருத்தல் நூலின் உண்மைத் தன்மைக்குச் சான்றாகும்.

இந்நூல் தொடர்பாக இரு விடயங்களைக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். கொழும்புத் தமிழ்ச் சங்க மேனாள் பொதுச் செயலர், "தமிழ்வேள;" அமரர் அ. கந்தசாமி ஆசிரியர், பேராசிரியர் சதாசிவம் அவர்களுடன் நீண்டகாலம் பழகியவர்; எனக்கும் பேராசிரியர் சதாசிவம் அவர்களுக்கும் இடையிலான தொடர்புகளையும் நன்கறிந்தவர். அதனால் அவர் கொழும்பில் இருந்து அஞ்சல் வழியாகவும், பின்னர் தொலைபேசி மூலமாகவும் என்னுடன் **2000ஆம் ஆண்டிலே** தொடர்பு கொண்டு, "பேராசிரியர் ஆ. சதாசிவம் பற்றி ஒரு நூலை எழுதித்தாருங்கள் தமிழ்ச் சங்கம் மூலம் நாங்கள் வெளியிடுவோம்" என்ற வேண்டுதலை என்னிடம் வைத்தார். அவரது வேண்டுகோளின் படியே அப்பணியில் ஈடுபட்டு வந்தேன். அவர் அமரரானதும் அப்பணி தொடர்ந்து நகரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், அப்பணி தொடர்வதற்குரிய வாய்ப்பு மீண்டும் திருமதி திருஞானேஸ்வரி சதாசிவம் மூலம் **2018இற்** கிடைத்தது. பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் 1968இல் பதிப்பித்து வெளியிட்ட "ஞானப்பள்ளு" என்ற நூலை இரண்டாம் பதிப்பாக வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்ட திருமதி சதாசிவம் அவர்கள், அந்நூலுக்கு **வெளியீட்டுரை** எழுதுமாறு உரிமையோடு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, வெளியீட்டுரை எழுதினேன். அப்போதுதான் அவர் என்னை பேராசிரியரின் வாழ்க்கை வரலாற்றையும், அவரது நூல்கள் பற்றியும் எழுதும்படி கேட்டார்கள். அவரது விருப்பத்திற்கு இசைவாகவும், நான் ஏற்கனவே தொடங்கிய பணியை முற்றுப்பெறச் செய்வதற்காகவும் இந்நூலை எழுதி 2021இல் நிறைவுசெய்துள்ளேன். இந்நூலை எழுதுவதற்கு வேண்டிய தகவல்களையும் நூல்களையும் திருமதி திருஞானேஸ்வரி சதாசிவம் அவர்கள் தந்துதவினார் என்பதையும் ஈண்டு நன்றியுடன் பதிவுசெய்கிறேன்.

பேராசிரியர் சதாசிவம் அவர்கள் ஓய்வின்றி இயங்கிக் கொண்டே இருப்பார். மொழி ஆராய்ச்சி, இலக்கிய ஈடுபாடு, கற்பித்தல், எழுத்துப்பணி, மன்றங்கள் சார்ந்த சமயப்பணி, சமூகப்பணி என அமைந்த அவரது வாழ்க்கையும் பணிகளும் மாணவருக்கு முன்மாதிரியாக அமையும் என்பதும் எனது நம்பிக்கையும் இந்நூற் பயனுமாகும்.

தமிழகப் பல்கலைக்கழகப் தமிழ்ப் பேராசிரியர் ஒருவரிடமிருந்து இந்நூலுக்கு அணிந்துரை பெறுதல் பொருத்தமாக அமையும் என்றெண்ணியபோது மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியரும், திருக்குறள் இருக்கைப் பொறுப்பாளருமாகிய எனது அன்புக்குரிய பேராசிரியர் பொ. சத்தியமூர்த்தி அவர்களின் நினைவே முதலில் வந்தது. சுவாமி விபுலாநந்தர் தமிழ் ஆய்வு மையம் கனடா, மாதந்தோறும் நடத்திவருகின்ற திருக்குறள் ஆய்வரங்கத்துடன் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து பல ஆய்வரங்குகளை நடத்தி வருகின்றது. அவ்வகையில் அவர் எழுதியுள்ள அணிந்துரை இந்நூலுக்கு அணிசேர்க்கின்றது. அவருக்கும் எனது நன்றி உரித்தாகுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலுக்குப் பேராசிரியர் சதாசிவம் அவர்களிடம் கொழும்புப் பல்கலைகழகத்திலே தமிழ்ப்பாடம் கற்ற மாணவர் ஒருவரிடம் நினைவுரை ஒன்று பெற்று, இந்நூலிற் சேர்ப்பது பொருத்தமாகும் என எண்ணியபோது, கொழும்பிற் பேராசிரியரிடம் BA தமிழ் படித்தவரும், கனடாவில் எனது மாணவராகத் "தென்னாசிய நுண்கலை கற்கை மையம் அண்ணாமலை கனடாவிலே தமிழ் முதுமாணி கற்கை நெறியில் பட்டம் பெற்று, அதே கல்வி மையத்திலே தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றுபவரான திரு. கணபதிப்பிள்ளை குமரகுரு தகுதி வாய்ந்தவராக அமைந்தார். அவர் வழங்கியுள்ள "**தன் நினைவிலிருந்து எழுதுவது**" என்ற சிறு கட்டுரையும் இந்நூலுக்கு மேலும் அணி சேர்க்கிறது.

இதன் தட்டச்சுப் பிரதியை நூல் வடிவமாக்கியும், நூலின் அட்டைப் படத்தை உருவாக்கியும் உதவிய திருமதி சிவநயனி முகுந்தன் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி உரித்தாகுக. இந்நூலாக்கம் பெறுவதற்கு எனக்குத் துணையாகவும், இந்நூலை அழகாகத் தட்டச்சு செய்தும், நூல் முழுவதையும் நன்கு வாசித்து, சொற்பிழை, எழுத்துப் பிழைகளைத் திருத்தியும் உதவியதன் மூலம், பேராசிரியர் சதாசிவம் அவர்களின் மாணவியும், எனது மனைவியுமாகிய விமலா பாலசுந்தரம் அவர்களும் தனது நன்றியைப் பேராசிரியர் அவர்களுக்குச் செலுத்தியுள்ளார்.

எனது நூல்களைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவும் A Fast Print உரிமையாளர் கோடீஸ்வரன் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

பேராசிரியர். பாலசுந்தரம் இளையதம்பி
தமிழ்த்துறைத் தலைவர்
தென்னாசிய நுண்கலை கற்கை மையம் -
அண்ணாமலை கனடா
1240, Ellesmere Road, #101,
Scarborough, ON. Canada.
05.09.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் - 1

# பேராசிரியர் சதாசிவம் அவர்களின் கல்விப் புலம்

பேராசிரியர் சதாசிவம் அவர்கள் யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப் பிரிவில் சைவம் செழித்தோங்கியிருந்த தமிழ்க் கிராமமான அராலி என்னும் ஊரில் ஆறுமுகம் பார்வதி இணையருக்கு ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு பெப்ருவரி மாதம் பதினைந்தாம் திகதி மகனாகப் பிறந்தார். பேராசிரியர் சதாசிவம் அவர்கள் பிறந்த ஊரும் கல்வி கற்ற சூழலும் அவர் பின்னாளிற் பெரும் கல்விமானாகத் திகழ்வதற்குக் களமாக அமைந்தன. ஆரம்பக் கல்வியை அராலி தெற்கில் அமைந்த சரஸ்வதி வித்தியாலயத்தில் 1930 -1941 வரை கற்றார். அதன் பின்னர் அராலி இந்து - ஆங்கில பாடசாலையில் இடைநிலைக் கல்வி கற்று, 1941இல் **தமிழ்** - சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் முதற்பிரிவில் சித்தியடைந்தார். தொடர்ந்து, தம் ஊருக்கு அயற்பதியான வட்டுக்கோட்டையில் அமெரிக்க மிசனரிமாரால் நடத்தப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியிற் சேர்ந்து 1942 - 1945 காலப்பகுதியில் கல்வி பயின்றார். 1945ஆம் ஆண்டில் **ஆங்கில** - சிரேஷ்ட தராதரப் பரீட்சையிலும் முதற் பிரிவில் சித்தியடைந்தார். அக்கல்லூரியில் ஆங்கிலம், இலத்தீன், வடமொழி ஆகிய மொழிகளையும் கற்றார்.

அவர் பிறந்த ஊர் அவருக்குத் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு, பாரம்பரிய மரபுகள் என்பனவற்றின் மீதான ஈடுபாட்டையும் பற்றுதலையும் அளித்தன. ஆரம்பக் கல்லூரிப் படிப்புக் காலத்திலே தமிழ் இலக்கியம், இலக்கணம் என்பவற்றைக் கற்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். தமிழில் பாண்டித்தியம் அடைய வேண்டும் என்ற பெரு நோக்கோடு 1943இல் பிரவேச பண்டித தேர்விலும் சித்தியடைந்தார்.

பின்னர் கொழும்பிலுள்ள ஆனந்தாக் கல்லூரியில் 1945 முதல் 1947 வரை உயர் கல்வியை மேற்கொண்டார். அத்துடன் அங்கு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தித்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடத்துதித்த பலமொழிகளைக் கற்கும் ஆர்வத்தால் சிங்களம், பாளி ஆகிய மொழிகளையும் கற்றார். 1947இல் கல்விப் பொதுத் தராதர உயர்தரத் தேர்வில் சித்தியும் அடைந்தார். அதே ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்வுக்குத் தோற்றி, அதில் முதலாம் பிரிவிற் சித்தியுமடைந்தார்.

1948இல் இலங்கைப் பல்கலைக்கழக அனுமதி பெற்றுக்கொண்ட சதாசிவம் அவர்கள் பேராதனையில் இயங்கிய இலங்கைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து, பட்டப் படிப்பைத் தொடர்ந்தார். பன்மொழி அறிவு பெற்றிருந்த சதாசிவம் அவர்கள் மொழித்துறையில் தனது முழு ஈடுபாட்டையும் காட்டித் தமிழ் சிறப்புக்கலை பயின்றார். அப்போது அவருக்குப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி. செல்வநாயகம், முனைவர் சு. வித்தியானந்தன், ஜனாப் முகம்மது உவைஸ் ஆகியோர் விரிவுரையாளர்களாக இருந்தனர். இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்றவர்களுள் முதல் வகுப்பிலே முதன்முறையாகச் சித்தியடைந்த சிறப்பும் சதாசிவம் அவர்களுக்கு உரியதாகும். இறுதித் தேர்விலே முதற் பிரிவில் சித்தியடைந்த பேராசிரிருக்குப் பேராதனைப் பல்கலைக்கழகம் உடனடியாகவே 01.11.1952இல் உதவி விரிவுரையாளர் பதவி வழங்கிற்று. கற்றலில் ஆர்வம் கொண்டிருந்த சதாசிவம் அவர்கள் தொடர்ந்து முதுகலை மானிக் கல்வியை மேற்கொண்டு 1954இல் முதுகலைமானிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

சதாசிவம் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திற் பயின்று பட்டம் பெற்ற செல்வி திருஞானேஸ்வரி செல்லப்பா அவர்களைக் காதல் திருமணம் செய்து தனது வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார். அவர்களது இல்லற வாழ்க்கையில் மதியழகன், குந்தவை, பூங்கோதை, அன்பழகன் என்ற பிள்ளைச் செல்வங்களைப் பெற்று இன்பமாக வாழ்க்கையை நடத்திவந்தார். தனது பிள்ளைகளுக்கு அழகிய தமிழ்ப் பெயர்கள் வைத்து ஏனையோருக்கும் முன்மாதிரியாகச் செயற்பட்டமையும் ஈண்டு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுநிலை விரிவுரையாளராகப் பதவி உயர்த்தப்பட்டு, 1965 வரை சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றினார். பல மொழிகளை இளவயதிற் கற்றுக் கொண்ட சதாசிவம் அவர்கள் மொழித்துறையிலே தனது மேற்படிப்பைத் தொடர்வதற்குத் தயாராக மேலும் சிங்களம், பாளி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஜேர்மன் முதலான மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுக் கொண்டார். மொழியார்வத்தில் ஈடுபட்டிருந்த சதாசிவம் அவர்களுக்கு மொழித்துறையில் முனைவர் பட்டம் பெறுவதற்குப் பேராதனைப் பல்கலைக்கழகம் புலமைப்பரிசில் வழங்கியது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உயர் பட்டப் படிப்புக்குரிய புலமைப் பரிசில் கிடைக்கப் பெற்று 1954இல் அங்கு சென்றார். பேராசிரியர் தோமாஸ் பரோ (Thomas Burrow) அவர்களிடம் மொழியியல் பற்றியும், மொழியியல் ஆய்வு முறைகள் பற்றியும் துறைபோகக் கற்றுக்கொண்டார். நான் அறிந்த வரையிற் பழைய தலைமுறைத் தமிழ்ப் பேராசிரியர்களில், இவ்வாறு மொழியியலை முதன்முதலாக ஒரு பாடமாகக் கற்றுத், தனது ஆய்வைச் செம்மைப் படுத்தியவர் இவரே ஆவார். மொழியியல் ஆய்வுத்துறையில் உலகப் புகழ் பெற்று விளங்கிய பேராசிரியர் தோமாஸ் பரோ அவர்களின் மேற்பார்வையின்கீழ் மொழி ஆராய்ச்சி செய்யும் வாய்ப்புக் கிடைத்தமை அவர் பெற்ற பெரும் பேறாகும். அவரிடம் மொழித்துறையில் மேற்கொள்ளத்தக்க ஆய்வுமுறைகள், ஆய்வு ஏடுகள் எவ்வாறு நுட்பமாக எழுதப்பட வேண்டும் என்பனவற்றையும் முறையாக முதலிற் கற்றுக் கொண்டார்.

இவருடைய ஆய்வு மேற்பார்வையாளர் பேராசிரியர் தோமாஸ் பரோ பற்றியும் குறிப்பிடுதல் பொருத்தமாகும். திராவிட மொழிகளில் முதன் முதலாக ஒப்பியலாய்வு செய்த றொபேரட் கால்ட்வெல் (Robert Caldwell) Comparative Studies in Dravidian Languages" என்ற நூலை 1856இல் வெளியிட்டிருந்தார். அவருக்குப் பின்னர் திராவிட மொழிகளின் அடிச்சொற்கள் பற்றி ஆராய்ந்து, "Dravidian Etymological Dictionary" என்ற ஓர் அரிய நூலை எழுதியவர்கள் பேராசிரியர் தோமஸ் பரோவும் ஏமானோவும் ஆவர். அத்தகைய பேர்பெற்ற ஒரு மொழியியல் பேராசிரியரிடம் **"தமிழ்மொழியின் வினைச்சொல் அடிகள்"** என்ற பொருள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி ஆராய்ச்சி செய்து 1956இல் D. Phil. பட்டம் பெற்றமையைப் பெரிய அதிர்ஷ்டம் என்று அடிக்கடி பேராசிரியர் கூறுவதை அவதானித்துள்ளேன். "தாரமும் குருவும் தலை எழுத்து" என்பதற்கமைய அவருக்கு இரண்டும் கிடைத்தன. பேராசிரியர் சதாசிவம் அவர்கள் மொழியியல் துறையில் D. Phil. பட்டம் பெற்றமை பற்றிப் பேராதனைப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறைப் பேராசிரியர் அஸ்லி கல்பகே அவர்கள் வருமாறு குறிப்பிடுள்ளமை நோக்கத்தக்கது:

> "I vividly remember the notice taken in campus circles of his return with a D.Phil. from Oxford in 1957. He was perhaps the first D.Phil. in his field in this country and certainly the first to join our faculty. .... His massive research and record of publication will be an enduring monument to this great scholar. I look forward to the day when a bilingual poet might enable his anthology of Sri Lankan Tamil Poetry to be enjoyed outside the world of Tamil letters. Scholars in many parts of the world will know that his untimely death is a great loss to Sumerian studies." (Professor of English, Ashley Halpe, University of Peradeniya. Sunday Observer, 31.07.1988)

மொழியியல் துறையில் 1956இல் கலாநிதிப் பட்டம் பெற்று மீண்ட சதாசிவம் அவர்கள் தமது மாணவர்களுக்கு மொழியியல்துறையிற் சிறந்த விரிவுரையாளராகத் திகழ்ந்தார். பேராசிரியர் சதாசிவம் அவர்கள் மொழியியல் துறையில் ஆற்றிய ஆய்வுப்பணிகள், அவற்றின் மூலம் அவர் சாதித்த விடயங்கள் என்பவை தனித்து ஆராயப்பட வேண்டியவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் - 2

# பேராசிரியரின் மொழியியல் ஆய்வுகளும் ஆய்வு நூல்களும்

## பன்மொழி அறிவு:

பேராசிரியர் சதாசிவம் அவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு முன்பாகவே தமிழ் மொழியில் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்வில் சித்தி பெற்றிருந்ததோடு, உயர்கல்லூரியிற் படிக்குங் காலங்களில் ஆங்கிலம், வடமொழி, சிங்களம் முதலான பல மொழிகளையும் கற்றிருந்தார். அவரது உள்ளம் பல மொழிகள் பற்றி அறிய வேண்டும், மொழிகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகள், தொடர்புகள் என்பன பற்றி அறிய வேண்டும் என்ற உணர்வு கொண்டிருந்தது. மொழிகளின் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றிய சிந்தனைகள் அவரிடம் ஆழப் பதிந்திருந்தன. அவரது உயர்கல்வியும், பல்கலைக்கழகங்களில் அவர் மொழியியல் பற்றி ஆராய்ந்த விடயங்களும் அவரது வாழ்வியலாகவே அமைந்தன. பேராசிரியர் சதாசிவம் தனது இறுதிக் காலம்வரை மொழி ஆராய்ச்சியிலேயே தன்னை அர்ப்பணித்திருந்தமையை என்னால் நேரே பார்த்து அறியக் கூடியதாகவும் இருந்தது. அதன் விளைவாகச் சுமேரியமொழி பற்றிய ஆய்வுகள், அவற்றின்வழி தமிழ்மொழியின் தொன்மை, தோற்றம் என்பன பற்றிய ஆய்வு முடிபுகளைக் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் வெளியிடலானார். அவர் சுமேரிய மொழியையும் திராவிட மொழிகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து வெளிப்படுத்திய உண்மைகளே அவரை மொழியியல்துறையில் உலக ஆய்வரங்கில் அடையாளப் படுத்தின எனலாம்.

பேராசிரியரின் இளமைக் காலத்திலே தமிழகத்திலே திராவிட இயக்கம், தனித்தமிழ் இயக்கம் முதலியவை எழுச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. அந்நிலையில், தமிழின் தனித்துவத்தையும் தொன்மையையும் அறிவியல் அடிப்படையிலும், சான்றுகளுடனும் நிறுவவேண்டிய கடமை பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கு இருந்தது. அத்தகைய ஆய்வுச் சூழலிற் சாசனவியலை அடியொற்றியதாகத் தமிழ்மொழியின் தனித்துவங்களைப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை தேடினார். பண்பாட்டியலை அடிப்படையாகக் கொண்டு தமிழரின் தனித்துவங்களைப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நிறுவினார். இலக்கிய வரலாற்றை அடியொற்றிய தனித்துவத்தைச் பேராசிரியர் வி. செல்வநாயகம் கண்டறிந்தார். மொழியியல் அடிப்படையிலே தமிழ்மொழியின் தொன்மை, தொடர்ச்சி, வளர்ச்சி என்பன பற்றிய உண்மைகளைப் பேராசிரியர் ஆ. சதாசிவம் நிறுவினார் எனப் பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள் குறிப்பிடுவர்.

சதாசிவம் அவர்கள் மொழியியல் ஆய்வுத்துறையில் உலகு அறிந்த மொழியியல் அறிஞராவார். அவரது மொழியியல் ஆய்வு சுமேரியமொழி, திராவிட மொழிகள் என்பனவற்றில் முனைப்புப் பெற்றிருந்தது. சுமேரியர் என்போர் யாவர்? சுமேரிய நாடு யாது? என்பன பற்றிய வினாக்களுக்கு ஆய்வாளரிடையே கருத்து வேறுபாடுகள் நிலவின. மேலும் மொசப்பத்தேமியா, பாபிலோனிய நாகரிகத்தளங்களே சுமேரியா என்ற கருத்தே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. காலப்போக்கில் அல்ஜீரியா, ஈராக் என்ற பெயர்களை அப்பிரதேசம் பெற்றுக் கொள்வதாயிற்று. அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் பேசிய மொழியே சுமேரியமொழி. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகிய சுவாமி விபுலாநந்தர் 1922களில் 'செந்தமிழ்' ஆய்விதழ்களில் **'மேற்றிசைச் செல்வம்'** (1995:4-45) என்ற தொடரில் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளில் சுமேரியருக்கும் தமிழ் மக்களுக்குமிடையே கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக இருந்த தொடர்புகள் பற்றி எழுதியிருந்தார். தமிழரும் சுமேரியரும் இனக்கலப்பும் மொழிக்கலப்புங் கொண்டு வாழ்ந்தமை பற்றிய தகவல்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலாநந்தர் பல்வேறு மேனாட்டறிஞர் கூறிய சான்றுகளுடன் ஆராய்ந்து எழுதினார். இத்தகைய ஆய்வுகளும் பேராசிரியர் சதாசிவம் அவர்களைச் சுமேரியமொழி ஆய்வில் ஈடுபடுத்தியிருக்கலாம்.

பேராசிரியர் சதாசிவம் எழுதிய "குமரித்தமிழ் அல்லது சுமர்மொழி" என்ற கட்டுரை கூறும் விடயங்கள் நோக்கத்தக்கன. ஒப்பெர்ட் (Oppert) என்ற அகழ்வாராய்ச்சியாளர் முதன் முதலாக 1869இல் **"சுமர்"** என்னும் சொல்லை எடுத்தாளும்வரை சுமார் 4000 ஆண்டுகளுக்கு மேலாக சுமேரிய நாகரிகம் மண்ணுக்குள் மறைந்து கிடந்தது. அவரே "சுமர்" என்ற சொல்லை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவராவார். அவரைத் தொடர்ந்து இலண்டன் அரும்பொருளகப் பொறுப்பாளர் ஹோல் (R.H.Hall) என்பவர் எழுதிய ஆய்வு நூலிற் அகழ்வாராய்ச்சியின் மூலம் மண்ணடியிற் புதையுண்டு கிடந்த சுமேரிய நகரங்களை வெளிப்படுத்தினார். அவர் எழுதிய Ancient History of the Near East என்ற நூலிற் கூறப்படும் கருத்தைச் சுவாமி விபுலாநந்தர் வருமாறு எடுத்துக்காட்டுகிறார்:

> "சுமேரியப் பண்பாட்டினை ஆராயுமிடத்து அது வெளிநாடுகளிலிருந்து மெசப்பத்தேமியாவுக்குக் கொண்டு வரப்பட்ட ஒன்றாகவே எமக்குத் தோன்றுகிறது. சுமேரியர் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தகால வரலாற்றுச் சான்றுகள் எதுவும் பாபிலோனியாவில் அகப்படவில்லை. நாம் முதன் முதலில் கி. மு. 4000 ஆம் ஆண்டு அளவில் வாழ்ந்தவர்களாக அவர்களைப் பற்றிச் சிந்திக்கும்போது அவர்கள் சிறந்த அரசியலை பெரிய நகரங்களில் அமைத்து வாழ்ந்தவர்களாகவும், உலோகங்களின் உபயோகங்களை நன்கு அறிந்த உயர்நாகரிக மக்களாகவும் காட்சி தருகிறார்கள். தாம் குடியேறிய ஆற்றுப்படுக்கையில் வாழ்ந்து கொண்டிருந்த நாகரிக மற்ற குடிமக்கள்மீது தம் உயரிய பண்பாட்டைப் பரப்பினர். இவர்கள் பிற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டவராய், பண்பாடு வளர்ச்சி பெற்ற நிலையினரான காலத்திலேயே பாபிலோனியாவிற் குடியேறியவராகவும் கொள்ளத்தகும்" என்ற கருத்தை 1930களில் சுவாமி விபுலாநந்தர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், "சுமேரியரது உடல் தோற்றமும் மொழியும் அவர்களின் அயல் நாட்டவர்களான செமித்திக் மக்களினின்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றன என்றும், இந்தியாவிலே தெக்கான் பகுதியின் தென்திசையில் இன்றும் திராவிட மொழிகளைப் பேசி வாழ்ந்துவரும் மக்களினத்தவருடன் சுமேரியரை அடையாளம் காணலாம் எனவும், இவர்கள் கடல் வழியாகப் பண்டைக் காலத்தில் பாபிலோனியாவை அடைந்திருக்கலாம்" எனவும் ஆய்வாளர் ஆர். ஏச். ஹோல் கூறுவர். **பேராசிரியர் சதாசிவம் அவர்கள் இக்கருத்துக்களை உறுதிப்படுத்திக் கொண்டு, சுமேரியர் திராவிடர் வழிவந்தோர் என்றும், சுமேரிய மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள தொடர்பானது, அவர்களது பூர்வீகத்தையும், அவர்களது பண்பாட்டு வரலாற்றையும் உறுதிப்படுத்துகின்றது என்றும் தனது ஆய்வுகளிலே நிறுவினார்.**

இக்கருத்துக்களை முதலில் ஆதாரமாகக் கொண்டு, பேராசிரியர் சதாசிவம் தமது சுமேரிய மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டு, சுமேரியருக்கும் திராவிடருக்கும் குறிப்பாகத் தமிழருக்கும் நெருங்கிய தொடர்புள்ளதை நிறுவியிருப்பது அவரது ஆய்வுப் புலமையை வெளிப்படுத்துவதாகும்.

பேராசிரியர் சதாசிவம், சுமேரியமொழி ஆய்வளரான ஸ்தீபன் லாங்டன் அவர்களின் சுமேரியமொழி ஒரு ஒட்டுமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்ற கருத்தை ஆதாரமாகக்கொண்டு, அதனைத் தனது ஆய்வுகளிலும் சான்றுகளுடன் நிறுவவே, உலக மொழியியலாளரும் அதனை ஏற்றுக்கொண்டனர். உலகில் ஒட்டுமொழிக் குடும்பங்களாகக் கங்கேரிய, பின்லாந்து மொழிகளைக்கொண்ட சித்திய மொழிக்குடும்பமும், தமிழ், தெலுங்கு முதலான 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளைக் கொண்ட திராவிடமொழிக் குடும்பமும் அமைந்துள்ளன. ஆனால் சித்திய மொழிக்கும் சுமேரிய மொழிக்கும் தொடர்பில்லை எனத் திராவிட மொழி ஆய்வில் வல்லுநரான கால்டுவெல் அறிஞர் (1856) தெளிவாகக் கூறியுள்ளதைப் பேராசிரியர் சதாசிவம் எடுத்துரைத்துள்ளார். பேராசிரியர் சதாசிவம் அவர்கள் தனது சுமேரியமொழி ஆய்வு எவ்வாறு தொடங்கியது என்பதை வருமாறு எழுதுகிறார்:

> "1965ஆம் ஆண்டில் காத்திராப் பிரகாரமாக யாம் இவ்வாராய்ச்சியுட் புக நேர்ந்தது. சுமர்மொழிச் சொற்களையும் வடிவங்களையும் படிக்கப் படிக்கச் சங்கத் தமிழ் அகராதியையே படிக்கின்றேன் என எண்ணுவதுண்டு. சுமர்மொழி ஒரு திராவிடமொழி என்னும் நூலில் 500 எடுத்துக்காட்டு ஒப்புவமைகளை விளக்கியுள்ளேன்" என்பர்.(A. Sathasivam: 1965)

மேலும், சுமர் மொழிச் சொற்களைப் படிப்போர் அவை பழந்தமிழ்ச் சொற்கள் என்பதை உணர்வர். சுமரி நாட்டவருக்கும் பண்டைத் தமிழருக்கும் தொடர்பைக் காட்ட குமரி என்ற ஒரு சொல்லே போதும் என்று கூறி அதற்குரிய விளக்கங்களும் தருகிறார். கி.மு. 4100 ஆண்டு வரையில் தம் நாட்டினுட் புகுந்த குமரி நாட்டுத் தமிழர் தம் புதிய நாட்டுக்கும் "குமரி" என்றே பெயரிட்டனர். தம் தலைநகரை "ஊர்" என்றும் அழைத்தனர். 'ஊர்' பாரசிகக் குடாவிலுள்ள ஒரு பெரிய நகரமாகும். பபிலோனிய நாகரிகம் வீழ்ச்சி அடைந்த பின்னர் அதன் மறைந்த பண்பாட்டினின்று கிளைத்து எழுந்தவையே கிரேக்க, உரோம நாகரிகங்கள் என்று கூறும் வரலாற்றாசிரியர்களின் கருத்து திராவிட சுமேரியத் தொடர்பை நிறுவுவதாகவே அமைகிறது. ஐரோப்பியர் துயில் கொண்ட காலத்தில் உலக மக்களுக்கு உலகப் பண்பாட்டை நல்கியோர் குமரித் தமிழரே என்ற பண்பாட்டு வரலாற்று உண்மைகளை மொழியியல் ஆய்வுகளின் மூலமும் பிற பண்பாட்டு ஆய்வாளர்களின் கருத்துக்களின் மூலமும் எடுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைத்து, தமிழரதும் தமிழ் மொழியினதும் தொன்மையை நிறுவியுள்ள பேராசிரியர் சதாசிவம் அவர்களின் ஆய்வுக் கருத்தானது, தமிழ்மொழியும் தமிழ்மக்கள் வழக்காறும் வரலாற்றில் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

**பேராசிரியர் பரோவும் இமனோவும் இணைந்து பதிப்பித்த திராவிட மொழிகளின் அடிச் சொல்லகராதி என்ற நூல் திராவிடமொழிகளின் ஆய்வுக்குரிய உலகப் புகழ்பெற்றதோர் அரிய நூலாகும். அந்நூலின் முன்னுரையில் அத்தகைய பேரகராதியைத் தயாரிப்பதற்கு உதவியாக அமைந்த ஆய்வுச் சான்றுகளில் மிக முக்கியமானது பேராசிரியர் ஆ. சதாசிவம் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் D.Phil. பட்டம் பெறுவதற்காகச் சமர்ப்பித்த ஆய்வேடு என்ற செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது.** அச்செய்தியுடன் அமைந்த அவ்வகராதி உலகிலுள்ள பல்கலைக்கழகங்கள், மற்றும் மொழியியல் நிறுவனங்கள் முதலிய அனைத்து அறிவியற் புலங்களிலும் இடம்பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறாகப் பேராசிரியரது பெயரும், அவரது மொழியியல் ஆய்வு ஏடு பற்றிய செய்திகளும் உலக மொழியியல் அரங்கில் பேசப்படுகின்றன என்ற செய்தியும் குறிப்பிடத்தக்கதாகும். திராவிட மொழிகள் பற்றிய ஆராய்ச்சி நடைபெறும் இடங்களிலெல்லாம் நிச்சயம் பேராசிரியர் சதாசிவம் அவர்களின் பெயரும் உச்சரிக்கப்படும் பேற்றினை அவர் பெற்றுள்ளார். (T Burrow & M. B. Emamaneau-1960: Introduction, p. xxiii)

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வெளியிட்ட 'Proceedings of the Ninth International Congress of Linguistics' என்ற ஆய்வுத் தொகுதியிற் பேராசிரியர் அவர்கள் எழுதிய "The current status of Dravidian Historical and Comparative Studies" (Cambridge, Mass.1962: pp.571-573) என்ற ஆய்வுக்கட்டுரை மொழியியலாளரின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்ததன் பயனாக அவ்வாய்வினைத் தொடரும் வகையிற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்து அவருக்குப் புலமைப் பரிசில்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலங்களில் சிங்களமொழித்துறைப் பேராசிரியர் ஆரியபாலா அவர்களின் உற்ற நண்பராகக் காணப்பட்டார். பேராசிரியர் ஆரியபாலா கலைப்பீடாதிபதியாகவும் பின்னாளிற் துணைவேந்தராகவும் பணியாற்றியவர். அதுபோன்றே சிங்கள மொழிப் பேராசிரியர் ஜி. டி. விஜயவர்த்தனா அவர்களுடனும் சதாசிவம் அவர்கள் தான் மேற்கொண்டிருந்த சுமேரிய ஆய்வு பற்றி அடிக்கடி கலந்துரையாடுவதை நான் அவதானித்து வந்திருக்கின்றேன். பேராசிரியர் விஜயவர்த்தனா தம் இரங்கல் உரையில் பேராசிரியரைப் பற்றிக் குறிப்பிட்ட செய்தியும் சதாசிவம் அவர்களின் சுமேரியமொழி ஆய்வு ஈடுபாட்டை வெளிப்படுத்துவாதாகும்:

"Satha was a dedicated academic (at a time when this particular breed is getting rare and rare in this country) and had academic pursuits uppermost in his mind, whenever he met us, he was full of excitement about the research he was involved in or the paper he was writing; and he spoke of them with such enthusiasm that no one could help being interested. His main preoccupation was with his research on the link between Sumerian and Dravidian; and a considerable amount of his time and energy over the past several years were expended on completing a Sumerian Dravidian Dictionary. This research which was breaking new ground in the history of Dravidian languages particularly Tamil was enthusiastically received by linguists the world over, and Satha was invited to many international forums of linguists to present his views on the subject. It was a great pity and a severe loses to posterity that he could not live to finish this work and see it through in print".

(பேராசிரியர் நினைவு மலர்:1988:பக்.56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமேரிய மொழிக்கும் - திராவிடமொழிகளுக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்ந்து தமிழ்மொழியின் தொன்மையை நிறுவுவதே பேராசிரியரின் வாழ்நாள் ஆய்வின் குறிக்கோளாக அமைந்திருந்தது. கால் நூற்றாண்டு காலமாக அவர் சுமேரிய மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். சுமேரியமொழி கி. மு. 4000 ஆண்டுப் பழமையுடையது என்பதை அம்மொழி அறிஞர்கள் நிறுவி யுள்ளார்கள். மொசப்படேமியா, பபிலோன், அல்ஜீரியா, ஈராக் என்று பல்வேறு பெயர்களில் வெவ்வேறு காலங்களில் வழங்கிய நாடு சுமேரியமொழி வழங்கிய நாடாக ஒரு காலத்தில் இருந்தது. சுமேரியர்கள் யார் என்பதிலே பலத்த கருத்து வேறுபாடு காணப்படுவதாயிற்று. யூதர்களின் முன்னோர்களே சுமேரியர் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சுமேரியமொழி ஆதித்தமிழ் அல்லது திராவிடம் என்று நிரூபித்துத் தமிழர்களின் தொல்பண்பாட்டு வரலாற்றுச் சிறப்பை உலகம் அறியச்செய்ய வேண்டும் என்பதே பேராசிரியரின் உயிர்மூச்சாக இருந்தது எனப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் தனது இரங்கல் உரையிற் குறிப்பிட்டிருந்தமையும் நோக்கத்தக்கது.(1988)

சுமேரியமொழியிலே திராவிடமொழிகளின் செல்வாக்கு, மற்றும் இரு மொழிகளுக்கும் இடையிலான நெருங்கிய ஒற்றுமைகள் என்பன எவ்வாறுள்ளன என்பதைச் சொல், பொருள் ஆகியவற்றின் அடிப்படையிற் பேராசிரியர் தம் நூல்களிலும், ஆய்வுக் கட்டுரைகளிலும் நிரூபித்துள்ளார். தமிழ்மொழி, தமிழினம் ஆகியவற்றின் தொன்மையைப் பேராசிரியர் இந்த ஆய்வுகளின் அடிப்படையில் நன்கு நிறுவியுள்ளமை அவரது வாழ்வியற் சாதனையாகும். "இலங்கைத் தமிழ்க் கிளைமொழியின் அகராதியைத் தயாரிப்பதில் அவர் சில ஆண்டுகள் ஈடுபட்டிருந்தார். அத்துடன் அவரது வாழ்க்கைப் பணி என்று கூறத்தக்கது அவருடைய சுமேரிய மொழி ஆராய்ச்சியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் உலகின் பல்வேறு மொழியியல் ஆய்வுக் கழகங்களின் உறுப்பினராக இருந்ததோடு, அக்கழகங்கள் நடத்திய மொழியியல் மாநாடுகளிற் பங்குபற்றி ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தும் வந்துள்ளார். குறிப்பாக All India Oriental society, Dravidian Linguistic Association, (DLA), The Linguistic Society of India, Berkeley Linguistic Society ஆகிய கழகங்களைக் குறிப்பிடலாம். மொழிகளின் அடிச்சொல் ஆய்வினைக் குறிப்பாகத் தமிழ்ச் சொற்களின் அடிச்சொற்களைக் கண்டறிந்து, அவற்றின் மூலம் தமிழ் மொழியின் தொன்மையை 1856இல் நிறுவியவர் றொபேர்ட் கால்டுவெல் என்பதைத் திராவிடமொழிகளில் ஈடுபாடு உள்ளவர்கள் நன்கறிவர். அதேவழியிற் பேராசிரியரின் ஆய்வுகளிற் பெரும்பாலானவை தமிழ்மொழியின் தொன்மையை நிறுவுவனவாகவே அமைந்தன. சங்கத் தமிழ் அகப்புற இலக்கியங்களின் அடிச் சொற்களைத் தொகுத்து தனது மொழியியல் ஆய்வுகளுக்குப் பெரிதும் அவர் பயன்படுத்தினார். பேராசிரியரின் மொழியியல் நூல்களிற் காணப்படும் புலமைத்திறன்கள் பற்றித் தனித்தனியே இங்கு ஆராயப் படுகின்றது.

## (நூல் - 1) Sumerian - A Dravidian Language – 1965

பேராசிரியர் சதாசிவம் அவர்கள் தனது மொழியியல் அறிவினை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளும் வகையில் இரண்டாவது புலமைப்பரிசில் அவரைத் தேடிவந்தது. Fulbright Research Scholarship in Linguistic என்ற புலமைப்பரிசில் கிடைக்கப்பெற்று, அவர் அமெரிக்காவின் பென்சில்வேனியாப் பல்கலைக்கழக மொழியியல் துறையில் ஆய்வு செய்வதற்காகச் சென்றார். பேராசிரியர் சதாசிவம் அவர்களுக்கு இப்பல்கலைக்கழகத்திற் கிடைத்த சுமர்மொழிக் கல்வெட்டுக்களும், அவைபற்றிய ஆய்வு நூல்களும் அவரது ஆய்வுக்குப் பெருந் துணையாயின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் பொதுவான இலக்கணம் எம்மொழியில் உள்ளது என்கின்ற உண்மையைத் தீர்மானிக்கும் அடிப்படையில் ஐரோப்பாவில் மொழிரீதியான அளவீடுகள் 16ஆம் நூற்றாண்டில் நடைபெற்றபோது, நவீன மொழியியல் ஆய்வு முறையான சிந்தனை முதன் முதலாகத் தொடங்கிற்று என்பர். ஜேர்மன் நாட்டு மொழியியல் அறிஞர் ஜகோப் கிறீம் (Jacob Grim - 1785-1863), டெனிஷ் மொழியியலாளர் இராஸ்முஷ் கிறிஸ்ரியன் றாஷ்க் (Earasmus Christian Rask-1787-1832) ஆகிய இருவரும் மொழிகளை முறைப்படி ஒப்பிட்டாய்வு செய்யும் ஒழுங்கு முறையை அறிமுகப்படுத்தி, பொருள் தொடர்புடைய பிறமொழிச் சொற்களிடையே ஒற்றுமைகள் இருப்பதை அறிந்து கொண்டனர். இந்த ஆய்வு முறைக்கு ஜேர்மனிய மொழியியலறிஞர் பிறிட்றிச் செலகல் (Friedrich Schlegel- 1772-1829) **Comparative Grammar** என்ற பெயரை 1808இல் உருவாக்கி நிலைபெறச் செய்தார். இத்தொடக்க கால ஒப்பிலக்கண ஆய்வின் மூலம் மொழிகளுக்கிடையே மரபுவழியான தொடர்பு (descendant) இருப்பது அறியப்பட்டது. (Marcel Danesi, Andrea Rocci, Global Linguistics: An Introduction, Mouton de Gruyter, Berlin, New York, 2009: p.33) அத்தகு மொழியியலாய்வுச் சிந்தனையே பேராசிரியர் சதாசிவம் அவர்கள் சுமேரிய மொழிக்கும் திராவிடமொழிகளுக்கும் இடையிலான ஒற்றுமையைக் அறிந்துகொள்ள முன்னோடியாக அமைந்ததெனலாம்.

சுமேரியமொழிக்கும் தமிழ்மொழிக்கும் எத்தகு தொடர்பிருந்தது என்பதை அறிவதில் ஆர்வம் கொண்டிருந்த பேராசிரியர் அந்த ஆவணங்களை ஆராயத் தொடங்கினார். அங்கு கிடைத்த சுமேரியமொழியின் பழைய நூல்களை ஆராய்ந்து அந்நூல்களிற் காணப்பட்ட திராவிட மொழிகளுடன் ஒற்றுமையுள்ள சொற்களைத் திரட்டிப் பட்டியலிட்டு ஆராய்ந்தார். அந்த ஆய்வுக்குப் பேராசிரியர் அவர்கள் தாம் ஏற்கனவே ஆராய்ந்து திரட்டி வைத்திருந்த திராவிட மொழிகளின் அடிச்சொல் தொகுதிகள் பயன்படுவதாயிற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அவர் தம் ஆய்வு நூலின் (1965) முன்னுரையிற் குறிப்பிட்டுள்ளார்.

அவரது ஆய்வுக்கு அப்பல்கலைக்கழக மொழியியற் பேராசிரியர் எமானோவ் (M.B.Emeneau) பெரிதும் துணையாக அமைந்தார். அதன் பின்னர் சதாசிவம் அவர்களைப் பேர்க்கிளியில் அமைந்துள்ள கலிபோர்னியாப் பல்கலைக்கழக மொழியியல்துறைப் பேராசிரியர் லீக் லிஸ்கர் அழைத்துச், சுமேரிய - திராவிட மொழிகளின் ஆய்வில் ஈடுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது. பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தில் தான் மேற்கொண்ட சுமேரிய திராவிட மொழிகளின் ஒற்றுமைகளை ஆராய்ந்து ஒரு தனி நூலையே பேராசிரியர் எழுதி நிறைவு செய்தார். அவரது ஆய்வு நூலை பேர்க்ளிப் பல்கலைக்கழகமே "Sumerian A Dravidian Language" என்ற பெயரில் 1965இல் xiii + 60 ஆகிய பக்கங்களைக் கொண்ட நூலாக வெளியிட்டது. அப்பெருமையும் பேராசிரியர் அவர்களுக்கு உரியதாகும். இத்தகைய வாய்ப்பும், ஆய்வின் தகுதி அங்கீகாரமும் மிக மிகச் சிலருக்கே கிடைப்பதாகும். அவ்வகையிற் பேராசிரியர் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளார் எனின் மிகையாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் முதற் பக்கம் வருமாறு அமைந்துள்ளது:

SUMERIAN STUDIES - 1

# SUMERIAN
# A DRAVIDIAN LANGUAGE

By

A. SATHASIVAM
UNVERSITY OF CEYLON
AND
UNIVERSITY OF CALIFORNIA

BERKELEY, CALIFORNIA
1965



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்நூலின் உள்ளடக்கம் வருமாறு:**

Preface ............................................. ii
Forward ............................................. iii -iv
Map of Babylonia...................................... v
Introduction: ......................................... vi - xiii

i. The Sumerian
ii. History of the Sumerian Language
iii. Sumerian Alphabet
iv. Bibliography
v. Abbreviation

Cognate Sets. ........................................1 - 60

இந்நூலிலே 501 சுமேரியமொழி அடிச்சொற்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றைப் பொருள் அடிப்படையிலும், ஒலிப்பு அடிப்படையிலும் (Phonetic correspondences) தமிழ், மலையாளம், கோதா, தோடா, கன்னடம், கொடகு, துளு, தெலுங்கு, கொலாமி, பர்ஜி, கட்ப, கோண்டு, கோண்டி, நைகி, கூய், குவி, கூர்க். மால்ரோ, பிராஹுய் ஆகிய 19 திராவிட மொழிகளில் ஒத்துக்காணப்படும் அடிச்சொற்களுடன் ஒப்பிட்டு நோக்கி, அவற்றை அட்டவணைப் படுத்திக் காட்டியுள்ளர். தனது ஆய்வில் கண்ட தமிழ் மொழியின் மூலம் பற்றிய உண்மையை வருமாறு முன்னுரையிற் குறிப்பிடுகிறார்:

> "It is almost by accident that I found that the Sumerian language as described in Sumerian grammars possesses almost identical characteristics with those that were revealed by my reconstruction of Prehistoric Tamil. The inquiry has been broadened and the Comparative Dravidian date are used to identify Sumerian as a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dravidian language. It was rather unexpected to find that the conservative Dravidian cognates compared in this monograph show that the Sumerian language fits in neatly as the twentieth member of the Dravidian Family." (p.ii)

இந்நூலில் அட்டவணைப்படுத்திக் காட்டப்பட்டுள்ள 501 சொற்களும் இத்துறையில் ஈடுபாடுகொள்ளவிருக்கும் மொழியியலாளருக்கு மிகவும் பயன்படுவனவாகும்.

சுமேரியமொழி – திராவிடமொழிகள் என்பனவற்றுக்கு இடையிலான தொடர்புகள் பற்றி இந்நூல் ஆய்வு மூலம் வெளிப்படுத்தியுள்ள அரிய உண்மைகள் தொடர்பாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மொழியியற் பேராசிரியர் ரி. பரோ அவர்கள் இந்நூலின் அணிந்துரையாகக் குறிப்பிடும் விதப்புரை பேராசிரியர் சதாசிவம் அவர்களின் ஆய்வின் நுட்பத்தை வெளிப்படுத்துவதாக உள்ளதை நோக்கலாம்:

"Connections between Dravidian and various other linguistic families have been proposed from time to time, but Dr. Sathasivam breaks new ground in seeking to relate Dravidian with Sumerian.

The method employed is to compare items in the *Dravidian Etymological Dictionary* with Sumerian words and some 501 of these have been selected for comparison. Some of the proposed equations look distinctly interesting, which suggests that further research in this direction might be fruitful. If it were to be accepted the theory would be of considerable importance for the prehistory of both Dravidian and Sumerian.". (Sgd. T. Burrow, p.iii)

பேர்க்கிலிப் பல்கலைக்கழகத்திற் பேராசிரியர் சதாசிவம் இந்நூல் குறிப்பிடும் சுமேரிய-திராவிட மொழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு பற்றிய ஆய்வினை 1964-1965 காலப்பகுதியில் மேற்கொண்டிருந்தார். அப்போது கொழும்புப் பல்கலைக்கழகத்துச் சிங்கள மொழியியல்துறை விரிவுரையாளர் ஜே. பி. திஸ்ஸநாயக்கா அங்கு மொழியியலில் முதுமானிபட்ட ஆய்வாளராக இருந்தார். இவர் பின்னாளிற் கொழும்புப் பல்கலைக்கழக மொழியியல்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்து, ஓய்வுபெற்ற பின்பு இலங்கை வெளிநாட்டுத் தூதுவராகப் பதவியேற்று மலேசியாவிற் கடமை ஆற்றியவர். நானும் சம காலத்திற் கொழும்புப் பல்கலைக்கழகத்திற் பணியாற்றியபோது அவர் எனக்கும் நண்பராக இருந்தார். பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அவரும் சதாசிவம் அவர்களும் மிக்க நண்பர்களாக இருந்தமையை நான் நன்கறிவேன். பேராசிரியர் ஜே. பி. திஸ்ஸநாயக்கா அவர்கள் சதாசிவம் அவர்கள் பேர்க்ளிப் பல்கலைக்கழகத்தில் சுமேரியமொழி ஆய்வில் ஈடுபட்டிருந்தபோது அவருடனான ஒரு நினைவை வருமாறு பதிவுசெய்திருந்தமையை ஈண்டுக் குறிப்பிடுதல் தகும்:

> "Prof.Sathasivam and I became the best of friends on the Berkeley Campus, working in the same Department of Linguistics, where I was working towards my Master in Linguistics. He was engrossed in his research project on Sumerian. I listened to him many times and heard him discuss his hypothesis with eminent linguists of the caliber of Prof. Emeneau with great enthusiasm. He was collecting data from old Sumerian texts to prove that Sumerian was the parent language that gave birth to the Dravidian family of languages, of which Tamil was the oldest. Every time that he came up with a new etymology which supported some sound law or another, he was as excited as a child who had won a handful of marbles! He had, by then, collected a few volumes of such etymologies, but his untimely death has deprived the world of the fruits of his research".

(பேராசிரியர் சதாசிவம் அவர்களின் நினைவு மலர்:1988: pp. 48-49)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (நூல் - 2) Porto-Sumerio-Dravidian: The common Origin of Sumerian and Dravidian-2017

பேராசிரியரின் மொழியியல் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கம் செய்யும் பணிகள் தொடங்கிவிட்டன. அதன் முதற் படியாக மேற்குறிப்பிட்டுள்ள நூல் (2017) இலண்டனில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துள்ளது. பல மொழிகளைக் கற்றறிந்த பேராசிரியர், மொழியியல் துறையிற் சுமேரியம், திராவிடம் ஆகிய மொழிகளுக்கு இடையிலான ஒப்புமைகளை சுமார் 20 ஆண்டுகள் ஆராய்ந்து, அவற்றிற் பெறப்பட்ட உண்மைகளின் வழியாகத் தமிழ் மொழியினதும் தமிழினத்தினதும் தொன்மையை நிறுவிய பெருமைக்குரியவர். அத்தகைய ஆய்வின் அடிப்படையில் முதலில் எழுதப்பட்ட நான்கு ஆய்வுகளின் தொகுப்பாகவே சுமேரியம் திராவிடம் பற்றிய இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் இடம் பெறும் ஆய்வுத் தலைப்புக்கள் வருமாறு:

Paper: i Sumerian: a Dravidian Language … pp. 1-94
Paper: ii The Dravidian Origin of Sumerian Writing… pp. 95-124
Paper:iii Affinities between Dravidian and Sumerian… pp.125-146
Paper: iv Studies in Sumero-Dravidian Phonology … pp. 147-153

குமரிக்கண்ட வரலாறு பற்றிய ஆய்வுகள் 20ஆம் நூற்றாண்டு முதலாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சுமேரியா, சுமேரியமொழி, சுமேரிய நாகரிகம் பற்றிய ஆய்வுகளும், திராவிட மொழிகளுடன் அவை கொண்டுள்ள நெருங்கிய தொடர்புகளும் தமிழ்மொழி, தமிழினம், தமிழர் நாகரிகம் பற்றிய தொன்மை வரலாறுகளை ஒப்பீட்டு அடிப்படையில் ஆராய்ந்தறியக் கூடிய வாய்ப்புகளைக் கொண்டுள்ளன. அவ்வகையிற் பேராசிரியர் ஆ. சதாசிவம் இருபத்தைந்து வருடங்களாக மேற்கொண்ட சுமேரிய திராவிட மொழிகள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வானது மிகவும் வரலாற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவரது ஆய்வுகள் தொடர்பான வெளியீடுகளும் திராவிட மொழிக்குடும்பம் பற்றிய உறுதியான வரலாற்றுத் தரவுகளைக் கொண்டுள்ளன.

பேராசிரியர் சதாசிவம் அவர்கள் **"சுமேரிய எழுத்து முறையின் மூலம் திராவிடம்"** என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையானது இந்நூலின் இரண்டாவது கட்டுரையாகத் தரப்பட்டுள்ளது. இக்கட்டுரையிற் பல்வேறு சான்றுகள் தந்து, தமிழ் எழுத்துக்களின் தொன்மை வடிவத்தை சுமேரிய பண்டைய எழுத்து ஆவணங்களிலிருந்து அறியக் கூடிதாக உள்ளது என்ற தனது கருத்தை நிறுவியுள்ளார். ஆயினும் இது பற்றிய உறுதியான முடிவுக்கு வருவதற்கு மேலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அத்தகைய ஆய்வுகள் பின்வரும் விடயங்களை நோக்கியனவாக அமைய வேண்டும் எனவும் மேலாய்வுக்கு வழிகாட்டி, மொழியியலாளரை இத்துறையில் ஈடுபடச் செய்துள்ளமை அவரது ஆய்வு முறையின் உண்மைத்தன்மையை நன்கு வெளிப்படுத்துவதாகும். அவர் கூறும் ஆய்வுத்துறைகள் வருமாறு:

1. சுமேரியர் பாபிலோனிப் பூர்வீகக் குடிகளல்ல. அவர்கள் கிழக்கு நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து வந்து பாபிலோனியாவிற் குடியேறியவர்கள்;

2. அவ்வாறு குடியேறிவர்கள் தென்னிந்தியத் திராவிடர்களே என்று பழைய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளமை;

3. பூர்வீகச் சுமேரியர்களின் மண்டை ஓடுகள் திராவிடர்களின் மண்டை ஓடுகளுடன் ஒத்துக் காணப்படுகின்றமை;

4. சிந்துவெளியிற் கிடைத்துள்ள பண்டைய எழுத்து வடிவங்களும் சுமேரிய எழுத்து வடிவங்களும் ஒத்த தன்மை கொண்டிருத்தல்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பிற்பட்ட காலச் சுமேரிய எழுத்து வடிவங்கள், பிராஹுய்மொழி எழுத்து வடிவங்கள் ஆகியவற்றிடையே ஒற்றுமை காணப்படுதல்;

6. எழுத்துக்களின் ஒலிப்புமுறை, சொற்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் சுமேரியமும் திராவிட மொழிகளும் ஒத்தியங்குதல்;

7. சுமேரிய மொழியிலுள்ள தொன்மைக்கதைகள் (Legends), ஆகழாய்வுச் சான்றுகள், எழுத்துக்கள், எழுதும்முறை, அம்மொழியிலுள்ள சொற்றொகுதிகள் ஆகியனவற்றை ஆராயும்போது, பாபிலோனியா, மத்தித்தரைக் கடற் பிரதேசங்கள் முதலிய இடங்களிலே திராவிடர் குடியேறியிருக்கலாம் - என்பன பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன.

சுமேரிய நாகரிகம் கி.மு. 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கூறப்படுகிறது. அந்நாகரிகமானது புதிதாகப் பெயர்பெற்று வழங்குகின்ற ஈராக் நாட்டினைச் சூழ்ந்த மொசபத்தேமிய நாகரிகத் தளங்களுக்கு அண்மையானதாகவும், அங்கு ஊர், நிப்பூர், ஏறிது, லார்சா முதலான நகரங்கள் அமைந்திருந்தனவாகவும் அறியப்படுகிறது. **சுமேரியர் என்ற இனத்தினர் அங்கு சென்று குடியேறியவர்கள் என்ற கருத்தும் நிரூபிக்கப்பட்டு வருகின்றது**. குமரிக்கண்டம் பல தடவைகள் ஏற்பட்ட ஆழிப்பேரலைகளால் தாக்கப்பட்ட காலங்களில் அங்கிருந்து புலம்பெயர்ந்து மேற்கே சென்ற மக்கள் சுமேரியப் பிரதேசத்திற் புகலிடம் பெற்றனர் என்ற கருத்தும் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன (இ. பாலசுந்தரம்: 2015). இதுவரை காலமும் அறியப்படாதிருந்த சுமேரியருக்கும் திராவிடர் மற்றும் சிந்துவெளி நாகரிகம் ஆகியவற்றுக்கும் இடையிலான தொடர்புகள் பேராசிரியர் சதாசிவம், மற்றும் சுமேரிய நாகரிக ஆய்வாளர்கள் பலராலும் நிறுவப்பட்டுள்ளன.

பேராசிரியரின் ஆய்வுகள் மூலம் சுமேரியமொழிக்கும் பண்டைத் தமிழ்மொழிக்கும் இடையிலான தொடர்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளமையை அவரது நூல்கள், அத்துறை ஆய்வுக் கட்டுரைகள் என்பனவற்றின் மூலம் அறிந்துகொள்ளலாம். இது போன்றே சுமேரிய ஆய்வு பற்றிய அவரது ஏனைய நூல்களும், ஆய்வுக்கட்டுரைகளும் கூறும் விடயங்களும் படித்தறியத் தக்கவையாகும்.

## (நூல் - 3) தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி – 2006

இந்நூல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் 2006ஆம் ஆண்டு 311ஆவது பல்கலைக்கழக வெளியீடாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளமை தனிச் சிறப்பாகும். அப்பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர் க. பாலசுப்பிரமணியன் இந்நூலுக்கு எழுதிய அணிந்துரையில் வருமாறு குறிப்பிடுகிறார்:

> "உலகமொழிகளுள் தொன்மை மிக்க முதல்மொழி தமிழ்மொழியே என்பதைப் பல ஆராய்ச்சியாளர்களும் நிறுவிவருகின்றனர். தமிழ்ச் சொற்களின் தோற்றம் பற்றிய ஆய்வுகள் இம்மொழியின் தனித் தன்மையை எடுத்துரைக்கக் காண்கிறோம். 'தமிழ்ச் சொற்களின் பிறப்புநெறி' என்னும் தலைப்பில் வெளிவரும் இந்நூல் இவ்வகையில் உருவாக்கப்பட்ட ஓர் அரிய படைப்பாகும். இந்நூலாசிரியர் திரு. ஆ. சதாசிவம் அவர்கள் தம் மொழிநூல் ஆராய்ச்சிப் புலமையை இதிலே திறம்படப் புலப்படுத்தியுள்ளார். மனிதன் பேசத்தொடங்கிய காலத்திலிருந்து சொற்களின் பிறப்பு, அவற்றின் ஒலிவடிவம், பொருள் ஆகியவற்றை விளக்குவதாக இந்நூல் அமைகிறது."

தமிழ்ச்சொற்கள் எக்காலத்திலே தோற்றம் கொண்டன என்பதை எவரும் வரையறுத்துக் கூற இயலவில்லை என்பதே உண்மை. தமிழ் மொழியின் வளர்ச்சி தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாகும். எனவே தொன்மைக் காலத் தமிழர்கள் எங்கு வாழ்ந்தார்கள் என்பதே ஒரு தனி ஆய்வாகிறது. குமரிமுனைக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கேயுலவும் இந்தியப் பெருங்கடல் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பெருநிலனாய் இருந்ததென்று கூறும் புவியியலாளர் ஆய்வுகளையும், இருபெருங் கடற்கோள்களால் தமிழகத்துப் பெருநிலப்பரப்பு இந்துமாக்கடலின் அடியில் அழிந்துள்ளது என்ற "இறையனார் களவியலார்" கூற்றுக்களையும், லெமூரியா அல்லது குமரிநாடு பற்றிய மேல்நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் கூறுவனவற்றையும் சான்றாகக்கொண்டு பேராசிரியர் சதாசிவம் அவர்கள் இந்நூலில் தனது ஆய்வினை விரிவுபடுத்தியுள்ளார்.

தமிழ்ச் சொற்களின் பிறப்புநெறி பற்றிக் கூறும் இந்நூல் முதன்முதலாகத் தமிழல்லாத பிறிதொரு மொழியான சுமர்மொழிச் சொற்களைத் தரவுகளாகக் கொண்டு விளக்கங் கூறுவது புதிய ஆய்வுமுறையாக அமைந்துள்ளது. சுமர் மொழி சுமார் 4000 ஆண்டுகளுக்கு மேலாக உலகிலிருந்து மறைந்துபோன மொழியாகும். அக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்கள் விட்டுச் சென்ற எழுத்தோவியங்கள் களிமண் ஏடுகளாகப் பூமியிற் புதையுண்டிருந்து கி.பி.1879க்குப் பின்னர் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. உலகில் வேறெந்த மொழிக்கும் சுமர்மொழியிற் கிடைத்துள்ளவை போன்ற மிகப்பழைய கால எழுத்தோவியங்கள் இல்லை. மனித வரலாற்றில் இது ஓர் அற்புத நிகழ்ச்சியாகும் எனச் சதாசிவம் அவர்கள் குறிப்பிடுகின்றார். ஆனால் தமிழ்மொழி அதற்கும் முற்பட்ட மொழி. இருப்பினும் தமிழ் மொழியின் பழைய வடிவங்கள் கிடைக்காமைக்குக் காரணம் தமிழர் எழுதப் பயன்படுத்திய பொருள் பனையோலை ஏடுகளே என்பதை இந்நூலாசிரியர் குறிப்பிடுவதும் கருத்திற் கொள்ளத்தக்கது.

கடைச்சங்க காலத்துக்கு முற்பட்ட தமிழ்ச் சொற்களின் வழக்குகளை அறிந்துகொள்ள உதவும் பழைய நூல்களோ கல்வெட்டுகளோ இப்போது இல்லை. எனவே சுமர்மொழியில் கி. மு. 2800 - கி.மு. 2000 ஆகிய காலப்பகுதியிற் செங்கற்களிற் குறிக்கப்பட்ட சொல் தொகுப்புக்களின் அடிப்படையிலே தமிழிலுள்ள அடிச்சொற்களை ஒப்பிட்டு விளக்குவதோடு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்துபோன பழந்தமிழ்ச் சொற்களுக்கு இணையான சொற்களாகவே அச்சுமர்மொழிச் சொற்களை ஆசிரியர் இந்நூலில் அடையாளப்படுத்தியுள்ளார். அத்துடன், **சுமர்மொழியும் அதற்கு முற்பட்ட தமிழ் மொழியும், பிற திராவிட மொழிகளும் குமரிமொழிக் குடும்பம் என்ற நிலையில் கிளைத்து வளர்ந்தவை என்பதையும் பேராசிரியர் நிறுவுகின்றார்.** இந்நூல் வரலாற்றுக் காலத்துத் தமிழ்மொழியின் முந்தைய காலத்து வடிவங்களையும் அவற்றின் தோற்றங்களையும் பற்றியதாக அமைவதே இதன் தனித்துவமாகும். தமிழ்மொழி ஆய்வில் இந்நூல் ஒரு புது வரவாகும் என அணிந்துரையில் பேராசிரியர் க. பாலசுப்பிரமணியன் குறிப்பிடுவது மிகவும் ஆழம் வாய்ந்த மதிப்பீடாகும்.

**தமிழ்ச் சொற்களின் பிறப்புநெறி** என்ற இந்நூலின் பொருளடக்கம் வருமாறு அமைந்துள்ளது:

1. முன்னுரை.
2. தமிழில் தனிநிலை அடிச்சொற்கள்
3. தமிழில் இணைநிலை அடிச்சொற்கள்
4. தமிழில் குறைநிலை அடிச்சொற்கள்
5. தமிழில் உயிர்முதற் சொற்களின் பிறப்புநெறி
6. தொல்காப்பியங் காட்டும் பழந்தமிழ்ச் சொற் பிறப்புநெறி

பேராசியர் சதாசிவம் பண்டைய நாகரிகத் தளங்களாகத் தென்னிந்தியா எனப்படும் தமிழ்நாடு, மெசப்பத்தேமியா எனப்படும் சுமர்நாடு, சிந்துவெளிநாடு ஆகிய மூன்றையும் குறிப்பிடுகின்றார். இவற்றிற் பின்னர் குறிப்பிடப்பிட்ட இரு நாகரிகத் தளங்களும் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் அழிந்து, புதைபொருள் வடிவ நிலையில் மண்ணுள் மண்டிக் கிடக்கின்றன என்பதனைத் தொலைநோக்கு அடிப்படையிற் பேராசிரியர் கூறிய கருத்து, இன்றைய கீழடி வரையிலான அகழ்வாராய்ச்சிச் சான்றுகளின் மூலம் நிறுவப்பட்டு வருதல் குறிப்பிடத்தக்கது. பண்டைய தமிழ்நாட்டின் பெரும்பகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கடற்கோள்களால் விழுங்கப்பட்டு குமரிமுனைக்குத் தெற்கே ஆழ்கடலின் அடியில் மூழ்கிக் கிடக்கிறது என்ற கருத்து ஆழ்கடல் ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டு வருதலும் கருத்திற் கொள்ளத்தக்கது. (Sumathi Ramaswamy-2004)

தமிழகம், சுமேரியா, சிந்துவெளி ஆகிய மூன்று நாகரிகத் தளங்களில் வாழ்ந்த மக்கள் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்ற தனது கருத்தை உறுதிப்படுத்துவதற்குப் பேராசிரியர், அம்மொழிகளிற் கிடைக்கும் பண்டைய எழுத்து ஆதாரங்களைத் துணைக் கொண்டுள்ளார். அவ்வகையிற் சிந்துவெளியில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட சான்றுகளிற் பொறிக்கப்பட்டுள்ள எழுத்து வடிவங்கள் தமிழ் எழுத்துக்களே என ஐராவதம் மகாதேவன் நிறுவியுள்ளதை ஈண்டுக் கருத்திற் கொள்வது பொருத்தமாகும். சுமர்மொழியிற் கிடைத்த பண்டைய தொன்மை மிக்க சுடுமண் ஏடுகள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் சுமர்மொழி ஓர் **ஒட்டுநிலை மொழி**க் குடும்பத்தைச் சேர்ந்தது என்ற கருத்தை மட்டுமே வெளியிட்டிருந்தனர்.

இந்த ஆய்வின் ஈர்ப்பினாற் சதாசிவம் அவர்கள் தொடர்ச்சியாக இருபது ஆண்டுகள் சுமேரிய மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையிலான ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தார். அக்காலக் கட்டத்திற் பேராசிரியர் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்திலே தமிழ்ப் பேராசியராகவும், தமிழ்துறைத் தலைவராகவும் பணிபுந்தார். அப்போது நான் அவருடைய மாணவனாகவும், பின்னர் அவரது தமிழ்த்துறை விரிவுரையாளராகவும், குடும்ப நண்பராகவும் விளங்கினேன். அவர் ஓய்வாக இருக்கும்போது தமிழ்த் துறையிலும், வீட்டிலும் நான் அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களிற் சுமேரியம் - திராடம் ஆகிய இருமொழிக் குடும்ப மொழிகளுக்கும் இடையிலே தொடர்புடையதாகத் தான் கண்டுபிடித்த சொற்களை எனக்கு உற்சாகத்தோடு உச்சரித்துக் காட்டி அவற்றின் ஒலி ஒற்றுமையையும், பொருள் ஒற்றுமையையும் விளக்கிக் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் பெருமகிழ்ச்சி அடைவதை வழக்கமாகக் கொண்டிருந்ததை நினைத்துப் பார்க்கிறேன். சான்றாக, Kur = குன்று, குறிஞ்சி, பூமி, கோடு, குரல்; Kad = கட்டு, சேர்; Kar = கதிர், கடவு, குடை, மதில்; Sar = சமை, சிறை, கரு, செடி முதலான சுமேரியச் சொற்களையும், அவற்றுக்கு ஒப்பான தமிழ்ச் சொற்களையும் உச்சரித்துக்காட்டி எவ்வாறு அச்சொற்கள் ஒரு மொழியிலிருந்து மற்ற மொழியில் உருவாக்கம் பெற்றுள்ளன என்பதை விளக்கிக் கூறிய உரையாடல்கள் என் நினைவிற் பதிந்திருக்கின்றன. அது மட்டுமல்லாமல், தான் சுமர் மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையிலான தொடர்புகளை நிறுவிக்கொண்டு வருகின்றேன் என்பதைப் பேராசிரியர் பேருவகையுடன் அடிக்கடி கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைவார்.

இவ்வாறாகப் பல ஆண்டுகள் ஆராய்ந்து திரட்டிய சொற்களைத் தொகுத்து "சுமேரோ-திராவிடம் அல்லது குமரிக் குடும்ப மொழிகளின் சொற் பிறப்பியல் அகராதி" (An Etymological Dictionary of Sumero- Dravidian or Kumari Family of Languages) என்ற பேரகராதி நூலைத் தொகுத்தார். ஆனால் அத்தொகுதிகள் வெளியிடப்படாமலுள்ளன.

பேராசிரியர் சதாசிவம் அவர்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல்துறையில் மேற்கொண்ட ஆராய்ச்சிக்குப் பேருதவியாக அமைந்தவர், அப்போது தஞ்சைப் பல்கலைகழகத்தின் துணைவேந்தராக இருந்த மொழியியற் பேரறிஞர் வி. அய். சுப்பிரமணியம் ஆவார். தமிழ்மொழி ஆய்வு புதிய பல கோணங்களிலிருந்து அணுகப்பட வேண்டுமென்னும் சிந்தனை படைத்த துணைவேந்தர் வி. அய். சு அவர்கள், சதாசிவம் அவர்களுக்குச் 'சிறப்பாய்வாளர்' தகைமையை வழங்கி, இந்த ஆய்வைச் செய்யும்படி பணித்தார் என இந்நூலின் முகவுரையில் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆய்வின் பயனாக வெளியிடப்பட்ட நூலே 'தமிழ்ச் சொற்களின் பிறப்பு நெறி' (2006) என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமர் மொழியின் சொல்வடிவங்கள், இலக்கண அமைப்பு, சொற்பொருள் என்பன தமிழ் மொழியிலும் ஏனைய திராவிட மொழிகளிலும் எவ்வாறு அமைந்து காணப்படுகின்றன? பண்டைத் தமிழிலிருந்து கிளைத்த மொழிகளில் ஒன்றாகச் சுமர்மொழியைக் கொள்ளலாமா? சுமர்மொழிச் சொல் வடிவங்கள் அழிந்துபோன பழந்தமிழ்ச் சொற்களை அடையாளம் காண்பதற்கு எவ்வகையிற் பயன்படுகின்றன? என்பன பற்றி ஆராயும் வகையிலேயே இந்நூல் அமைந்துள்ளது.

தொன்மைக் கால மொழிகள் அனைத்தினதும் பயன்பாடும், வளர்ச்சியும் தொடக்க காலத்திற் சைகை மொழி, வெற்றொலி, ஓரசைச்சொல் என்ற அடிப்படையிலேயே அமைந்திருந்ததென மொழிவரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர். தமிழ்மொழி வரலாறானது தமிழ் மக்களின் வரலாற்றோடு மிகத் தொடர்புடையது. ‘‘குமரிக்கண்டமே உலக நாகரிகத்தின் தொட்டில்’’ எனக் கூறப்படுகின்றது. பொதுவாகக் குமரிக் கண்டத்திலிருந்தே தமிழர் வரலாறு தொடங்குவதாகப் பண்டைய இலக்கியங்களும் மற்றும் அகப் புறச் சான்றுகளும் விளக்கம் தருகின்றன. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிடும்,

“ப.ஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள..”
(சிலம்பு: காடுகாண்காதை:வரி 19-20)

இப்பாடல் வரிகளுக்கு விளக்கம் கூறும் உரையாசிரியர் அடியார்க்குநல்லார், குமரிக்கண்டம் 49 நாடுகளும், 700 காவதப் பரப்பும் கொண்டது என்பர். (காவதம் = 8000 முழம் = இரண்டே கால் மைல்களும் 80 முழங்களுமாகும்.) எனவே 700 காவதம் ஆகிய 1600 மைல் பரப்பளவு கொண்ட நிலப்பரப்புடையது குமரிக்கண்டம் என வெள்ளைவாரணனார் விளக்கம் தந்துள்ளார் (1957:பக்.36). இக்கருத்துக்கு ஆதாரமாக, “Indian Ocean, the Cradle of the Human Race” என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட கட்டுரையிலிருந்து சில கருத்துக்களைப் பேராசிரியர் மொழிபெயர்த்து இந்நூலிலே தந்துள்ளார்:

அ). 25,000 ஆண்டுகளுக்கு முன் நிலவிய ஒரு பெரிய நாகரிகத்தளம் பல்வேறு கடற்கோல்களால் நிலத்திற்கடியில் அமிழ்ந்து கிடக்கிறது;

ஆ). வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் ஏற்பட்ட நிலப்பெயர்வுகள், வாயு அமுக்கம், பூமி நடுக்கம், எரிமலை என்பவற்றால் பூமியிலும் கடலடியிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன;

இ). இதனால் மத்தித்தரைக்கடற் பிரதேச மக்கள் தென்னிந்தியா ஊடாகச் சென்று குடியேறினர்.

மேலும் சதாசிவம் அவர்கள் தனது கருத்துக்குச் சான்றாக, சுவாமி விவேகானந்தரது கூற்றையும் மேற்கோள் காட்டுகிறார்: "-தென்னிந்தியாவில் ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்களின் ஒரு பகுதியினரான சுமேரியர் யூபரட்டீஸ் நதிக்கரையில் குடியேறி, அசீரிய, பபிலோனிய நாகரிகங்களுக்கு வித்திட்டனர்" என்பது அவர் கருத்தாகும். மேலும; Sir Walter Raleigh History of World, Science of man, 1900, Sir john Eins - "Talks at British Association1897, Dr. Maclean, Scott Elliot Alexander Condirav- "Riddles of Oceans"-1974, Reshetov – "The Nature of the Earth and the Origin of Man" ஆகியோரது நூல்களைச் சான்றுகாட்டி இந்து மாக்கடலே மனித குலத்தின் தோற்றக்களம் என்பதையும், பண்டைத் தமிழர் வரலாறு 20,000 ஆண்டுப் பழமையானது என்பதையும் குறிப்பிடுகின்றார்.

குமரிக்கண்டத்திலிருந்து சென்ற மக்களில் ஒரு பகுதியினரே மெசபத்தேமியாவிற் குடியேறிய சுமேரியர் ஆவார் என்ற கருத்தையும் இந்நூலின் பல இடங்களிற் குறிப்பிடுகிறார். சான்றாக David Dringer – Writing, New York, 1962,pp.35-36, H.R. Hall, The Ancient History of the Near East, London, 1913:172-173, Samuel Noah Keramer: The Sumerians, their



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

History, Culture, and Character, The University of Chicago Press, 1968, p.3 , Sir John Marshall: Mohenjadaro and the Indus Civilization, vol. II, London, 1931, p.453 முதலானோரின் நூலாதாரங்களைத் துணைக்கொண்டு, சுமேரியர் பண்டைய தமிழர்களின் ஒரு பகுதியினர் என்றும், அவர்கள் பேசிய சுமர்மொழி தமிழின் பண்டைய மொழிவடிவத்துடன் தொடர்புடையது என்றும் நிறுவுகிறார். அத்துடன் சுமர்மொழி கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்னராகவே அழிந்து விட்டது என்றும், ஆனால் தமிழ்மொழி பண்டை நாளிலிருந்து பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வழங்கி வந்துள்ளது என்பதையும் பதிவுசெய்துள்ளார்.

தொடக்க காலத்தில் ஓரசைச் சொற்களே தோற்றம் பெற்று வழங்கிவந்துள்ளமையைச் சுமர்மொழி, தமிழ்மொழி மற்றும் திராவிட மொழிகள் ஆகியனவற்றிலிருந்து சான்றுகள் தந்து விரிவாக விளக்கியுள்ளார். சுமர்மொழியிற் ககரத்தை முதலெழுத்துக்களாகக் கொண்ட ஓரசைச் சொற்கள் மிகுந்த தொகுதிகளாக உள்ளன என்றும், அச்சொற்களின் காலம் கி. மு. 6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்றும் விளக்கப்பட்டுள்ளது. **சுமர் மொழியில் அடையாளம் காணப்பட்ட சொற்கள் அனைத்தும் தமிழிற் சங்க இலக்கியங்களிற் காணப்படுவதை எடுத்துக்காட்டி, சங்க இலக்கிய மொழியும் கி. மு. 6000 ஆண்டுகளுக்கு முன்னர் சீர்பெற்றிருந்தது என்பதையும் பேராசிரியர் சதாசிவம் தான்மேற்கொண்ட மொழி ஆய்வின் வாயிலாக இந்நூலில் நிறுவியிருத்தல் கல்விச் சான்றோருக்கு விருந்தாகும்.**

பேராசிரியர் சதாசிவம் சுமேரிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையிற் காணப்படும் சொல் அமைப்பிலும், பொருளிலும் காணப்படும் ஒற்றுமைகளுக்குச் சான்றாகக் கூறிய எடுத்துக்காட்டுக்கள் சில வருமாறு:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| சுமேரியம் | பொருள் | தமிழ் + திராவிடமொழிகள் |
|---|---|---|
| Kur | mountain | kurinchi, kuvatu, kutumi, ko |
| Gul | destroy | kol |
| Ser | gather | ser |
| Tam | brother | thambi |
| Par | sun | paruthi |
| Mulu | perfect | mulu |
| Kuli | bathe | kuli |
| Vali | path | vazhi |

மேலும், சுட்டுப்பெயர்களின் அடிப்படையிலும் இம்மொழிகளுக்கிடையிலான ஒற்றுமையை விளக்கிக்காட்டும் வகையில் சுமேரிய மொழியிலே தன்மை ஒருமையைக் குறிக்கும் **gan** என்பதை எடுத்துக்கொண்டு, அது தமிழில் யான், நான், என்றும், துளு மொழியில் யானு, யேனு என்றும், கன்னடத்தில் நான் என்றும், பிராஹுய் மொழியில் gan என்றும், பிற திராவிட மொழிகளில் ஆன், ஏன் என்றும் ஒலியும், பொருளும் ஒத்து வருதலைக் காட்டுகின்றார். மேலும் முன்னிலை ஒருமை தமிழில் நீர், நீ என வருவது போன்று சுமர் மொழியில் Ne, Ni எனவும் வழங்குகிறது. இவ்வாறு சுமர்மொழியின் தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை என்பன இருமொழிகளுக்கும் இடையில் ஒற்றுமை உடையனவாக உள்ளதை எடுத்துக்காட்டி, இவ்விரு மொழிகளுக்கும் குமரிமொழியே தாய்மொழி என்றும், கி.மு. 4000 வரையில் ஒன்றிலிருந்து மற்றது பிரிந்து சென்ற பின்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டும் வெவ்வேறு சூழல்களில் வளர்ந்து வந்துள்ளன என்றும் விளக்கம் தரப்பட்டுள்ளது.

மேலும் இரு மொழிகளிலும் பல சொற்களில் ஒற்றுமை காணப்படுவதை விளக்கி உள்ளமைக்குச் சான்றாகப் பின்வரும் சொற்களை நோக்கலாம்

| சுமர்மொழி | தமிழ்மொழி |
|---|---|
| Giir –ox | - காரி, காளை |
| Vili | - விழி |
| Ali | - அலி (ஆண் - பெண் இல்லாத) |
| Sumer(u)/Kumaru | - குமரி (தமிழ்), குமேரு (துளு) |

Sumer(u) / Kumaru என்ற சொற்கள் சுமர்மொழியில் நாட்டின் பெயராகவும், அந்நாட்டு மக்கள் பேசிய மொழியாகவும் சுமர்மொழி இலக்கியங்களிற் குறிப்பிடப்பட்டுள்ளமை பற்றியும் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இந்நூலின் மூன்றாவது இயலிலே தமிழிலுள்ள **இணைநிலை அடிச்சொற்களின் இயல்பை** விளக்கி அவற்றின் அடிப்படையில் இருமொழிகளுக்கும் இடையேயுள்ள ஒப்புவமை பற்றி ஆராய்ந்துள்ளார். இரண்டு தனிநிலை அடிச்சொற்கள் ஒட்டிநின்று பொருள் உணர்த்துதல் இணைநிலை எனப்படும். குமரிமொழிக் குடும்பம் ஓர் ஒட்டுமொழிக் குடும்பமாகும். தமிழ், தெலுங்கு முதலான திராவிட மொழிகளும் இப்பண்பு உடையவை என்பதையும் விளக்கி, அப்பண்பின் அடிப்படையிலும் இருமொழிகளுக்கும் இடையிலான தொடர்புகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. சான்றாகச் சில எடுத்துக்காட்டுக்களை நோக்கலாம்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைநிலைச் சொற்கள்:**

| | | |
|---|---|---|
| Kun + tal | - Hair Cut | - கூந்தல் |
| Mi + lag | - Pepper | - மிளகு |
| Nam + Kur | - Anchor | - நங்கூரம் |

Nam + Kur என்பதில் Kur என்னும் சொல் மிகுதி, பெரியது என்ற பொருள் உடையது. Nam என்ற சொல் நிறுத்துதல் என்னும் பொருளிற் பயின்றுள்ளது. நம் - கூர் என்னும் இரு சொற்களும் இணைந்து நின்றபோது, பெரிய பொருளை நிறுத்துதல் செய்யும் கருவி நங்கூரம் எனப்பட்டது. பழந்தமிழில் நங்கூரம் என்ற சொல் வழங்கி வந்துள்ளது. மிகப் பழமையுடைய **நங்கூரம்** என்னும் தமிழ் இணை அடிச்சொல், வெவ்வேறு ஒலி மாற்றங்களுடன் உலகின் பலமொழிகளில் வழக்கிலிருந்து வருவதையும், பண்டைத் தமிழரின் மரக்கல உபயோகத்தையும் மற்றும் வாணிபத்தையும் எடுத்து விளக்க உபயோகிக்கப்படுவதையும் ஆசிரியர் விளக்கியுள்ள இப்பகுதி மொழிவரலாற்றில் முக்கிய பங்குடையது.

இது போன்றே **திங்கள்** என்ற தமிழ்ச்சொல்லை நோக்கலாம். Dim + gir > **dingir:** 'the bright one' என்பது சுமர்மொழிப் பொருள். பிரகாசிக்கின்ற கதிர்கள் என்ற மூலப்பொருளுடைய இச்சொல் சுமர்மொழியில் கடவுளையும், தமிழ் மொழியில் சந்திரனையும் உணர்த்திற்று. இளங்கோ தம் சிலப்பதிகாரத்திலே "திங்களைப் போற்றுதும்" எனக் கூறியுள்ளமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. பாண்டி நாட்டுடன் இணைந்து தெற்கே பரந்திருந்த நிலப்பரப்பே குமரிநாடு என வரலாறுகள் கூறுகின்றன. எனவே குமரிநாட்டிலிருந்து சென்று குடியேறிய தமிழர் தம் தெய்வமாகச் சந்திரனைப் போற்றினர். காலப்போக்கிற் சந்திரன் என்ற பொருள் மயங்கிக் கடவுள் என்னும் பொருள் நிலைத்திருக்கலாயிற்று எனவும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் நான்காம் இயலிலே தமிழில் வழங்கும் **குறைநிலை அடிச்சொற்கள் சுமர்மொழியிலும் காணப்படுகின்றமையை ஆராய்ந்தறிந்து, அம்மொழியிலும் தமிழிலும் உள்ள குறைநிலை அடிச்சொற்களை ஒப்பிட்டுக்காட்டி, இருமொழிக்குமுள்ள தொடர்பை விளக்கியுள்ளார்.** தமிழ்மொழி ஏறக்குறைய 6000 ஆண்டுகளுக்கு மேற்பட்டகால உலக வழக்குடையது எனக் கருதப்படுவதனால், இந்நீண்ட காலப்பகுதியிற் சொற்களில் ஒலி மாற்றம் பரவலாக ஏற்படுவதும், சொற்கள் நாளடைவில் தேய்ந்து தேய்ந்து வருவதும் இயற்கையே. முதற் குறைநிலைச் சொற்களுக்கு உதாரணமாக சுமர்மொழியில் 'செய்' என்பதைச் சுட்ட kak, gag, sag, ag, ak என்னும் சொற்கள் காணப்படுகின்றன. இங்கு kak > ak என முதற்குறையாக வழங்கிற்று. சுமர் மொழியில் சுறவம் என்பதைச் சுட்ட suge > su என வழங்குவதுபோல தமிழில் சுறவம் என்பது கடைக்குறையாக சுறவம் > சுறவு > சுறா என வழங்குவதைக குறிப்பிடலாம். மேலும் கார் > கர் கான், காடு > கர் யாத்தல் > யா - முதலியன கடைக்குறைகள் ஆகும்.

அன்றியும் கருத்தை உணர்த்த இரண்டு தனிநிலை அடிச்சொற்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு சொல்லின் பான்மையதாக ஆக்கப்பட்ட பின்னர் உச்சாரண (ஒலிப்பு) விரைவு காரணமாகச் சொற்களின் ஒலியமைப்பில் சுருக்கம் ஏற்படுவது ஒரு மொழி வரவாற்றுண்மை. இதனை விளக்க சாணம் > சாணி, பாட்டு > பா, நாக்கு > நா என்ற சொற்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவை கடைக்குறைநிலைச் சொற்களாகும்.

தொல்காப்பியங் குறிப்பிடும் பழந்தமிழ்ச் சொல்லாகிய திணை என்பதையும் சுமர்மொழியுடன் ஆசிரியர் ஒப்பிட்டு ஆராய்கிறார்.

"உயர்**திணை** என்மனார் மக்கட் சுட்டே
அ..**றிணை** என்மனார் அவரல பிறவே
ஆயிரு **திணை**யின் இசைக்குமென் சொல்லே"
(தொல். சொல்.1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமர் மொழியிலே 'தின்' என்பது திணை எனப்பொருள் தரும் சொல்லாகும். சுமர்மொழியிலும் திணை என்பதற்குப் பொருள் வாழ்க்கை என்பதாகும். திணை என்பதற்கு உரை ஆசிரியர்கள் சாதி, ஒழுக்கம், வாழ்க்கை எனப் பொருள் கூறுவர். இங்கு திணை என்பது வாழ்க்கையையே சுட்டுகிறது என்கிறார் சதாசிவம் (பக்.187).

இந்த நூலாய்வின் அடிப்படையிலே தமிழ்ச் சொற்களின் வளர்ச்சியை மூன்று பெருங் காலக் கட்டங்களாக ஆசிரியர் வருமாறு வகுத்துக் கூறுகிறார்:

(1) கி. மு. 3500க்கு முற்பட்ட அசைச் சொற்காலம். இக்காலப் பகுதியில் வழக்கிலிருந்த அசைச் சொற்கள் மெய் + உயிர் + மெய் எனும் மூன்று ஒலிகளால் அமைந்தவை. சொற்களை ஒன்றோடொன்று சேர்த்துக் கூறும் நிலையில் அவாநிலை, தகுதி, அண்மை என்னும் வாய்ப்பாட்டில் ஒன்றன் மூலம் பொருள் உணர்த்தப்பட்டது.

(2) கி.மு. 3500 - கி.மு. 1500 வரையான காலப்பகுதி. இக்காலப் பகுதியில் பெயர், வினை ஆகிய இரு வகைச்சொற்களின் பொருள் வேறுபடுத்தப்பட்டன. இதனையே தொல்காப்பியரும் வருமாறு குறிப்பிடுவர்:

சொல்லெனப் படுவ பெயரே வினையென்று
ஆயிரண்டென்ப அறிந்திசி னோரே.
(தொல். சொல். பெயர். நூற்பா: 4)

பண்டைக் காலத்தில் தமிழ்ச் சொற்களெல்லாம் அசைச் சொற்களாகத் தோன்றின. அவை மூவொலிகளைக் (மெய் + உயிர் + மெய்) கொண்டிருந்தன. மூவகை ஒலிச்சொற்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொலி தேய்ந்து சில சொற்கள் ஈரொலிச் சொற்களாயின. பின்னர், ஓரொலிச் சொல்லாகவும் மாறின. மாறிய இச்சொற்கள் பிற சொற்களின் பின்னர் வைக்கப்பட்டு அவற்றின் பொருளைச் சிறிது மாற்ற உதவின.

(3) கி.மு. 1500க்குப் பிற்பட்ட காலம். இக்காலப் பகுதியின் தொடக்கத்தில் மதுரை உள்ளிட்ட பாண்டி நாட்டுப் பகுதியிற் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்த தமிழ்மொழிச் சொற்கள் தூய்மை செய்யப் பட்டுச் செந்தமிழ் வடிவம் பெற்றன எனக் கருதக்கிடக்கின்றது. தற்காலத் தமிழின் ஆரம்ப நிலையை இங்கே காணலாம். தமிழ்ச் சொற்களின் ஒலிவடிவம், வரிவடிவம் என்பன இலக்கண வரையறை செய்யப்பட்டுப் பின்னர் புனரமைக்கப்பட்டன. தொல்காப்பியரும் அவர் முன்னோரும் இலக்கண நூல்களிற் செந்தமிழின் இலக்கணத்தையே கூறினர். கருத்தை உணர்த்துதற்கு வேண்டாத அளவுக்குத் திணை மற்றும் பால் காட்டும் விகுதிகள் பெயர், வினைச் சொற்களோடும் இணைக்கப்பட்டன. திணை, பால் காட்டாத பெயர் வினைகளுடன் இவை சேர்க்கப்பட்ட போது தமிழ் மொழியில் ஓரளவு செயற்கைப் பண்பு தாவலாயிற்று, **அ** என்னுஞ் சுட்டுடன் **அன்** என்னும் உயர்திணை ஆண்பால் விகுதியைக் கூட்டி 'அவன் வந்து' என்று கூறினால் மட்டும் பொருள் புலப்படும். இவ்விதம் பல்வேறு செயற்கை முறைகளைச் சொல்லாக்கத்தில் தழுவிக் கொண்ட அக்காலச் செந்தமிழ்ப் புலவோரின் போக்கினால் தமிழ் கூறும் நிலப்பரப்பு வடவேங்கடந் தென்குமரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிடையாக மிகச் சுருங்கவே பாண்டி நாட்டுக்கு அப்பாலுள்ள பரந்த பரத நாட்டில் அன்று பேசப்பட்டு வந்த தமிழ்மொழியானது காப்போக்கில் மாற்றங்களைத் தழுவிக்கொள்ள முடியாமையினாற் காலப்போக்கிற் பல்வேறு திராவிட மொழிகளாகச் சிதைவுறலாயிற்று எனப் பேராசிரியர் சதாசிவம் கூறும் கருத்து மிகவும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

மேலும் தொல்காப்பியரும் பழமையையும் புதுமையையும் தழுவி இலக்கணம் வகுத்துள்ளமையையும் அவதானிக்கலாம்: "கடதற என்னும், அந்நான்கு ஊர்ந்த குன்றிய லுகரமொடு ..." (தொல். சொல். வினை: 6) என வரு தன்மை ஒருமை வினைமுற்று, "அவைதாம். ஆம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும்...." (தொல். சொல். வினை: 5) என வரும் தன்மைப் பன்மை வினைமுற்றுப் பற்றிக் கூறும் இவ்விரு நூற்பாக்களிலும் காட்டப்படும் கு, டு, து, று என்பன தன்மை ஒருமைக்கும் கும், டும், தும், றும் என்பன தன்மைப் பன்மைக்கும் கூறப்படுதல் பற்றிக் கருத்துரைக்கும் பேராசிரியர் சதாசிவம், இவை பழந்தமிழ்ச் சொல் முடிபுகளாகும் எனவும், அதேபோன்று என், ஏன், அல் தன்மை ஒருமைக்கும், அம் ஆம், எம், ஏம் என்பன தன்மைப் பன்மைக்கும் கூறப்படுபவை புதுத்தமிழ் சொல் முடிபுகளாகும் எனவும், காலப்போக்கில் இப்பழந்தமிழ்ச் சொல் முடிபுகள் வழக்கிழந்து போயின" எனவும் குறிப்பிடுதல் கவனிக்கத் தக்கது.

அடுத்ததாகத், தொல்காப்பியர் கூறும், "**உம்மை** எண்ணும் **என** என்ற எண்ணும்...." (தொல். சொல். இடை39) என்ற நூற்பாவுக்கு விளக்கம் சுமர்மொழியிலிருந்தே தருகிறார். இவை 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்றும், அவற்றின் விளக்கத்தைச் சுமர்மொழி கொண்டுள்ளது என்றும் கூறுகிறார். தமிழ் மொழியில் உம் சுமர்மொழியில் உ என்பன முழுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைச் சுட்டும் என்றும் (பக்.192), மேலும் தமிழிலுள்ள **என, என்று** ஆகியன சுமர் மொழியில் **en, enna** எனக் காணப்படுகின்றன எனவும் குறிப்பிடுகிறார்.

இரு மொழிகளிலுமுள்ள உறவுமுறைப் பெயர்களை ஒப்பிட்டு ஆராய்ந்தும் தன் மதம் நிறுவுவதில் ஆசிரியர் கருத்தாய் உள்ளார். தமிழிலுள்ள அய், ஆய், அப் முதலான உறவுமுறைச் சொற்கள் சுமர்மொழியிலும் வழங்குவதைக் காட்டுகின்றார். அவை பிற்காலத்தில் விகுதிகள் பெற்று அப்பா, அப்பன், அய்யன், ஐயர் எனவும், அம்மா - அவ்வை, ஐயை ஆய், ஆயி, ஆய்ச்சி, ஆச்சி எனவும் மாற்றம் அடைந்துள்ளன. இச்சொற்களின் பழைய வடிவத்தைச் சுமர் மொழியே எமக்கு ஆவணமாகவும் தமிழின் பழைய வடிவமாகவும் காட்டுகின்றது.

இந்நூலின் 7ஆம் இயலிலே **தமிழ்ச் சொற்பிறப்பியற் கட்டளைகள்** (விதிமுறைகள்) பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். அழிந்துபோன பண்டைத் தமிழ்ச் சொற்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாதபோது அழியாது பாதுகாக்கப்பட்டு வந்த பண்டைய சுமர்மொழிச் சொற்களை இவ்வாய்விலே தரவுகளாகவும், சொற்பிறப்புக் கோட்பாடுகளை பன்னிரண்டு கட்டளைகளாகவும் அமைத்து விளக்கியுள்ளார். சுமார் கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கிவந்த உருவெழுத்துக் (Pictographic writings) காலம், குறியெழுத்துக் (ideographic writing) காலம் எனக் கூறப்படும் காலப்பகுதிகளில் உருவாகிய தமிழ்ச்சொற்கள் அனைத்தும் அசைச்சொற்கள் (Syllabic Writings) எனப்படும். இவ்வசைச் சொற்களின் காலத்தின் பின் தோன்றியவையே நாம் இப்போது எழுதும் ஒலியெழுத்துக்களாலாய (Phonetic Writings) சொற்களின் காலமாகும். இது கி.மு. 2800 ஆண்டுக்குப் பிற்பட்ட காலம் எனப் பேராசிரியர் கூறுகிறார் (பக்..203).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் விளக்கப்படும் சொற்பிறப்புக் கோட்பாடுகளைச் சுமர்மொழி வழியாக விளக்கும் வகையில் பல்வேறு விடயங்களையும் தொகுத்துப் பின்வரும் பன்னிரண்டு கட்டளைகளாகத் தந்திருக்கும்முறை ஆசிரியரின் தெளிவான ஆய்வுமுறையை வெளிப்படுத்துவதாகும்:

**கட்டளை 1:**

தமிழில் முதன்முதலிற் பிறந்த அசைச்சொற்கள் மெய் + உயிர் + மெய் என்னும் வரைந்து காட்டப்படாத மூன்று ஒலிகளின கூட்டமாகவே அமைந்திருந்தன.

எ-டு: க் + அ + ர் = கர் ...... = கரை, எல்லை
க் + ஆ + ர் = கார் ...... = காரி , எருது

**கட்டளை 2:**

மொழி முதற் ககரமெய் கெட உயிர்முதற் சொற்கள் உருவாகின்றன:

எ-டு: கல் > அள் ......... = வலிமை
குர் > உரி .......... = தோலுரி

**கட்டளை 3:**

மொழிமுதற் ககர உயிர்மெய்யிலிருந்து முன் அண்ண உயிர்களாகிய எ, ஏ, இ, ஈ பிறக்கின்றன:

எ-டு: **gar** > எரு
**giar** > எருது, ஏறு

**கட்டளை 4:**

ககர உயிர்மெய்யின் ககரமெய் கெடாது பிறந்த கி, கீ, கெ, கே அடியாகத் தோன்றும் சொற்கள்:

எ-டு: கடா > கிடா = ஆண் ஆடு
கல்லு > கெல்லு = தோண்டுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டளை 5:**

சுமர்மொழியில் ஒ, ஓ ஆகிய இரு ஒலியன்கள் இல்லை. இவை கி.மு. 1500க்கு முன்பின்னாகத் தமிழிலுள்ள கு, கூ என்பனவற்றிலிருந்து பிறந்தவை:

எ:டு: gul > ஒளி = பிரகாசம்
kud > ஓடு = கடுகி நடத்தல்

**கட்டளை 6:**

எல்லா உயிர்களின் முன்னரும் ககரமெய் சகர மெய்யாக மாறும். அவ்வாறு மாறும்போது அகர உயிர் இ, ஈ. எ, ஏ என மாறும்:

எ-டு: kag > சா = உயிர்நீத்தல்
gam > செம் = சிவப்பு

**கட்டளை 7:**

எல்லா உயிர்களின் முன்னரும் ககரமெய் தகர மெய்யாக மாறும். மாறும்போது அகர உயிர் ஆ, ஈ. எ, ஏ என்பனவற்றுள் ஒன்றாகப் பெரும்பாலும் மாறும்:

எ-டு: kal > தாள் = பாதம்
gir > தெரு = தெரு

**கட்டளை 8:**

எல்லா உயிர்களின் முன்னரும் ககரமெய் பகர மெய்யாக மாறும். மாறும்போது அகர உயிர் ஆ, ஈ. எ, ஏ என்பனவற்றுள் ஒன்றாகப் பெரும்பாலும் மாறும், மாறாது விடுவதுமுண்டு:

எ-டு: gar > bar > பண்ணு > செய்
gar > bar > பெறு > பெற்றுக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டளை 9:**

உ, ஊ, ஒ, ஓ அல்லாத ஏனைய உயிர்களின் முன் ககரமெய் வகர மெய்யாக மாறும். மாறும்போது அகர உயிர் இ, ஈ. எ, ஏ என்பனவற்றுள் ஒன்றாகப் பெரும்பாலும் மாறும், மாறாது விடுவதுமுண்டு:

எ-டு: gar > வளை > சுற்றிவளை
kid > விடு > விட்டுப்போதல்

**கட்டளை 10:**

எல்லா உயிரெழுத்துக்களின் முன்னரும் ககரமெய் மகர மெய்யாக மாறும். மாறும்போது அகர உயிர் இ, ஈ. எ, ஏ என்பனவற்றுள் ஒன்றாக மாறுமாயினும், மாறாதிருப்பதே பெரு வழக்கு. சுமர்மொழியில் ககர முதன்மொழிச் சொற்கள் முதன்மையானவை. தமிழ்மொழியில் ககர மகர ஒலிமாற்றம் பெருவழக்கிலுள்ளமை பல்வேறு சொற்களின் துணையுடன் நிறுவப்பட்டுள்ளது. சான்றாகச் சில சொற்களைக் காட்டலாம்:

எ-டு: kal கல் > மலை = குன்று
kal கட்டு > மாட்டு = கட்டுதல்

**கட்டளை 11:**

எல்லா உயிர்களின் முன்னரும் ககரமெய் நகர மெய்யாக மாறும். மாறும்போது அகர உயிர் இ, ஈ. எ, ஏ என்பனவற்றுள் ஒன்றாக மாறும்; மாறாதுவிடுவதும் உண்டு,

எ-டு: kar > நடை = அடிவைத்தல்
kun > நூறு = பொடியாக்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டளை 12:**

ஆகாரத்தின் முன்னர் வரும் ககரமெய் (g) சில இடங்களில் மெலிவுற்று யகர மெய்யாக மாறுகிறது:

எ-டு: gar > யார் = எவர்
gan > யான் = நான்

இவ்வாறாகத், தமிழ்சொற்களின் பிறப்புப் பற்றி ஆராய்வதற்குத் தமிழுடன் தொடர்புடைய சுமர்மொழியைத் துணைக்கொண்டு பேராசிரியர் சதாசிவம் அவர்கள் ஆராய்ந்துள்ள ஆய்வுமுறையானது புதுமையானது. **சுமர்மொழி வழக்கொழிந்துவிட்டது. ஆனால் தமிழ் வாழும் மொழியாக வழங்கிவருவதாகும். தமிழ்மொழி உலகின் மூத்தமொழி எனப் பல்வேறு அறிஞர்களும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் தமிழ்மொழியின் சொற்களின் தோற்றம் பற்றி அறிதல் அவசியமாகின்றது** என்ற அடிப்படையிற் பேராசிரியர் சதாசிவம் இந்த அரிய முயற்சியை மேற்கொண்டு தமிழ்மொழியின் தொன்மையையும் அது சுமர்மொழியுடன் கொண்டிருந்த தொடர்புகளையும் நிறுவியுள்ளமையை இந்நூலிற் காணலாம்.

சுமர்மொழி கி.மு. 6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையுடயது. சுமர்மொழி பேசிய மக்கள் தாம் விட்டுச் சென்ற சுடுமண் ஏடுகள் கால வெள்ளத்தால் மண்ணுள் புதையுண்டு போயின. அம்மொழி பற்றி ஆய்வு செய்தோரால் சுமர்மொழி பொறிக்கப்பட்ட களிமண்ணோடுகள் கி.பி. 1850இல் கண்டு பிடிக்கப்பட்டு வாசிக்கப்பட்டுள்ளன. ஆனால் சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த தமிழ் நூல்களையும் எழுத்து ஓவியங்களையும் தமிழ்மொழி இழந்துள்ளது. தமிழர் பனை ஓலையில் எழுதும் பழக்கம் உடையோராக இருந்துள்ளனர். அவை கடற்கோள்களால் அழிந்து போனமையால் சான்றுகள் இல்லாது போயின. தமிழரில் ஒரு பகுதியினரான சுமர்மொழி மக்கள் விட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற சுடுமண் ஏடுகளிலுள்ள அசைச் சொற்கள் தமிழ் அடிச்சொற்களுடன் ஒத்துக் காணப்படுகின்றன. சான்றாக, gar = kar, bar, pad என்ற சுமர்மொழி அசைச்சொற்கள் தமிழில் ஒரே பொருள் கொண்ட காண், பார், நாடு என்ற தமிழ்ச் சொற்களுடன் ஒத்துக் காணப்படுகின்றன. எனவே சுமர் மொழியிலுள்ள அசைச் சொற்களெல்லாம் பண்டைத் தமிழ்மொழியின் அசைச்சொற்கள் எனக் கருதப்படுகின்றன. கி.மு. 2500க்கு முன்னரே வழக்கிலிருந்து வந்த தமிழ், சுமர் ஆகிய மொழிகளிற் சொற்கள் சிறியனவாகவும், சிறிதளவு ஒலிமாற்றங்கள் கொண்டனவாகவும் வழங்கிவந்துள்ளமையும் அறியப்பட்டுள்ளன என்பதைப் பேராசிரியர் சான்றுகளுடன் தெளிவாகவே விளக்கியுள்ளார்.

பேராசிரியர் சதாசிவம் இந்த ஆய்வில் எடுத்துக் கொண்ட சொற்களில் 90 வீதத்திற்கும் மேற்பட்டவை ஒலிமாற்றம் பெறாத அடிப்படையான சொற்களேயாகும். எஞ்சிய 10 வீதமான சொற்களின் மூலம் சிறிது ஒலிமாற்றம் பெற்ற சொற்கள் ஆகும். **பண்டைய தமிழ்ச் சொற்கள் கால வெள்ளத்துள் அழிந்துபோன காரணத்தால் அவற்றைத் திரும்பவும் பெறும் முயற்சி பலிக்காது என்பதைக் கருத்திற்கொண்டு அழிந்துபோன தமிழ்ச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களாகவே சுமர்மொழிச் சொற்களைக் கையாண்டுள்ளேன்** எனப் பேராசிரியர் கூறுவது நோக்கத்தக்கது.

இந்நூல் பண்டைக்காலத்துத் தமிழ்மொழியின் முன்னைய வடிவங்களையும் அவற்றின் தோற்றங்களையும் பற்றி விரிவாகக் கூறுகிறது. இதன் நூன் முடிபுரையில் சதாசிவம் அவர்கள் துணிவாகவும் சான்றாதாரங்களுடனும் கூறும் ஒரு கருத்து எல்லோரது சிந்தனையைத் தூண்டுவது மட்டுமன்றித் தமிழின் தோற்றம் பற்றிய கற்பனைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமைகின்றது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"தமிழ்மொழியின் முன்னைய வரலாறே அன்றி அதன் தோற்றக் காலத்து நிலையை அறிந்துகொள்ள முடியாத இடத்துத் தமிழ்ப் புலவோரும் புராணகாரரும் தமிழ் மொழியை ஆதிசிவன் அகத்தியருக்கு உரைத்தான் என்றும், அகத்தியர் இமயமலையிலிருந்து தெற்கு நோக்கி வந்து பொதியமலையிற் குடியேறித் தமிழை மற்றவர்களுக்குப் போதித்தார் என்றும் கூறித் தப்பித்துக் கொண்டனர். இப்புராண வரலாறு மொழியின்நிலை தெரியாத காலத்து ஏற்பட்ட வெளியைத் தமிழிலுள்ள எழுத்துக்கள் நிரப்புவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட புராணக்கதையே யாகும்".**

**இந்நூலாய்வில் பேராசிரியர் சதாசிவம் தாம் கண்ட முடிபுகளை வருமாறு தொகுத்துக் கூறுவர்:**

- மொழியின் தோற்றக் காலத்தில் ஒலியெழுத்துக்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை.

- தாம் உணர்த்த விரும்பிய பொருள்களின் உருவங்களை வரைந்து குறிச்சொற்களால் முதன் முதலில் மக்கள் கருத்தைப் புலப்படுத்தினர்

- இக்குறியீட்டுச் சொற்களில் மூன்று ஒலி வடிவங்களே காணப்பட்டன.

- அந்த ஒலிவடிவங்களுக்கு 1000 ஆண்டுகளுக்குப் பின்னர் வரையறுக்கப்பட்ட பண்புகள் கொண்ட ஒலியெழுத்துக்கள் பிறந்த காலம் சுமார் கி.மு. 2800 எனச் சுமர்மொழி வரலாறு கூறுகிறது.

- தொல்காப்பியர் காலத்திற்கு ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்மொழி தோற்றம் பெற்றதெனக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட ஒரு காலப் பகுதியிலே தமிழ்மொழி தரப்படுத்தப் பட்டுச் செம்மை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

- தொல்காப்பியம் 12 உயிரும் 18 மெய்யும் சார்பெழுத்துக்கள் மூன்றுமாக 33 எழுத்துக்களைக் குறிப்பிடுகின்றது. இது செம்மை செய்யப்பட்ட செந்தமிழுக்கு மட்டுமே பொருந்துவதாகும்.

- தமிழிலுள்ள 12 உயிர் எழுத்துக்களில் அ (ஆ), இ(ஈ), உ(ஊ), எ(ஏ) ஆகிய நான்கு எழுத்துக்களே சுமர்மொழியில் உள்ளன. இது பண்டைத் தமிழ் மொழிக்கும் பொருத்தமாகும். ஒ - ஓ, அய் - ஐ, அவ் - ஔ என்பன ஏற்கனவே வழக்கிலிருந்த உயிரெழுத்துக்களின் சேர்க்கையாற் பின்னர் தோன்றியவை.

- மிகத் தொன்மைக் காலத்துத் தென்னிந்திய அகழ்வுப் புதையல்களிலிருந்து மிகத் தொன்மையான எழுத்து வடிவங்கள் கிடைக்குமாயின் தமிழ் எழுத்துக்களின் பண்டைய நிலையை அறிந்து கொள்ளலாம்.

**சுமர் மொழியின் இலக்கண அமைப்பு, சொல் வடிவங்கள் என்பன தமிழில் உள்ளனவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றமையின் சுமர்மொழி பண்டைத் தமிழிலிருந்து கிளைத்த ஒருமொழி என்றும், அதில் காணப்படும் சொல் வடிவங்கள் அழிந்துபோன பழந்தமிழ்ச் சொற்களைப் பெரிதும் ஒத்திருக்கின்றன என்றும் இரு கோட்பாடுகளை இந்நூலிற் பேராசிரியர் நிறுவியுள்ளார். மேலும் சுமேரிய மொழியை ஆராய்ந்தபோது அது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும், அது தமிழ்மொழியோடு மிகவும் நெருங்கிய**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு கொண்டிருப்பதையும் அறிந்துகொண்டார். சுமேரிய மொழிக்கு அதிர்ஸ்டவசமாக கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்து ஆதாரங்கள் கிடைத்த நிலையில், அந்த ஆதாரங்களைத் தமிழ் மற்றும் திராவிட மொழிகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து தமிழின் தொன்மையைச் சாற்றுகளுடன் முதன்முதலாக நிறுவியரும் பேராசிரியர் சதாசிவம் அவர்களேயாவார்.

### இந்த ஆய்வில் பேராசிரியர் பயன்படுத்தியுள்ள முக்கியமான துணைநூல்கள் வருமாறு:


1. Alexander Kondratov, The Riddles of three Oceans, Progress Publishers, Moscow, 1974
2. George A. Barton, The Origin and Development of Babylonian Writing, Leipzig, 1913
3. Robert Caldwell, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, University of Madras. 1961.
4. Edmond, I Gordon, Sumerian Proverbs, Glimpses of Everyday life in Ancient Mesopotamia, University Museum, Philadelphia, 1959
5. Samuel Noah Kramer, The Sumerians, Their History, Culture, and Character, The University of Chicago Press. 1968.
6. "Indian Ocean, the cradle of the Human Race" – Indian Foreign Review 1980, reproduced in the Weekend. Sunday, August 3, 1980.
7. S. N. Kramer, "Studies in Sumerian Phonetics, Archive Oriental, Vol. VIII, No. I, May 1936
8. தொல்காப்பியம், க. வெள்ளைவாரணனார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1957.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (நூல் - 4) மொழியியலும் தமிழ்மொழி வரலாறும் - 2021

பேராசிரியர் சதாசிவம் அவர்கள் இந்நூலைப் பல ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி நிறைவு செய்திருந்தார். ஆயினும் இதன் முதல் இயல் மட்டுமே அச்சிடப்பட்டது. அப்பதிப்பும் முழுமை பெறாதநிலையில் அப்படியே பல ஆண்டுகள் அச்சேறாதிருந்தது. அந்நிலையிலே திருமதி திருஞானேஸ்வரி சதாசிவம் அவர்களின் உதவியுடன், அந்நூலை மிகச் சீர்த்தியான முறையில் இந்நூலாசிரியர் (பாலசுந்தரம்.இ) ஒழுங்குபடுத்திப் பதிப்பித்துள்ளார். அந்த நூலின் சிறப்பை விளக்கும் வகையில் அதன் ஒன்பது இயல்களிலும் பேராசிரியர் சதாசிவம் நிறுவியுள்ள மொழியியல், மொழிவரலாறு என்பன சார்ந்த புதுமைக் கருத்துக்கள் இங்கே பதிவுசெய்யப்படுகின்றன. அந்நூல் பின்வரும் 9 இயல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது:

இயல்: I மொழியியல்

இயல்: II மொழி வரலாறு

இயல்: III குறிப்பு மொழிக் காலம்

இயல்: IV ஒலிக்குறிப்பு மொழிக்காலம்

இயல்: V அசைமொழிக் காலத் தமிழ் - (கி.மு. 3000)

இயல: VI உயிரின மெய்களின் தோற்றமும் தொழிற்சொற் பிறப்பும் (கி.மு. 2500)

இயல்: VII மூக்கின மெய்களின் தோற்றமும் பெயர்ச்சொற் பிறப்பும் (கி.மு. 2000)

இயல்: VIII மூலவுயிர்க் குறுக்கமும் வினைச்சொற் பிறப்பும் (கி.மு.2000-கி.மு.1500)

இயல: IX ஒலியழுத்தமும் ஒலிப்பிளவும்

மொழியியல் துறையிலே தமிழ் அறிஞர்களாக இதுவரை, பேராசிரியர்கள் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசன், வி. அய். சுப்பிரமணியம் ஆகியோர் எழுதியுள்ள மொழிநூல், மொழிவரலாற்று நூல்களின் வரிசையில் இந்நூல் புதிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறுகிறது. இளங்கலைமானி, முதுகலைமானி மாணவர்களுக்குப் பாடத்துணைநூலாக அமையும் தகுதியும் இந்நூல் பெற்றுள்ளது. தமிழ் மொழியின் தொன்மை, அதன் தோற்ற வரலாறு, தமிழ் மொழியின் சிறப்பு, திராவிட மொழிக்குடும்பத்தில் தமிழ் மொழியின் தனிச்சிறப்பு முதலான பல்வேறு விடயங்கள் பற்றிய விரிவான விடயங்களை மொழியியல் அடிப்படையிலும் மொழிவரலாற்று நோக்கிலும் ஆராய்ந்து திரட்டிய ஆய்வுத்தரவுகளைக் கொண்டதாகப் பேராசிரியர் இந்நூலை எழுதியுள்ளார். இவை யாவற்றுக்கும் மேலாகப் பேராசிரியர் பல ஆண்டுகளாகச் சுமேரியமொழி ஆராய்ச்சியிற் பெற்ற தரவுகளும் இந்நூலில் ஆங்காங்கே எடுத்தாளப்பட்டுத் தமிழ்மொழியின் தொன்மை நிறுவப்பட்டுள்ளமையும் அந்நூலின் தனிச் சிறப்பாகும்.

'மொழியியலும் தமிழ்மொழி வரலாறும்' என்ற நூலின் முதலாவது இயலாக அமைந்துள்ள **"மொழியியல்"** என்ற பகுதியில் மொழி பற்றிய கருத்துக்கள், மொழியின் வளர்ச்சிப் படிநிலைகள், மொழி வளர்ச்சியில் மூளையின் செயற்பாடு, சமூகத்தில் மொழியின் பயன்பாடு, மொழி ஒரு நாகரிகக் கருவி முதலான பல விடயங்கள் ஆராயப் படுகின்றன. உலகிலுள்ள பல்வேறு மொழிகள் காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டுள்ளனவேனும் அவற்றின் வாழ்க்கை வரலாற்றில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இந்த ஒற்றுமைகள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை மொழியியலாளர் விளக்கிக் காட்டுவர். மொழியினது தோற்றத்தைப் பற்றி இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று, இறைவன் ஆதியிலே மொழியைப் படைத்தான் என்பது; மற்றையது, மனிதனே மொழியைப் படைத்தான் என்பது. உலக மொழிகளது தோற்றம் பற்றிக் கூறும்போது அவை இறைவனால் படைக்கப்பட்டன என்பதே பொதுவான கருத்தாகும். தமிழ்மொழி, வடமொழி, கிரேக்கம், இத்தாலி, ஜேர்மன் முதலான மொழிகளுக்கும் இவ்வாறே கடவுள் அல்லது கடவுளின் தூதர் மொழிகளின் ஆக்கத்திற்குக் காரணகர்த்தாக்கள் எனக் கூறப்படுகிறது. ஆனால் பகுத்தறிவு நோக்கிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியியல் மற்றும் மொழிவரலாற்று அடிப்படையிலும் ஆராய்ந்தோர் (1) மக்களாற் படைக்கப்பட்டவையே உலக மொழிகள் என்ற கருத்தைச் சான்றுகளுடன் ஆராய்ந்து நிறுவியுள்ளமை படித்தறியத்தக்கது.

மனித இனம் தொடக்க காலத்தில் வெற்றொலி, தலை, கை, கால் முதலியவற்றின் அசைவுகளின் (சைகைகள்) மூலமே கருத்துப் பரிமாற்றம் செய்தனர் என்பதே உலக மொழியியலாளரின் ஒருமித்த கருத்தாகும். காற்று. மழை, முழக்கம், மலையருவி, அருவி, ஆறு, கடல், சோலை, விலங்குகள், பறவைகள் முதலிய இயற்கையின் அசைவில் ஏற்படும் ஓசை என்பவற்றை மனிதனும் பின்பற்றித் தாமும் ஒலிக் குறிப்புக்களைப் பயன்படுத்தித் தொடர்பாடல்களை மேற்கொண்டான். அக்காலப் பகுதியை மொழியியலாளர் **ஒலிக்குறிப்புக் காலம்** என்பர். பேச்சுமொழி தோன்றப் பல்லாயிரம் ஆண்டுகளும், அதன் பின்னர் எழுத்துமொழி தோன்ற இன்னும் பல்லாயிரம் ஆண்டுகளும் சென்றிருக்கலாம். இவ்வாறு மொழியினது தோற்றம், அமைப்பு, பயன்பாடு என்பன பற்றிப் பல்வேறு கருத்துக்களை மொழியியலாளர் வெளியிட்டுள்ளனர்.

மொழிகளின் சிறப்பியல்புகள் மாறாது பாதுகாப்பது மொழிமரபு ஆகும். மொழி பிறந்த காலத்தே மொழிமரபும் தானும் உடன்தோன்றி மொழியுடன் ஒட்டி வளர்ந்து, மொழி சிதைவடையாது பாதுகாத்து வந்துள்ளது. காலத்துக்குக் காலம் மக்கள் தம் விருப்பப்படி மொழியின் சிறப்பு இயல்புகளைப் போற்றாது மாற்றியும், திரித்தும் வேறுபடுத்துவார்களேயானால் அவர்களின் மொழி வேற்றுமொழி ஆகிவிடும். இதற்கு எடுத்துக் காட்டாக மலையாளமொழியின் தோற்றத்தைக் குறிப்பிடலாம்.

மனித மூளையின் வளர்ச்சியே மொழியின் தோற்றத்திற்குக் காரணமாகும். மனித மூளையின் வளர்ச்சியை மனிதனின் பேச்சிலும் எழுத்திலும் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய விஞ்ஞானிகள் **மொழி ஓர் அறிவுக்கலை** என்றும், மொழி ஓர் உயிர்ப்பொருள் என்றும் கருதுகின்றனர். மேலும் ஓட்டோ ஜெர்பர்ஸன் என்ற மொழியியல் மேதை, மொழி மனித உடலைப் போன்ற அமைப்புடையது; உடலுக்கு ஊட்டச்சத்து இல்லாது விட்டால் உயிர் பிரிந்து உடலும் சிதறுவது போல், சமுதாயத்திலிருந்து உயிர்ச்சத்துப் பெறாவிட்டால் மொழியும் சிதைந்து விடும் என மொழியியலாளர் கூறுவர் (2). ஓட்டோ ஜெர்பர்ஸனின் இக்கருத்தைப் பேராசிரியர் சதாசிவம் சற்று மாற்றிப் பொருத்தமுற வருமாறு கூறுகிறார்:

> "உயினங்களுக்குள்ள **வாழும் ஆற்றல்** மொழிக்கும் உண்டு. அதுபோன்று வாழும் ஆற்றலையுடைத்தாகிய ஒப்புவமையினால் உயிரினப் பொருள்களோடு மொழியை ஒப்பிடலாம். **எனவே மொழியை ஓர் உயிர்ப்பொருள் எனக் கருதுவதை விட, உயிர்ப் பொருள் போன்றது எனக் கருதுவது பொருத்தம் உடைத்தாகும்."**

**மொழி என்பது ஓர் எந்திரம்** என்ற கொள்கை அமெரிக்க மொழியியலாளர் பலரது கருத்தாகும். இயந்திரத்தின் ஒரு சிறு ஆணி பழுதடைந்தால் எவ்வாறு முழு இயந்திரமும் பாதிப்படைகிறதோ, அதுபோன்றே மனித உடலிற் சிறு பாதிப்பு ஏற்பட்டாலும் ஒருவரது பேச்சில் மாற்றம் அமைவதைக் காண்கின்றோம். மேலும், **மொழி ஒரு சமூகப் பழக்கம்** என்றும், சமூகத்துடன் சேர்ந்து உறவாடித் தொடர்பாடல் செய்யும்போதே மொழியின் பயன்பாடும் வளர்ச்சியும் ஏற்படுகின்றன என்றும் கூறப்படுகிறது. **போலச் செய்தல், ஒப்புவமை ஆக்கம்** இரண்டும் சமூகப் பழக்கத்தினால் மொழி தன்னை வளம்படுத்திக் கொள்கிறது என்ற கருத்தையும் பேராசிரியர் வலியுறுத்துகிறார்.

எழுத்து மொழியானது, பேச்சுவழக்கு மொழியினின்றும் வேறுபட்டதாகும். வழக்கிலுள்ள பேச்சுமொழியில் இலக்கியங்கள் இயற்றப்படுமாயின் அவ்விலக்கியங்கள் கால தேசங்களைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து வாழும் ஆற்றலைப் பெறாவாகும். இலக்கியம் என்ற பெயரில் பலர் படைப்புக்களைப் படைக்கலாம். ஆனாற் காலதேச எல்லைகளைக் கடந்து வாழும் ஆற்றல் பெற்ற அமரவிலக்கியங்களைப் படைப்பதற்கு மொழியறிவும் மொழி உபயோகமும் இன்றியமையாது வேண்டப்படுவனவாகும் எனப் பேராசிரியர் அழுத்திக் கூறுவர். மொழியானது பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் கொண்டுள்ள மரபு பேணற் கொள்கையின் பிரதிபலிபபாகவே வழங்கி வருகிறது. மொழி ஒரு கலை எனவும், மொழி என்பது சமுதாய மரபுகளின் ஒழுங்குமுறை எனவும் கூறப்படுகிறது. இந்தக் கோட்பாட்டை நிறுவுவதற்குப் பேராசிரியர் சதாசிவம் அவர்கள் தொல்காப்பியத்திலிருந்து, "மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்" (மரபியல்-91) என்ற நூற்பாவைச் சான்று காட்டுகிறார்.

மொழியியல் விளக்கம் பற்றிய இவ்வியலில், உளநூலார், மொழிநூலார் முதலிய பல்வேறு அறிஞர் மொழியைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களை விளக்கிக் கூறிய பேராசிரியர், அவ்வறிஞர்கள் கூறும் முக்கிய கருத்துக்களைத் தொகுத்துத் தந்திருத்தல் பயனுடையதாகும்:

- இறைவனாலே தோற்றுவிக்கப்பட்டது மொழி ;
- மனித மூளையினது தொழிற் பாட்டறிகுறி மொழி;
- கருத்தை யுணர்த்த உதவுங் கருவி மொழி;
- நிரல்பட்ட சொற்றொடர் அறிகுறி மொழி;
- வாழும் உயிர்ப்பொருள் மொழி;
- மொழி என்பது ஓர் எந்திரம்;
- மொழி என்பது ஒரு சமூகப் பழக்கம் ;
- இலக்கியத்தின் கருவி மொழி;
- மொழி என்பது ஒரு கலை; (3)
- மொழி என்பது சமுதாயத்து மரபுகளின் ஒழுங்கு முறை.

அந்நூலின் **"மொழி வலராறு"** என்னும் இரண்டாவது இயலிலே தமிழ்மொழியின் தோற்றம், வரலாறு முதலான பல விடயங்கள் விரிவாக ஆராயப்படுகின்றன. ஒரு மொழியின் வரலாறு என்னும்போது அம்மொழியின் உள்வரலாறு, புற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு ஆகிய இரண்டுங் கருத்திற் கொள்ளப்படும். மொழியின் எழுத்து, சொல், சொற்றொடர், சொற்பொருள் என்பனவற்றைப் பற்றிய வரலாற்றை ஆராய்தல் மொழியின் உள்வரலாற்றை ஆராய்தலாகும். காலத்துக்குக் காலம் இவற்றில் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணமாய் அமையும் மக்களின் அரசியல், சமய, சமூக, பொருளாதார வாழ்க்கை முறை முதலியவற்றை ஆராய்தல் புறவரலாற்றை ஆராய்வது ஆகும் (4).

அரசியல், பொருளாதார, வணிக, பண்பாட்டுத்துறைகளில் மக்கள் முக்கியத்துவம் பெறும்போது அவர்களின் மொழியும் உலகிற் செல்வாக்கைப் பெறுகிறது. அக்காலங்களிற் பல புதிய சொற்கள் வழக்குக்கு வருவதும், பழையசொற்கள் பல வழக்கு வீழ்வதும் ஒரு மொழியியல் உண்மையாகும் என்பதைப் பேராசிரியர் மொழிவரலாற்றுக் கண்ணோட்டத்திலே குறிப்பிட்டுள்ளார் (பக். 23). பண்டைக் காலம் முதலாக வழங்கிவரும் ஒரு மொழியின் வரலாறு பற்றிய விளக்கங்களை அறியப் பின்வரும் பொருள் தலைப்புக்கள் உதவும் எனக் கூறி, மொழி வரலாற்றைப் பின்வரும் தலைப்புக்களில் ஆராயும் முறை ஆய்வாளருக்குப் பயன் தருவதாக அமைந்துள்ளது

1. **வரலாற்று மூலங்கள்** (Sources) என்பது இலக்கியம், இலக்கண நூல்கள், கல்வெட்டுக்கள், பிறநாட்டறிஞர் எழுதிவைத்த குறிப்புக்களைத் துணைக்கொளல் (5).

2. **மொழி விளக்கவியல்** (Synchronic stage) என்பது ஒரு மொழியானது அதன் வரலாற்றிற் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியிற் கொண்டுள்ள பண்புகளை விரித்துக் கூறும் இலக்கண நூலாகும். பல மொழிகள் பற்றிய விளக்கவியல்களின் அடிப்படையில் எழுதப் படுவதே மொழியின் முழு வரலாறாகும். மொழி காலத்துக்குக் காலம் மாற்றமடைகிறது. மாற்றமே வளர்ச்சியைக் காட்டுவதாகலின் மொழிவரலாறறு ஆசிரியர் மொழி விளக்கவியல்களை வகுப்பதிலும் அவற்றை ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்பதிலும் அதிக ஆர்வங் காட்டுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **புத்தாக்கவியல்** (Reconstructed stage) என்பது உள்ள தொன்றன் பண்பைப் புதிதாக வரையறுப்பது. உலகத்துப் பழைய மொழிகளாகிய தமிழ், இந்தோ - ஐரோப்பியம் என்பனவற்றிலெழுந்த பண்டைய இலக்கியங்களெல்லாம் அழிந்தொழிந்தன என்பது அறிஞர் கருத்து. அழியாது மிஞ்சியுள்ள இலக்கியங்கள் மொழி வளர்ச்சியின் உச்ச நிலையைக் காட்டுகின்றன. எனவே இவ்விலக்கியங்களின் மொழிநடையையும் இலக்கண நூல்களின் விதிகளையும் ஆதாரமாகக் கொண்டு மொழி வளர்ச்சியின் ஆரம்ப நிலையை வரையறுத்துக் கூறுவது புத்தாக்கவியலாகும்.

4. **மொழியிலே நிகழும் மாற்றங்கள்**: (Linguistic changes) உயிருள்ள மொழிகளெல்லாம் மாற்றம் பெறுகின்றன. ஒரு மொழியின் ஒலி அமைப்பிலுஞ் சொல்லமைப்பிலுஞ் சிறு சிறு மாற்றங்கள் ஏற்படுதல் இயல்பே. மொழியின் அடிப்படையான சொற்றொடர் அமைப்பை மாற்றும் அளவுக்கு மாற்றங்கள் உண்டாகுமாயின் மொழியானது கிளைத்து வேற்று மொழியாகத் திரிந்துவிடும். மொழிகள் நீண்ட கால வாழ்வின் பின்னர், சிறு சிறு மாற்றங்களைப் பெற்றுப் புதிய ஆற்றலுடன் வளர்வதையும், பெரு மாற்றங்களைப் பெற்று ஒன்று இன்னொன்றாக மாறுவதையும் மொழி வரலாறு காட்டுகின்றது (6). மக்கள் வழக்கில் மொழி ஒலிமாற்றம் பெறுவதற்குரிய காரணங்களைப் பேராசிரியர் வருமாறு வகைப்படுத்திக் குறிப்பிடுகின்றார்:

1. ஒலியுறுப்புக்களில் ஏற்படும் மாற்றங்கள்
2. ஒரு நாட்டின் சுவாத்தியநிலை
3. ஒரு நாட்டின் வீறுகொண்ட தேசிய எழுச்சி, ஆடம்பர வாழ்க்கைமுறை, அரசியல் மற்றும் சமயச் சூழல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விரைவாகப் பேசுதல் (எ-டு: அப்போழ்து > அப்போ),
5. விரைவாகப் பேசும்போது இருசொற்களுக்குப் பதிலாக ஒரு சொல் உச்சரித்தல்,
6. மக்களின் சோம்பல் காரணமாகச் உச்சரிப்பில் ஏற்படும் மாற்றம்,
7. நாளாந்தம் பெரிதும் பயன்படும் சொற்கள் மாற்றமடைதல்
8. இலகுவாக உச்சரிக்கப்படுபவை நிலைபெற, கடும் உச்சரிப்புடையவை மறைதல்.
9. உணர்ச்சி நிலையில் உச்சரிக்கப்படும் சொற்கள் மாற்றம்பெறல்
10. முதற்சொல்லில் ஏற்படும் ஒலிமாற்றம் அயற் சொல்லிலும் மாற்றத்தை ஏற்படுத்துதல்
11. இலக்கணகாரர் மறுக்கும் சொற்கள் மறைதல்.
12. பிறமொழிக் கலப்பு. இது பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதாகும் (7).

5. **பிறமொழிக் கலப்பு:** (Borrowing) உலகிலுள்ள எம்மொழியும் தான் பிறமொழிக்குக் கடன்கொடுக்காது கடன்வாங்கும் பண்பு மட்டுங்கொண்டு விளங்குவதில்லை. ஒரு காலப் பகுதியில் தான் வறுமையுற்றபோது பிறிது மொழியினின்றும் கடன் பெறுகிறது. பின்பு தான் செழித்தோங்கி வளர்ந்த காலத்தில் வேற்று மொழிக்குக் கடன் கொடுத்துதவுகிறது. ஒரு மொழி சொற்களின் தேவை நிமித்தம் வறுமையுறுவது எக்காலத்திலெனில் அது புது வேகத்துடன் செழித்து வளரத் தொடங்குங் காலத்திலாகும். கடன்வாங்கல், கடன் கொடுத்தல் ஆகிய இரண்டு செயல்களையும் சிறந்த மொழிகள் எல்லாஞ் செய்துவருவதனாலே "மொழிக்கலப்பு" என்ற சொல்லுபயோகம் மிகப் பொருத்தமானது எனப் பலர் விளக்கம் தருவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. மொழியின் வளர்வுந் தேய்வும்: (Growth and decay )

மொழிகள் எவ்வாறு வளருகின்றன. அவை எவ்வாறு தேய்கின்றன என்பன பற்றியெல்லாம் மொழிவரலாற்று ஆசிரியர்கள் ஆராய்வர். உலகத்து மொழிகள் ஆதியிற் கொண்டிருந்த ஒலியமைப்பு, சொல்லமைப்பு என்பனவற்றை அறிந்த பின்னரே மொழிகளின் வளர்வைப் பற்றி ஆராயமுடியும். இன்றைய உலகத்து வழக்கு மொழிகளுட் சில ஆறாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவருவதனாலும், வரிவடிவம் தோன்றுவதற்கு முன்னே பேச்சு நிலையிலே நிலவிய காலத்து மொழிகள் எத்தனை நூற்றாண்டுகளாக எவ்வித மாற்றங்களைப் பெற்றிருந்தன வென்று கூறுவது முடியாதாகையாலும் மொழிகளின் வளர்ச்சிக் காலத்திய ஆரம்ப நிலையைப் பற்றிய திட்டவட்டமான கருத்துக்களை எவருங் கூறிற்றிலர். அன்றியும் ஒவ்வொரு மொழியும் அதற்கெனவுரிய சிறப்பு இயல்புகளைக் கொண்டுள்ளதாகையின் உலகத்துள்ள ஆயிரக் கணக்கான மொழிகளெல்லாம் ஒரே வகையில் வளர்ந்தும் தேய்ந்தும் வருகின்றன என்று கூறுவதும் பொருந்தாது எனத் தனது கருத்தை உறுதியாகக் கூறுகிறார்.

## 7. மொழி வளர்ச்சியின் நான்கு படிநிலைகள் விளக்கப்படும் விதம்:

**(அ) தனி நிலை**: எல்லா மொழிகளும் ஓரசைச் சொற்களையே தம் பிறப்புக் காலத்திற் கொண்டிருந்தன. இச்சொற்கள் அடிச்சொற்களென்றும் வேர்ச்சொற்கள் என்றும் அழைக்கப்படும். இவ்வோரசைச் சொற்களெல்லாம் பெயராகவும் வினையாகவும் வழங்கப்பட்டன. ஒரே வடிவமுடைய சொல்லே இருவேறு முறையாக உச்சரிக்கப்படும் ஒலியழுத்தம் பெற்றுப் பெயராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையாகவும் வழங்கிற்று. இந்நிலை சிறிது வளர்ச்சி அடைந்த பின் தனித்தனியான பெயர், வினை வடிவங்கள் உருவாயின. உருபுகளும் இடைச் சொற்களும் உண்டாகாத அக்காலத்திலே சொற்கள் தொடர்ந்து தனித்து நின்று பொருள் புலப்படுத்தின. பின்வருந் தமிழ்ச் சொற்றொடர் போன்றவை மொழிகளின் வளர்ச்சிக்கால ஆரம்பத்திலே நிலவி இருக்கலாம் என்பதை வருமாறு விளக்குகிறார்:

எ-டு: நீ கல் மீ எறி. (நீ கல்லை மேலே எறி) இது பற்றிய விரிவான விளக்கம் நூலிலே தரப்பட்டுள்ளது.

**(ஆ) ஒட்டுநிலை**: நட + கின்று +ஆன் - நடக்கின்றான் - இது ஒட்டு நிலைச் சொல்லாகும்.

**(இ) உட்பிணைப்புநிலை:** உட்பிணைப்புநிலை என்பது ஒன்றாக ஒட்டிநின்ற ஓரசைச் சொற்கள் காலப்போக்கிற் பல ஒலி மாறுதல்களைப் பெற்று, அவற்றின் பழைய உருவந் தெரியாதவாறு இரண்டறக் கலந்து நிற்கும் நிலையாகும். ஆங்கில மொழியிலுள்ள Went என்ற சொல் இதற்கு உதாரணமாகும்.

**(ஈ) சொற்றொகை நிலை**: உட்பிணைப்புமொழிகள் வளர்ந்து சொற்றொகைநிலை மொழிகளாக மாறின. நீண்ட ஒரே சொல்லே வசனமாக அமைதலாகும். அமெரிக்கச் செவ்விந்தியர் பேசும் மொழிகள் சொற்றொகைநிலையில் உள்ளன என்பர்.

உலகத்துப் பண்டைய மொழிகளிற் பல பேச்சு வழக்கற்று ஏட்டுவழக்கு மட்டும் பொருந்திய இறந்த மொழிகளாயின; தமிழ் மொழியானது இருவகை வழக்கும் பெற்ற மொழியாக வளர்ந்து வந்துள்ளது. இதற்குக் காரணம், தமிழ் மக்கள் தம் வாழ்க்கை முறைகளிற் பெரு மாற்றங்களை விரும்பாது பண்பாட்டைப் பேணி, மரபைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் பாதுகாத்துவருதலே என்பதும் பேராசிரியரின் கருத்தாகும்.

மூன்றாவது இயலில் **மொழி வரலாற்றில் குறிப்பு மொழிக் காலம்** பற்றி விளக்குகிறார். மொழி வளர்ச்சி நிலையிற் குறிப்புமொழி, ஒலிக்குறிப்பு மொழி, உருவ எழுத்து மொழி, அசைமொழி எனப் பலதிறப்படும். 'குறிப்பு மொழி' என்பது கைகாட்டுதல், கண்காட்டுதல், தலையசைத்தல் முதலிய அறிகுறிகளின் மூலம் ஒருவர் இன்னொருவருக்குத் தன் கருத்தை நேரிற் புலப்படுத்துதலாகும். உலகமொழிகள் அனைத்தும் பொதுவாக மக்களால் இயற்கையாகவே தோற்றுவிக்கப் பட்டவையாகும் (8). தமிழ்மொழியும் உலகத்து இயற்கை நியதிப்படியே மக்களால் உருவாக்கப்பட்டு மக்களால் வளர்க்கப்பட்ட மொழியாகும். இயற்கையாகத் தோன்றிய மொழிகளெல்லாம் உலக மக்கள் எல்லோரிடமும் ஆதிகாலத்திற் குறிப்புமொழியாக வழங்கிற்று என்ற கருத்தைத் தொல்காப்பியர் கூறும் குறிப்புமொழி விளக்கத்தையும் துணைக்கொண்டு பேராசிரியர் அவர்கள் வருமாறு விளக்குகிறார்:

"எழுத்தொடுஞ் சொல்லொடும் புணராதாகிப்
பொருட் புறத்ததுவே குறிப்புமொழி யென்ப"
(தொல். பொருள். நூற்பா. 491)

எழுத்தொடுஞ் சொல்லோடும் புணராத கைகாட்டுதல், தலையசைத்தல் முதலிய குறிப்பு மொழி உலக மக்கள் அனைவராலும் பொருள் விளங்கிக்கொள்ளும் ஆற்றல் உடையதாய் இன்றும் வழக்கிலிருப்பதை யாவரும் அறிவர். மனித சமுதாயம் முழுவதற்கும் பொதுமொழியாகவுள்ள குறிப்புமொழி மனித சமுதாயத்தினர் முதன் முதற் கருத்தை உணர்த்த வகுத்துக் கொண்ட தொடர்புமொழி என்பதைப் பேராசிரியர் அவர்கள் நன்கு விளக்கியுள்ளார். குறிப்புமொழி, பேச்சுமொழி, எழுத்துமொழி என்ற மூன்றும் மொழி வளர்ச்சி அடைந்த ஒவ்வொரு சமூகத்திலும் உடன்வாழ்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுமொழிக் காலத்திலே நாவின் இன்றியமையாமையைப் போன்று, குறிப்புமொழிக் காலத்திற் கையின் இன்றியமையாமை இருந்தமை பற்றியும் பேராசிரியர் எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குவது படித்து இன்புறத் தக்கதாகும் (பக். 56). வாய்ப்பேச்சின் உபயோகத்தை அறியுமுன் ஆதி மனிதர் கருத்தையுணர்த்தும் அறிகுறியாகக் கொண்டிருந்தனவற்றுள் மெய்ப்பாடும் ஒரு வகையாகும் என்பதும் பேராசிரியரின் கருத்தாக உள்ளது:

> நகையே அழுகை இளிவரன் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
> அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப.
>
> (தொல். பொருள். நூற்பா. 251)

என்னும் நூற்பாவிலே தொல்காப்பியர் கூறும் எட்டுவகை மெய்ப்பாடுகளும் கருத்தைப் புலப்படுத்துவதற்கு ஆதி மனிதர் பயன்படுத்திய சில அறிகுறிகளாகும் எனப் பேராசிரியர் கூறுவர்.

இன்றைய மொழியியலாளர் பலர் **பேச்சு மொழிக்கும் குறிப்பு மொழிக்கும் நெருங்கிய தொடர்பு** உண்டென்பர். உணர்ச்சியின் ஏவலைக் கேட்டு நின்ற **கை** முதலிய உறுப்புகளுக்குப் பதிலாக **நா** முதலிய உறுப்புக்கள் தொழிற்படத் தொடங்கியதன் விளைவே பேச்சுமொழியாகும். எனவே பேச்சு மொழியினது தோற்றத்தை அறியவேண்டின் குறிப்பு மொழியின் பண்பை அறிதல் மிக இன்றியமையாதது என எட்வார்ட் சபீர் (9) கூறும் மொழியியல் தத்துவத்தைப் பேராசிரியர் தக்கவாறு விளக்கியுள்ளமை நோக்கத்தக்கது.

நான்காம் இயலிலே தமிழ்மொழி வரலாற்றில் **ஒலிக்குறிப்புமொழிக் காலம்** பற்றி விளக்குகிறார். ஒலிக் குறிப்புமொழி யென்பது எழுத்தொடுஞ் சொல்லொடும் புணராததாய் ஒலியொடு கூடிய குறிப்புமொழியாகும். இன்றைய பேச்சு மொழியைப் போலல்லாது மனிதரின் முற்கு, வீளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலதை முதலியனவும், விலங்குகள், பறவைகள் ஆதியனவற்றின் ஒலி முதலியனவும் போலப் பொருளுணர்த்திய பண்டைக் கால மொழியே "ஒலிக்குறிப்புமொழி" ஆகும். கைகாட்டுதல், தலையசைத்தல் முதலிய குறிப்புக்களினாற் கருத்தைப் புலப்படுத்திய ஆதிமனிதர், இயற்கையிற் கேட்ட ஒலிகளைப் பின்பற்றித் தாமும் இசையொலி எழுப்பிய காலத்தில் அவர் வாயிலிருந்து வந்த ஒலிக்கூட்டங்கள் பொருளை யுணர்த்திய வரலாறும் உண்டு. தமிழின் மூலச்சொற்கள் "இசை", "குறிப்பு", "பண்பு" என்னும் மூன்றனடியாகப் பிறந்துள்ளன என்பர் தொல்காப்பியர் (தொல். சொல் 297. எழுத்து 482). மனித மூளை விருத்தியடையும்போது குறிப்புமொழி, ஒலிக்குறிப்பு மொழியாகவும் பின் பேச்சுமொழியாகவும் படிப்படியாக மாறுகின்றது. இந்த மொழிவரலாற்றின் ஆரம்ப காலத்து இயல்பைப் பேராசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

ஆதி மனிதரின் இசைப்பாட்டுக்களிலிருந்தே மொழி உதய மாயிற்று. மலையிலிருந்து விழும் "இழும்" என்னும் அருவியின் இசையையும், தண்ணென வீசும் மந்தமாருதத்தின் இசையையும், இன்பவுணர்ச்சியை ஊட்டும் வானம்பாடியின் இனிய பாடலையும், இவ்வொலிகள் எல்லாம் மலையிற்பட்டு எழும் எதிரொலியையுங் கேட்டு இன்புற்ற ஆதிமனிதர் இயற்கையின் இன்பத்திற்றிளைத்து ஆடிப்பாடி விளையாடிய போதே அவன் குரல் மென்மை சான்று கருத்தைப் புலப்படுத்த ஆரம்பித்தது என்பர் ஓட்டோ ஜெர்பர்சன் (10)

**சங்க நூல்களில் ஒலிக்குறிப்பு:**

சங்ககால ஒலிக்குறிப்புச் சொற்களை ஆராயின் பண்டைய ஒலிக்குறிப்புக்களின் ஒரு சில பண்புகளை அறியமுடியும் என்பதைப் பேராசிரியர் பல்வேறு சான்றுகளின் மூலம் விளக்கிக் காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக பின்வரும் '**ஒல்**' ஒலிக்குறிப்புச் சொல்லை நோக்கலாம்:

"ஒல்லென ஒலிக்குந் தேரொடு" (புறநா. 144-13)
"ஆஅ ஒல்லெனக் கூவுவேன் கொல்" (குறுந். 28-3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை போன்றே சில், ஊம், இம், கம், சும், துடு, இழும், இரும், உரும், தண், கிண்கிணி, குறுகுறு, குய், ஒய், ஐ, தெற, பை, தவ், கதும், தண, குய், ஓய், வவ் > வெள, **கூ,** புல், துண் - இவ்வாறு பல ஒலிக்குறிப்புச் சொற்கள் சங்க காலத்தில் வழங்கியமையைப் பேராசிரியர் அரிதின் முயன்று சான்றுகளுடன் விளக்கியுள்ளார். அவை காலப் போக்கில் வெவ்வேறு சொற்கள் தோன்றக் காரணமாயின. சான்றாகக் **'கூ'** என்ற ஒலிக்குறிப்புச் சொல் > கூகை, கூகைக்கோழி, கூவு, கூவுதல், கூப்பிடு முதலான சொற்களின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று. சங்க இலக்கியம் முதல் தேவாரகாலம் வரை கூ என்ற சொல்லின் பரிணாம வளர்ச்சியை நூற்றுக் கணக்கான இலக்கியச் சான்றுகள் தந்து பேராசிரியர் விளக்கியுள்ளார். இவ்வாறாகச் சொற்களின் தோற்றம் ஒலிக்குறிப்புச் சொற்களிலிருந்து ஆக்கம் பெற்றுள்ளமையைச் சங்க இலக்கியம், தொல்காப்பியம், அவற்றுடன் உரையாசிரியர்களின் உரைகள் என்பவற்றிலிருந்து எடுத்துக் காட்டிய சொற்பெருக்கம் பேராசிரியரின் மொழியியல் அறிவையும் சங்க இலக்கியப் புலமையையும் புடமிட்டுக் காட்டுகின்றது.

தமிழ்மொழி வரலாற்றில் **அசைமொழித் தமிழ்** வழங்கிய காலத்து (கி.மு. 3000) மொழிஇயல்பைத் தனியாக விரிவாக ஆராய்ந்துள்ளார். அசைமொழிக் காலம் என்பது, சொற்கள் மட்டும் வழக்கிலிருந்த நிலையைக் குறிப்பதாகவே அமைந்து இருந்தது. ஒலியெழுத்துக்கள் தோன்றுவதற்கு முன்பு தமிழிலே சொற்கள் பிறந்துவிட்டன என்பது ஒரு மொழி நூலுண்மையாகும். இச்சொற்கள் எல்லாம் ஓரசைச் சொற்களே. ஓரொலிக் கூட்டம் ஒரு பொருளைச் சுட்டும் சொல்லாகப் பயன்பட்டது. உதாரணமாக பா என்பது ஒரு கூட்டொலிச் சொல். பா (பாட்டு) என்னும் சொல் ப்+ஆ ஆகிய ஈரெழுத்தாலாயது என்னும் விளக்கம் பிற்காலத்திய இலக்கண நூல்களிற் காணப்படுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசைமொழிக் காலத் தமிழ்நாடு:

அசைமொழிக் காலத்தில் இந்தியாவில் வாழ்ந்தோர் தமிழின மக்களும் முண்டாமொழி பேசிய மக்களுமாவர். பழைய கற்காலம், புதிய கற்காலம் முதலிய ஆதிகாலத்திலிருந்தே தென்னிந்தியாவில் மக்கள் வாழ்ந்து வந்தனரென்பதை ஆதிச்சநல்லூர், பெல்லாரி முதலிய இடங்களிற் கிண்டியெடுக்கப்பட்ட சான்றுகள் காட்டுகின்றன. இவர்கள் தமிழர்கள் என்பதை வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, முதலிய தமிழின மொழிகளில் இன்றும் மாறாதிருக்கும் பழந்தமிழ்ப் பண்புகளும் பழந்தமிழிலக்கிய வழக்குகளும் அசைமொழிக்காலத் தமிழின் பண்பை ஒருவாறு வரையறுக்க உதவுவன. அசைச் சொற்கள் மிகக் குறுகிய வடிவம் உடையன ஆதலின் அவை வழக்கிலிருந்த காலத்திற் பெரும் ஒலிமாற்றங்களைப் பெற்றிருக்கமாட்டா. அசைமொழிக் காலத்தின் பின்பு தமிழ்ச்சொற்கள் நீண்டு வளர ஆரம்பித்தமையின் மக்கள் பேச்சு இயல்பிற்கேற்பச் சிற்சில ஒலிமாறுதல் பெற்றுப் பிற்காலத்தில் பல மொழிகளாகக் கிளைத்தன என்கிறார்.

## அசைமொழிச் சொற்கள்:

மொழியானது தன் வளர்ச்சிக் காலத்தில் சில பழைய வழக்குகளை இழந்துவிட, புதிய சில வழக்குக்களைத் தழுவிக் கொள்கிறது. சமுதாய, பண்பாட்டு வளர்ச்சிக்கு ஏற்பச் சொற்களும் வாழ்கின்றன. பண்டைக் காலத்தில் மனித நாகரிகம் ஆமை வேகத்தில் வளர்ந்துவந்ததென வரலாற்றாசிரியர்கள் மதிப்பிடுவதனால் மொழிகளில் மிகச் சில சொற்களே வழக்கு வீழ்ந்திருக்கலாம். அதுபோன்று மிகச்சில புதிய மூலவடிவங்களே சங்க காலத்துக்கு முற்பட்ட காலத்திலே தோன்றியிருக்கலாம். பழைய அசைச் சொற்கள் விரிந்து பெருகிய வரலாற்றையே தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் காட்டுகின்றன. அசைமொழிக் காலத் தமிழின் மூலவடிவங்களாகப் பலவற்றைப் பேராசிரியர் விளக்குவர். சான்றாகச் சில அசைமொழிச் சொற்களைக் குறிப்பிடலாம்:

கா - காகம், தா - பரவுதல், ஈ - இரத்தல்,
கீ - கீழ், மீ - மேல், வீ - வில், கூ - வளைதல்

இவ்வாறு இருபத்தொரு அசைச்சொற்கள் தமிழ்மொழியின் வேர்ச் சொற்களாக விளங்கின எனப் பேராசிரியர் விளக்கம் தந்துள்ளார்.

**அசைச் சொற்களிலிருந்தே** சொற்கள் தோற்றம் பெற்றுள்ளன என்பதைப் 'பா' என்னும் அசைச்சொல்லைக் கொண்டு வருமாறு விளக்குகிறார்:

பாய் - பாசி - பை - பால் - பாடு - பாட்டு - பாண் - பாரம் - பாறு - பாரை - பாவல் - பாகல் - பார்ப்பு முதலியன நெடில்முதற் சொற்களாகும்.

பய - பச - பர -பயலை - பசலை - பசுமை - பயிர் - பயறு - பகர் - பக்கு - பகு - பகல் - பயம் - பயம்பு - பள்ளம் - படு - படர் - பண் - பனுவல் - பன்னல் - பருத்தி - பரிஇ - பருந்து - பறவை - பலா - பல முதலியன குறில்முதற் சொற்களாகும்.

இவற்றுள் நெடில்முதற் சொற்கள் பல சங்ககாலத்தின் பின் வழக்கிழந்து அருகியமையையும், குறில்முதற் சொற்கள் பெருகி வளர்ந்து வருகின்றமையையும் நோக்கும்போது தமிழ் மொழி வளர்ச்சி வரலாற்றுப் பாதை இதுவெனத் தெள்ளிதிற் புலனாகின்றது. அசைச்சொற்களே தமிழ்மொழியின் வேர்ச் சொற்கள் எனவும் பேராசிரியர் குறிப்பிடுவர். இவ்வியலில் அசைமொழிச் சொற்கள், அசைமொழிச் சொற்களின் பண்பு, மற்றும் அசைச்சொல்லுயிர்கள் நெட்டுயிரின் தன்மையாக ஒலித்தல், அசைச் சொற்களின் பொருள்வளம், தமிழ் அசைச் சொற்களிலிருந்து தோற்றம் பெற்ற சங்ககால வழக்குச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் முதலானவற்றை சான்றுகளுடனும் இலக்கிய மேற்கோள்களுடனும் நிறுவியுள்ளமை பேராசிரியரின் மொழிப் புலமையை வெளிப்படுத்துகின்றன.

## உயிரின மெய்களின் தோற்றமும் தொழிற்சொற் பிறப்பும்

(கி.மு. 2500) என்ற ஆறாவது இயலிலே காலப்போக்கில், அசைச்சொற்கள் கடைநீண்டு சொற் பெருக்கம் ஏற்பட்டமை தமிழ் மொழி வளர்ச்சியின் முதலாவது படியாகும் என்றும், கா, தீ, பூ முதலிய அசைச் சொற்கள் ய், ர், ழ் ஆகிய உயிரின மெய்யொலிகளை ஈற்றிற்றழுவியபோது பிறந்த புதுச் சொற்கள் தமிழ்மொழி வரலாற்றிலே தொழிற்சொற்கள் எனக் குறியிடப்படுகின்றன என்பதும் விரிவாக ஆராயப்படுகின்றன. கார், தீய், பூழ் முதலியனவே அத்தொழிற் சொற்களாகும். சான்றாக ஆய் = உள்நோக்கல், ஆர் = ஆர்த்தல், ஆழ் = அகவுதல் எனத் தொழிற் பெயராயின. இவை பற்றிய விரிவான ஆய்வைத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் என்பவற்றை ஆதாரமாகக் காட்டிப் பேராசிரியர் ஆய்வு செய்துள்ள புலமைத் திறன் மேலும் விதந்து கூறப்பட வேண்டியதாகும்.

தமிழ்மொழி வரலாற்றிலே கி.மு. 2000 ஆண்டளவில் **"மூக்கின மெய்களின் தோற்றமும் பெயர்ச்சொற் பிறப்பும்"** தோன்றிவிட்டமை பற்றி ஏழாவது இயலில் ஆராய்கிறார். தொல்காப்பியர் காலத்தில் ங, ஞ, ண, ந, ம, ன ஆகிய ஆறு மெல்லின ஒலிகள் தமிழிலிருந்தன. இவற்றுள் ந, ம, ன, ஆகிய மூன்று மெல்லொலிகளே தமிழிற் பெயர்ச் சொற்கள் தோன்றிய காலத்தில் வழக்கிலிருந்தன எனவும், ஏனைய மூன்று மெல்லொலிகளாகிய ங, ண, ஞ என்பன பின்னர்த் தோன்றின எனவும், சங்கநூற் சொல்லமைப்பு முறைகளும் தமிழின மொழிகளிற் காணப்படும் இயல்புகளும் இக்கொள்கையையே வற்புறுத்தும் எனவும் பேராசிரியர் மொழியியல் அடிப்படையில் நிறுவிக்காட்டியுள்ளார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ-டு: தேன் + கு > தேங்கு , தெங்கு,

தேன் , தென் + அய் > தென்னய் (தென்னை)

என்னுஞ் சொற்களை நோக்கின் இதனுண்மை புலப்படும் என்பர்.

'நான்' என்பது தன்மை ஒருமைப் பெயராகச் சங்க காலத்தில் வழக்கிலில்லை. 'யான்' என்பது மட்டுமே அக்கால வழக்கிலிருந்தது. 'நான்' என்பதிலுள்ள நகரமெய் முன்னிலைக்கு உரியதென்பதை நீ, நாம், நீம் முதலிய சொற்களை நோக்கி அறியலாம். எனவே முன்னிலை நகர மெய் தன்மையை வந்தடைந்தது திசை மாற்றத்தினாலாகும். தன்மை சுட்டும் 'ஆ' எவ்வாறு படர்க்கையிடத்துத் தகரமெய்யோடு சேர்ந்து தான், தாம் என திசை மாறி வழங்கிற்றோ அதுபோன்றே முன்னிலை நகரம் தன்மையை அடைந்தது. இத்திசை மாற்றம் ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளின் பின்னர் நடந்ததாகும் என நூலிலே விரிவான விளக்கம் தரப்படுகின்றது.

தமிழ்மொழி வளர்ச்சி வரலாற்றிற் சொற்கள் கடை நீளல் அறியப்பட்டு, ஆ, ஈ, ஊ என்னும் மூவகை நெட்டுயிர்கள் கடைநீண்ட ஆதிகாலத்தில் உயிர்ப் பண்புமிக்க **ய் ர் ழ் ன் ம்** ஆகிய ஐந்து மெய்களில் ஒன்று சேரும்போது வினைச் சொற்கள் தோன்றியமை (ஆ > ஆய், ஆர், ஆழ், ஆன், ஆம்) இந்நூலின் முன்னியல்களிலே தமிழ்மொழி வரலாற்று அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. **"மூலவுயிர்க் குறுக்கமும் வினைச்சொற் பிறப்பும்" (கி.மு. 2000 - கி.மு. 1500)** என்ற எட்டாவது இயலில், அடிச் சொல்லின் மூல உயிர்க் குறுக்கமே வினைச்சொல் பிறப்புக்குக் காரணம் ஆகின்றமை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கியுள்ளார்.

தொடக்க காலத்திலே நீண்ட ஒலிப்புடைய ஓர் அசையாக வழங்கிய சொற்களுடன், மேற்குறிப்பிட்ட மெய்யெழுத்துக்கள் சேரும்போது வினைச்சொற்கள் பிறக்கும் முறையினைப் பல்வேறு எடுத்துக்காட்டுக்களுடன் விரிவாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கப்படுகின்றது. கீழ்த் தரப்பட்டுள்ள அட்டவணையிற் சொற்பிறப்புக் காலத்தில் அசைச் சொற்கள் > தொழில் சுட்டும் சொல்லாகி > பின்னர் பெயர் சுட்டும் சொல்லாகிப் > பின்பு வினைச்சொல்லாகத் தோற்றம் பெறுவதைப் பேராசிரியர் வருமாறு விளக்குவர்:

| அசைச்சொல் | தொழிற்சொல் | பெயர்ச்சொல் | வினைச்சொல் |
|---|---|---|---|
| ஆ | ஆர் | ஆன் | அரி |
| கா | காழ் | கான் | கர |
| தா | தாழ் | தாம் | தரு |
| நா | நார் | நாம் | நய |
| பா | பாய் | பான் | பர |
| மா | மார் | மான் | மரு |
| வா | வாய் | வான் | வரி. |

பிறப்புக் காலத்தில் வினைச் சொற்கள் முதலும் ஈறும் குற்றுயிர்களைக் கொண்டிருந்தன. எனவே வினைச் சொற்கள் ஈரசைக் காலத் தமிழுக்கு உரியவை. பெயர்ச் சொற்கள் தோற்றக் காலத்தில் ஓரசைச் சொற்களாகவே பிறந்தன. வினைச் சொல்லுக்கு முற்பட்டது பெயர்ச் சொல்லாகும். பெயர்ச் சொல்லுக்கு முற்பட்டது தொழிற் சொல். இம்மூவகைச் சொற்களின் வேராக அமைபவை அசைச் சொற்களாகும்.

தமிழ் வினைச் சொற்கள் தம் பிறப்புக் காலத்தில் காலங்காட்டும் பண்பைக் கொண்டிருக்க வில்லை. அடிச் சொற்களுடன் இ, உ என்பன இணைந்தே இறந்த காலத்தைப் பின்னர் குறித்தன:

எ-கா: அரி + இ = அரிஇ
மரீ + இ = மருவி
மரு + உ = மருஉ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்க கால வினைச்சொல்லில் வினைமுற்றோ அல்லது வினை எச்சமோ தோன்றவில்லை. இறந்த காலம் அல்லாது எல்லாம் வருங்காலம் என்பது பண்டைத் தமிழர் கொள்கையாக இருந்தது. இதனால் வினைச் சொல் காலம் காட்ட ஆரம்பித்தபோது இறந்த காலத்தை மட்டும் காட்டும் சிறப்புருவம் பெற்றது. வருங்காலம் காட்டுந் தனிவடிவம் அக்காலத்தில் தோன்றவில்லை எனப் பேராசிரியர் விளக்கம் கூறுகிறார்.

மேலும் தொல்காப்பியம் கூறும் **உரிச்சொல்** நூற்பாவில் (தொல்.சொல்.299) உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்னும் மூன்றனடியாய்ப் பிறப்பதையும், அவை பெயராகவும் வினையாகவும் மெய்தடுமாறி மாற்றம் பெறும் என்பதையும் எடுத்து விளக்கி, அச்சொற்களும் தொடக்க காலத்தில் வினையடிகளாகச் செயற்பட்டமையை விளக்குவது புதுமையாக மட்டுமல்லாது, பேராசிரியரின் மொழியியல் புலமையையும் புலப்படுத்துகின்றது.

தமிழ்மொழி வரலாற்றிலே தோன்றிய அசைச் சொற்கள், தொழிற்சொற்கள், பெயர்ச்சொற்கள், வினைச் சொற்கள் (எ-கா: ஆ, ஆர், ஆன், அரி) ஆகியவற்றிலுள்ள நெடில் எழுத்துக்கள் குறுகியபோது அவை வல்லொலிகளைத் தழுவின என்பது தமிழ்மொழி வரலாற்றில் அறியப்படுகிறது. அசைச்சொல்லின் மூல உயிர் குறுக்கத்தின் விளைவாக அதனைத் தொடர்ந்து வரும் மெய்யெழுத்து அழுத்தி உச்சரிக்கப்படுவதை மொழியியலாளர் "**ஒலியழுத்தம்**" என்பர். ஒலியழுத்தம் ஒலிப்பிளவுக்குக் காரணமாய் அமைவது மட்டுமன்றி எடுத்தல், படுத்தல் என்னும் பாண்மையில் ஓரெழுத்தொலி உச்சரிக்கப்படுவதற்கும் காரணமாயிற்று. எடுத்தல் என்பது உயர்த்திக் கூறுதல். இதுவே ஒலி அழுத்தம் எனப்படுகிறது. இதனைத் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து 76. 80 ஆம் நூற்பாக்கள் விளக்குகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி மனிதரின் ஏவல் கேட்டு நிற்பதாகலின் அவர் விருப்பத்திற்கேற்ப மொழியும் மாற்றம் பெற்று மனிதரின் கருத்துப் புலப்பாட்டைத் தெளிவாக்கிற்று. ஒலியழுத்தங் காரணமாகப் பிறந்த புத்தொலிகள் ற், ள், ட், ண், ல் என்னும் மெய்களும் ஐ, ஔ என்னும் உயிர்களும், ஆய்தம், குற்றியலுகரம் ஆகிய சார்பொலிகளுமாகும். மூலவுயிராகிய நெடில் குறுகி ஈரசைச் சொற்களைத் தோற்றுவித்த கி.மு. 2000 - கி.மு. 1500 ஆகிய காலவெல்லையினுள் இவ்வொலிகள் தமிழிற்றோன்றின வெனக் கருதக்கிடக்கின்றது என்கிறார்.

தொழிற்சொற் பிறப்புக் காலத்திலே நெட்டுயிரின் பின்னே தோன்றியதாகிய ரகரமெய்யொலி ஒலியழுத்தத்தின் காரணமாக றகர மெய்யாகவும் மாறிற்று. எனவே ரகரம், றகரத்தை விடப் பழமையானதாகும். சங்கத் தமிழிலுள்ள றகரவொலி பழந்தமிழ் ரகரத்தின் விகாரமாகும். இவ்விடயங்கள் யாவும் அந்நூலின் **ஒலியழுத்தமும் ஒலிப்பிளவும்** என்னும் ஒன்பதாம் இயலில் விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக மிகப் பரந்த அளவில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு உலக மொழியிலாளர்களின் கருத்துக்களையும், தமிழ் இலக்கியம், இலக்கணம், உரைகாரரின் உரைகள், சுமேரிய மொழிச் சான்றுகள், திராவிட ஒப்பிலக்கண விதிமுறைகள் முதலானவற்றை எல்லாம் சான்றாகக் கொண்டு பேராசிரியர் சதாசிவம் எழுதியுள்ள **மொழியியலும் தமிழ்மொழி வரலாறும்** என்ற நூல், மொழியியலிலும், மொழிவரலாற்றிலும் அவர் பெற்றிருந்த பன்முக ஆற்றலையும் புலமையையும் வெளிப்படுத்துகின்றது எனச் சாற்றுதல் சாலவும் தகும்.

மேற்குறிப்பிட்ட மொழியியல் நூல்களுடன், பேராசிரியர் சதாசிவம் அவர்கள், மொழியியல், மொழிவரலாறு, தமிழ் இலக்கணம் என்பன பற்றி எழுதிய கட்டுரைகளின் பட்டியலும் நூலின் இறுதியிற் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றையும் ஈண்டு ஒப்பு நோக்குதல் மூலம் பேராசிரியரின் மொழியியற் புலமையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

**சான்றெண்கள்:**


1. Max Muller, The Science of Language, London, 1862. P. 30.
2. Otto Jespersen, Language, its Nature, Development and Origin, London, 1950: p. 73.
3. Leonard Bloomfield., Language. London, 1950. P33
4. Albert C. Baugh, A History of the English Language, London. 1954. P.V.
5. Robert Lynnd, Books and Writers, London, 1952, pp.249-250
6. Edward Sapir: Language: An Introduction in the Study of Speech. New York, 1949.p.180
7. ஆ. சதாசிவம், மொழியியலும் தமிழ்மொழி வரலாறும், பதிப்பாசிரியர்: இ. பாலசுந்தரம், நியூ எவர்கிரீன் அச்சகம், பிரைவேட் லிமிடெட், யாழ்ப்பாணம். 2021, பக்.38-44
8. Max Muller, The Science of Language, London: 1862, p:391
9. Edward Sabir, Language: An Introduction to the study of speech, New York, 1949: pp.4-8
10. Otto Jespersen; op. cit.: pp. 431-442




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 3.

# இலக்கிய ஆய்வும் ஆய்வு நூல்களும்

## இலக்கிய ஆக்கமும் செந்தமிழ் பேணலும்:

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கோட்பாடுடைய கணியன் பூங்குன்றனார் வாழ்ந்த சங்கப் புலவர் காலம் முதல் இற்றைவரை தமிழ் இலக்கியம் பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுள்ளது. தமிழ்மொழி, உலக நாடுகள் பலவற்றிலும் பரந்து வாழும் தமிழ் மக்களாற் பேசப்படும் செம்மொழியாகவும், உலகப் பல்கலைக்கழகங்களில் ஆய்வுமொழியாகவும் கற்கை மொழியாகவும் திகழ்கின்ற இலக்கியப் பாரம்பரியமும் பேச்சுவழக்கும் கொண்ட மேன்மை மிகு மொழியாகும். உலக மொழிகளிற் பேச்சுமொழி தொடங்கிய காலம் முதல் இன்றுவரை பேச்சு மொழியாகவும் தொடர்ச்சியான இலக்கியப் பாரம்பரியம் கொண்ட மொழியாகவும் செம்மொழி எனப் போற்றப்படும் தகுதியும் பெற்றுத் திகழ்வது தமிழ் மொழியே. தொல்காப்பியம் முதற்கொண்டு நேமிநாதம், வீரசோழியம், நன்னூல் முதலான இலக்கண நூல்களின் வளங்களும், இலக்கிய இலக்கண நூல்களுக்கான உரைநூல்களும் தமிழ் மொழிக்குச் சிறப்பளிக்கின்றன.

தமிழ்மொழி அதன் சீரிளமைத் திறத்துடன் வழங்குகின்றது. மொழியின் உயிர்ப்பு பேச்சு மொழியிலும் இலக்கிய மொழியிலுமே அமைந்துள்ளது. பேச்சுமொழி காற்றோடு கலந்து விடுகிறது. ஆனால் இலக்கியமொழி எழுத்தில் பதிவாகிறது. அது காலம் காலமாக வழக்கில் இருந்து வருவதாகும். எனவே இலக்கியம் படைக்கும்போது மொழித்தூய்மை பேணப்படுதல் அவசியமாகிறது. 1960, 1970களில் ஈழத்து எழுத்தாளரிடையே மொழியைக் கையாள்வதில் மரபுவழிப் போராட்டங்கள் நடைபெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தன. பேராசிரியர் சதாசிவம் மரபு பேணப்பட வேண்டும் என்ற எழுத்தாளர் அணிக்குத் தலைமை தாங்கி நின்றார். அக்காலத்தில் இலக்கிய மேடைகளிலும் எழுத்துக்களிலும் "முற்போக்கு", "நற்போக்ககு" என்ற வாதங்களும் இடம்பெற்றிருந்தன.

நவீன இலக்கியப் படைப்புக்களாகச் சிறுகதை, நாவல் மற்றும் கவிதை என்பனவற்றிலும் பேச்சுத்தமிழ் இடம்பெறுதல் வழக்கமாகிவிட்டது. கொச்சைத் தமிழ் வழக்காறுகள் அத்தகு புதுமை இலக்கியங்களில் ஆட்சி செலுத்தின. மரபு வழிப்பட்டோர் அதற்கெதிரான கருத்துக்களை முன் வைத்தனர்.

"எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்"
(தொல் சிறப்புப்பாயிரம் வரி 4-5)

என்ற தொல்காப்பிய நூற்பாவிற் செந்தமிழின் இன்றியமையாமை கூறப்படுவதை மரபாளர் எழுத்திலும் மேடைப் பேச்சிலும் சுட்டிக்காட்டினர். ஒரு பெரிய இயந்திரத்திற்கு அதன் பகுதிகள் செம்மையாக அமைவது எப்படி இன்றியமையாததோ, ஒரு பெரிய அரசாங்கத்துக்கு அதன் அங்கங்கள் யாவும் எப்படி இன்றியமையாததோ அப்படியே தமிழ் மொழிக்கு அதன் பிறப்பு நியதிகள் இன்றியமையாதன. இதை உணராமல் ஆக்க இலக்கியங்களில் இடம்பெறும் சொற்கள் இக்காலத்தில் பிழையாக உச்சரிக்கப்படுகின்றன. எழுத்துக்களாலே சொற்களை ஆக்குமிடத்தும், சொற்களாலே வாக்கியங்களை ஆக்குமிடத்தும் அவ்வாக்கியங்களுக்குரிய நியதிகளை ஒருதலையாகக் கடைப்பிடித்தல் வேண்டும். இதனைத் தொல்காப்பியத்து மொழி மரபும் கிளவியாக்கமும் நன்கு புலப்படுத்துகின்றன. தமிழ் படித்தவர்கள் இருவேறு பகுதியினராகப் பிரிந்து இருவேறுபட்ட தமிழர் ஆகின்றனர். எனவே தமிழ்மொழியை இருவேறு வகைப்படுத்தாமல் ஒருநெறிப் படுத்திச் செந்தமிழைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்க வேண்டும். செந்தமிழின் இன்றியமையாத பகுதிகளை யாவரும் அறியும் வண்ணம் எளிமைப்படுத்தி அதை அறிந்தவர்கள் பிறருக்கு விளக்குதல் வேண்டும். இவையே தமிழுக்கு ஆக்கத்தை வளர்ப்பவை.

செந்தமிழ் என்றால் விளங்காத் தமிழ் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இலக்கியப் பயிற்சியுடையோர் சங்கச் செய்யுட்களைப் படித்தால் அக்கருத்துந் தவறென்பதை உணர்வர். தமிழ் அகம் புறம் என்னும் பொருள்களுடன் சமவாய்ப்பட்ட மொழி. எழுத்திலக்கண வழுவும் சொல்லிலக்கண வழுவுமின்றிப் பொருளை உயிரோட்டமாகக் கொண்ட தமிழே செந்தமிழ் எனப்படும் என்ற பொருண்மையைச் "செந்தமிழ்" என்ற கட்டுரையிற் பேராசிரியர் அழுத்தம் கொடுத்து எழுதி உள்ளமை நோக்கத்தக்கது. மேலும் பேராசிரியர் அவர்களின் மாணவனும், இந்து நாகரிகத்துறை விரிவுரையாளருமான முனைவர் வை. கனகரத்தினம் பேராசிரியரின் மரபுப் போராட்டம் பற்றி எழுதியுள்ள ஒரு குறிப்பு ஈண்டு நோக்கத்தக்கது:

> "பேராசிரியரின் இலக்கியப் பயணத்தில் 1960இல் நடை பெற்ற "தமிழ் மரபுப் போராட்டம்" ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். அன்று தம்மை முற்போக்கு வாதிகள் என்று கூறிக்கொண்டோர், "மரபு வைதீகர் வகுத்தவழி என்றும், புதிய இலக்கிய ஆக்கத்துக்குத் தடையான வேலிகளை அது விட்டுள்ளது" எனவும் கோஷம் எழுப்பினர். இதனைப் பண்டிதர் பலர் எதிர்த்துப் போர்ப்பறை எழுப்பிய பொழுதும் அது சரியான பலாபலனைக் கொடுக்கவில்லை. இந்நிலையில் தனித்துவம், திண்மை, துணிவு, தமிழ்மீது பற்று ஆகிய பண்புகளைத் தம்மிடம்கொண்ட பேராசிரியர் அவர்கள் "வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே - நிழ்ச்சிய யவர்கட் டாகலான்", "மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்" எனக் கூறும் இலக்கண நூலோர் கோட்பாடுகளை மனங்கொண்டு தமது காண்டீபத்தைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுத்தார். இதில் வெற்றி - தோல்வி எதுவாயினும், இன்றும் ஆரம்பக் கல்வி முதல் பட்டப் படிப்புவரை எல்லாக் கல்வி முயற்சிகளும் மொழித்தூய்மையுடன் பேணப்பட வேண்டும் என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் உணர்ந்து செயல்படுவதைப் பார்க்கும் பொழுது பேராசிரியர் அவர்களின் போராட்டத்தின் பிரதிபலிப்பினை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது".

(பேராசிரியர் நினைவு மலர்: 1988, பக்.37-38.)

"பண்டிதம்", என்ற தலைப்பிற் கலைப் பூங்கா (1964 புரட்டாதி) இதழில் எழுதிய கட்டுரையிலும் மரபு, செந்தமிழ் என்ற விடயங்களைப் பேராசிரியர் சதாசிவம் வலியுறுத்தும் போக்கைக் காணலாம். "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவர் வழியிலே தாம் படித்த நூல்கள் கூறும் ஒழுக்க விதிகளைக் கடைப்பிடித்து வாழும் இப்பண்டித வர்க்கத்தினர் கல்வி அறிவையும் அதனினின்றும் மிளிரும் பண்பாட்டையும் ஒன்றாகவே கருதுபவர். இலக்கண இலக்கியங்களைக் கற்றுச் செந்தமிழ் இலக்கணமரபு பிறழாது எழுதுபவரும் பண்டிதராவார் என்ற கூற்றில் பண்டிதர் மரபை உயர்த்தி மதிப்பிடுவதைக் காணலாம்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களிலே ஈழத்திலே செந்தமிழுக்கு இன்னல் உண்டாகாது பாதுகாத்து வந்தவரகள் பண்டித பரம்பரையினர் ஆவர். வாழ்க்கையின் பொருண்மிய வளர்ச்சியை மட்டுங் கருத்திற் கொண்டு ஆங்கிலப் பயிற்சியை நாடி எம் இளைஞர்கள் ஓடிய காலத்திலே தளராது நின்று தமிழை வளர்த்த பெருமை இவர்களையே சாரும். பிறமொழிகளைக் கற்றதனாலே தாய்மொழியாந் தமிழ்மொழிப் பயிற்சி குன்றிய ஆங்கில வாணரும் பிறருந் தமிழை மரபு பிறழ எழுதிவந்த காலத்திலே தமிழ் மரபு இஃதென்பதை எழுத்தானும் பேச்சாலும் எடுத்துக்காட்டிய இப்பண்டித மரபினருக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்கூறும் நல்லுலகம் தலைசாய்த்து நிற்பதாக என ஏற்றம் கொடுத்திருப்பதும் சிந்திக்கத் தக்கதாகும். ஆறுமுகநாவலர், தாமோதரம்பிள்ளை, குமாரசாமிப்புலவர் முதலிய பெரியார்கள் தமிழ் மரபு பிறழாத வகையிற் பண்டைய இலக்கியங்களின் பொருளை இன்றைய சமுதாயத்தினருக்கு உணர்த்தியமையைத் தமிழுலகம் அறியும். “இசையும் நாடகமும் மரபு பிறழாத வகையில் விளக்கந் தந்தவர் யாழ்நூல், மதங்க சூளாமணி ஆகிய நூல்களின் ஆசிரியராகிய பண்டிதர் மயில்வாகனம் என்னும் சுவாமி விபுலாநந்தராவர்” எனப் பண்டித மரபையும், அம்மரபிலே தமிழ் உலகப் புகழ் பெற்ற ஈழத்துப் பெரியார்களையும் கனம் பண்ணும் பக்ககுவமும் பேராசிரியர் சதாசிவம் அவர்களிடம் காணப்பட்ட பெரும் மானுடப் பண்புகளில் ஒன்றாகும்.

மேலே குறிப்பிட்டவாறு 1960 / 1970 களிற் பண்டித மரபினரும் முற்போக்குவாதிகள் எனத் தம்மைக் கூறிக் கொண்ட புதிய எழுத்துத்துறை ஆர்வலர்களும் மிகக் கடுமையாக ஒருவரை ஒருவர் எழுத்திலும் பேச்சிலும் தாக்குவதில் ஈடுபட்ட காலம் அது. அது தொடர்பாகப் பேராசிரியர் முற்போக்குவாதிகளைக் குறித்துத் துணிபுடன், அதேவேளை பண்பாகக் கண்டனம் கூறுவதிலும் வல்லவராக இருந்தார் என்பதற்குப் பின்வரும் அவரது எழுத்துச் சான்றாகிறது:

> “பண்டித பரம்பரையினரின் புலமை மாண்பையும் அடக்க ஒடுக்கமான பண்பாட்டு வாழ்க்கை முறையினையும் கண்டு பொறாமை கொள்ளும் ஒருசிலர் பண்டிதர்கள் பழமைவாதிகள் என்று கூற எத்தனிப்பது நகைப்பிற்கு இடமானது. நுனிப்புல் மேயும் இவர்கள் பண்டிதர்களின் புலமை ஆழத்தை அளந்தறிய எங்ஙனம் வல்லவர்? சூரியனைப் பார்த்து மின்மினிப்பூச்சி பொறாமை கொள்வது எவ்வளவு அறிவீனமான செயலாகும். பழையனவற்றுள்ளே நல்லனவற்றைப் பாதுகாத்தும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியனவற்றுள்ளே நல்லனவற்றைக் கைக்கொண்டுந் தமிழை வளர்த்து வருபவர் பண்டிதர். 'காலமும் இடமும் பற்றி வழக்குத் திரிந்தக்காலும் திரிந்தவற்றிற்கு ஏற்ப வழுவின்றி நடப்பதொரு முறைமை'யைக் கடைப்பிடிப்பவர்கள் இவர்கள். பழமையைப் பாதுகாப்பது மரபன்று. பழமையினின்றும் கிளைத்து வளரும் புதுமையைப் போற்றுவதே மரபாகும். பழமையின்றி புதுமை என்பதொரு பண்பில்லை. இத்தத்துவத்தை உணர்வோர், ஈழத்துப் பண்டித பரம்பரையினரை **நற்போக்காளர்** என அழைக்கத் துணிவரேயன்றி பிற்போக்காளர் என அழைக்க முற்படார்".

(கலைப்பூங்கா: 1964. பக். 6-7)

என மிகப் பண்பான முறையில் எதிரணியினருக்குப் பதிலளிக்கும் பாங்கும் பேராசிரியர் சதாசிவம் அவர்களிடம் காணப்படுதல் போற்றத்தக்கது.

மேலும், **"பழமையும் புதுமையும்" (1964)** என்ற கட்டுரையில், பேராசிரியர் குறிப்பிடும் விடயங்கள் அவரது ஆற்றலைப் புலப்படுத்துவனவாகும். எழுத்தாளர்களில் ஒரு பகுதியினர் பழந்தமிழைப் போற்றுவதிலே காலத்தைக் கழிக்கின்றனர். இன்னொரு பகுதியினர் **புதுமையை மாத்திரம்** கைக்கொள்கின்றனர். பழமையையும் புதுமையையும் தனித்தனியே நோக்குவது முழுமையாகாது. இரண்டும் இணைய வேண்டும். காலத்தால் முந்தியதாகவுள்ள தொல்காப்பியமும் புதுமையைத் தழுவ வேண்டும் என்பதையே நோக்காகக் கொண்டுள்ளது. புதுமையைத் தழுவுவது வேண்டப்படாத விடத்து மரபென ஒன்றைத் தொல்காப்பியம் குறிப்பிட்டிருக்காது. மரபு வகுக்கப்பட்டதை நன்கு சிந்தித்தால் இது தெளிவாக விளங்கும். தொல்காப்பியர் இதனையே "விருந்தேதானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்ற நூற்பாவிலே குறிப்பிட்டார். அங்ஙனம் தொல்காப்பியர் கூறும்போதும் குறிக்கோள் மாறுபடக் கூடாது என்பதற்காகவே மரபைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார். சமுதாய வளர்ச்சி எவ்வளவு புதுமையானாலும் குறிக்கோள் பழமையானதே. குறிக்கோள் பழமைக்கு முரண்பட்டவிடத்து "சமுதாயம் வளர்கிறது" என்றும் "புதுமை இலக்கியம்;" என்றும் கூறுதல் பயனற்றதாகும். புதுமையாளர் பழமையை எவ்வளவில் வெறுத்தாலும் பழமைக்கு முரண்பட்ட புதுமைகள் நிலை நில்லாமற் காலகதியில் இறந்துவிடுகின்றன. பழமையைப் பேணாத புதுமைகள் அழிவதிலிருந்து, பழமைக்கும் ஓர் உயிர்த்தன்மை உண்டென்பதைக் காணலாம். எனவே பழமையைத் தழுவிய புதுமையே வேண்டப்படுவது எனப் பேராசிரியர் சதாசிவம் பழமைக்கும் புதுமைக்கும் சமரசம் ஏற்படுத்தி, புதுமை இலக்கியவாதிகளையும் அணைத்து அவர்களை நெறிப்படுத்தும் ஆளுமை உடையவராகத் திகழ்ந்தார் என்பதும் பெருமை அளிக்கிறது.

பேராசிரியர் தாம் எழுதிய **"தமிழிலக்கியமும் மக்கள் வாழ்க்கையும்"** என்ற கட்டுரையில், இலக்கியம் என்பது மனித வாழ்க்கையையும் வாழ்க்கையைப் பற்றி மனிதன் கொண்டுள்ள கருத்துக்களையும் பொறித்துக் காட்டுவதாகும் என்றார். உலக மொழிகளில் முதலில் மக்களால் வாய்மொழி மரபில் தோற்றுவிக்கப்பட்ட நாட்டுப்புற இலக்கியங்களே வழங்கி வந்தன. அவற்றின் அடித்தளத்தில் இருந்தே செந்நெறி இலக்கியங்கள் ஆக்கம் பெறலாயின. (இ.பாலசுந்தரம். 2019) செந்நெறி இலக்கியம் தமிழில் எப்போது முதன்முதலில் தோன்றிற்று என்று இன்று கூற முடியாது. ஆனால் தொல்காப்பியத்திற்கு முன்னரே செவ்வியல் இலக்கியங்கள் தோன்றிவிட்டன எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவதைக் கொண்டு தமிழ் இலக்கியத்தின் தோற்றத்தைக் கணித்தறியலாம் எனப் பேராசிரியர் கூறுவது பொருத்தமாகும்.

சங்க இலக்கியங்கள் கூறும் மனித வாழ்க்கையை நோக்கும்போது அவை இயற்கைக்கு இயைபாக மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையைக் கூறுகின்றன; வீரயுக காலத்திற்கேற்ப மக்களின் வீர வாழ்க்கை முறையைச் சித்திரிக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலப் புலவர்கள் மரணத்தின் பின்னர் மனிதன் அடையும் மோட்ச உலகங்களைப் பற்றி எண்ணாது இந்த உலகில் இன்பமாக வாழும் வழிவகைகளையே கூறினர். இப்பிறப்பில் பிறர்க்கு நன்மை செய்தோர் மறு பிறப்பில் இன்பமாக வாழலாம் என்றும், இப்பிறப்பில் கொடுமை செய்தோர் நரகத்தை அடைவர் என்றும் நம்பினர். உயிர்க் கொலை, புலால் உண்ணல் என்பன பாவம் என மக்கள் நம்பியதாக சங்க இலக்கியங்கள் கூறவில்லை. மக்கள் வாழ்க்கையில் கலைகள் நன்கு பயன்பாடு உடையனவாக வளர்ச்சி பெற்றிருந்தமையை அறியக்கூடியதாக உள்ளது. சாதி சமயப் பிணக்குகள் மக்களிடையே இருந்ததாக இலக்கியம் கூறவில்லை. "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற கோட்பாட்டின்படி மக்கள் வாழ்ந்த வாழ்க்கையையே சங்க இலக்கியம் சித்திரிக்கிறது.

கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கும் இடையே தமிழில் அறநூல்கள் பெரிதும் தோன்றின. அவற்றுள் நாலடியார், நான்மணிக்கடிகை, மணிமேகலை முதலிய அற நூல்கள் இல்வாழ்க்கையை இகழ்ந்து துறவறத்தைப் போற்றுவன. யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வநிலையாமை முதலியவற்றை எடுத்து விளக்கும் இந்நூல்கள் வாழ்க்கையைத் துறந்த துறவிகளால் இயற்றப்பட்டமையின் இல்லற வாழ்க்கையின் பெருமையைப் பற்றி இவற்றிற் காணமுடியாது. நாட்டில் மதக் கருத்துக்களைப் பரப்பும் நோக்கமாக இயற்றப்பட்ட இச்சமண பௌத்த நூல்களானவை மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை எனக் கூறமுடியாது. இவற்றை எழுதிய புலவர்களின் உள்ளக் கிடக்கையையே இவை காட்டுகின்றன எனப் பேராசிரியர் துணிந்து கூறும் கருத்து நோக்கத்தக்கது.

பல்லவர் காலப் பக்தி இலக்கியங்கள் அக்காலத்து மக்களின் சமய வழிபாட்டு முறைகளைப் பதிவுசெய்வதோடு, அவை மக்களைச் சமய வழிபாட்டு வாழ்க்கை முறைக்கு வழிப்படுத்துகின்றன. மக்களது சமய வாழ்க்கை முறையையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துகின்றன எனப் பேராசிரியர் குறிப்பிடுகிறார். சோழர்காலக் காப்பியங்கள் மக்கள் எவ்வாறு மகிழ்ச்சியாக வாழ்ந்தனர் என்பதைச் சித்திரிக்கின்றன. அவை அக்கால மக்களின் குதூகல வாழ்க்கையையும் அவர்தம் உயர்ந்த பண்பாட்டையும் எடுத்துக்காட்டுகின்றன.

15ஆம் 16ஆம் நூற்றாண்டு இலக்கியங்கள் வறுமை நிரம்பியிருந்த ஒரு சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பொருட் பிணியும் மனத்துயரும் நிரம்பிய மக்கள் பலர் இல்வாழ்க்கை நடத்த வழிகாணாது பரத்தையரைச் சென்றணைந்து இன்பம் பெற்றமையை அக்கால இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. போலிப் புலமையும் பொறாமையும் வித்துவக் காய்ச்சலும் நிரம்பியிருந்த சமுதாயத்தை அக்காலத் தமிழ் இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுவன. ஐரோப்பியர் தமிழ் நாட்டை ஆண்ட 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஏற்ப அமைந்த மறுமலர்ச்சி இலக்கியங்களாகும். பாரதியார் பாடல்கள் இருபதாம் நூற்றூண்டில் மக்களின பன்முக எழுச்சியையும் விடுதலையையும் வெளிப்படுத்துவனவாகும். அதேவேளை நவீன நாவல், சிறுகதை இலக்கியங்கள் பிரச்சார நோக்கம் கொண்டவை. அவை எழுத்தாளரின் எண்ணக் கருத்துக்களை மக்களிடையே திணிக்கும் நோக்கம் கொண்டவை. பிரச்சார நோக்கம் கொண்ட இலக்கியங்கள் மக்களிடையே பரபரப்பை உண்டுபண்ணுகின்றன. ஆனால் இவை காலவெள்ளத்தைக் கடந்து நிற்பன அல்ல. பண்டைத் தமிழரின் உன்னத இலட்சியங்களையும் உயர்ந்த வாழ்க்கைப் பண்பையும் எடுத்துக் கூறும் இலக்கியங்களைக் கற்கும் மக்கள், இழந்துபோன தம் பழம்பெருமையை மீண்டும் பெற விழைகின்றனர். மக்கள் ஆழ்ந்து சிந்தித்து நல்வழியில் நடக்கவும், ஆக்க வேலைகளில் ஈடுபடவும் இந்த இலக்கியங்கள் உதவுகின்றன. இவ்வாறு பேராசிரியர் சதாசிவம் அவர்களின் இலக்கியச் சிந்தனைகள் சற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசமான முறையிற் கூறப்பட்டிருப்பது சிந்திக்கத் தக்கதாகும்.

பேராசியர் சதாசிவம் அவர்கள் இலக்கிய ஆய்விலும் ஈடுபட்டுப் பற்பல இலக்கியக் கட்டுரைகள் எழுதியுள்ளார். சான்றாகப் **"பாஞ்சாலி சபதம்: புலமையும் கற்பனையும்"** (1970) என்ற கட்டுரையை நோக்கலாம். பாஞ்சாலி சபதம், பாரதியாரின் புலமையையும் கற்பனையையும் அடையாளப் படுத்தும் அதேவேளை அப்படைப்பிற் காணப்படும் தவறுகளையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. "சுப்பிரமணிய பாரதியார் சமுதாயச் சீர்திருத்தம் ஒன்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பாஞ்சாலி சபதம் பாடினார். இலக்கியத்தை ஒரு கலையாகக் காணவும், அது மக்களின் பொழுதுபோக்குச் சாதனமாய் அமையவும் பாரதியார் விரும்பியதாகத் தெரியவில்லை. அடிமை வலையுள் உறங்கிக் கிடந்த பாரதநாட்டு மக்கள் கல்வியறிவு பெற்று வாழ்க்கைப் பாதையில் முன்னேற்றம் அடைதலை விரும்பினார் பாரதியார். தம் காலத்து மக்களைத் திருத்தி நல்லவர்களாக்குவதற்கு இலக்கியத்தை ஒரு கருவியாகக் கொண்டார் அவர். எனவே இலக்கியத்தின் பயனை அண்மைக்கால மக்கள் அடைய வேண்டு மென்பது பாரதியாரின் நோக்கம். அந்நோக்கத்திற்குத் தகவே பாரதியார் தம் புலமையை வழிப்படுத்தினார். தாம் கூறும் பொருளை மக்கள் தடையின்றி இலகுவிற் பெறவேண்டும் என்பது அவரது முக்கிய குறிக்கோள். கல்வியறிவு குறைந்த மக்களுக்கும் அவை பயன்படவேண்டும் என்பதே பாரதியாரின் நோக்கம். ஆதலின் கல்வியறிவு நிரம்பிய மேதைகளை நோக்கிப் பாஞ்சாலி சபதம் பாடப்படவில்லை என்பது தானே விளங்கும்.

கல்வியறிவு படைத்த மக்கள் பாஞ்சாலி சபதம் ஒரு இலக்கிய மென்பதைக்கூட ஒப்புக் கொள்ளார். ஏனெனில் அவரின் மூளைவிருத்திக்கேற்ற கற்பனை நயம் பாஞ்சாலி சபதத்திற் காணப்படாமையாகும். இலக்கிய ரசிகர்களை மகிழ்விக்கும் ஒட்டணி, தற்குறிப்பேற்றவணி, வஞ்சப்புகழ்ச்சியணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியன பாஞ்சாலி சபதத்திற் காணப்படா. பொதுமக்களின் அறிவாற்றுலுக்குட்பட்ட தன்மைநவிற்சியணி, உவமை, உருவகம் ஆகிய மூன்றுமே பாஞ்சாலி சபதமாகிய நூல் முழுவதிலும் பரந்து கிடக்கின்றன. இம்மூன்று அணிகளும் சாதாரண மக்களின் வாழ்க்கையில் நாள்தோறும் எடுத்தாளப்படுபவையாகும். பொதுமக்களுக்கென எளிய தமிழ் நடையில் எழுதப்படும் காவியத்தில் நாளாந்த வாழ்க்கையிற் பொதுமக்களாற் கருதப்படும் பொருட்களின் அடிப்படையிலன்றிப் புலவன் உவமை உருவகங்களைக் கூறமுடியாது.

பாரதியாரின் புலமையும் கற்பனையும் எத்தகையன என்பதை எளிதிற் கூறிவிடமுடியாது; அவரது புலமைக்கும் கற்பனைக்கும் கோபுரமாக விளங்குவது குயிற்பாட்டாகும். இக்குயிற்பாட்டு கல்வியறிவு நிரம்பியோருக்கெனப் பாடப்பட்டது; படித்து குறித்த பொருளை உணரமுடியாதது. எனவே படிக்கப் படிக்கப் புதிய புதிய பொருளைக் காட்டிக் கொண்டிருப்பது. இதனைப் பாரதியாரே உணர்கிறார் என்பதைப் பின்வரும் **குயிற்பாட்டின் ஈற்றடிகள்** (வரிகள்:257-262) சுட்டுகின்றன:

> "சோலை, குயில், காதல் சொன்னகதை யத்தனையும்
> மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
> தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி யென்றே கண்டுகொண்டேன்
> ஆன்ற தமிழ்ப் புலவீர், கற்பனையே யானாலும்,
> வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
> யாதானுஞ் சற்றே இடமிருந்தால் கூறீரோ?."

இவ்வடிகளினின்றும் கற்பனை என்பதனைப் பற்றிப் பாரதியார் கொண்டுள்ள கருத்துக்கள் புலனாகின்றன. உலக வாழ்க்கையில் நடக்காதது கற்பனை என்ற பொருள் இங்கு தொனிக்கிறது. "மாலையழகின் மயக்கத்தால் உள்ளத்தே தோன்றியதொரு கற்பனை". எனவே மயக்கமுற்ற நிலையில், கற்பனை, உலக வாழ்க்கையையொட்டி எழும் என்பது கருத்து. இரண்டாவதாக 'விரித்துப் பொருள் உரைத்தல்' கற்பனைப் பாட்டுக்கு இன்றியமையாததாகும். குயிற்பாட்டிற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியார் தாம் கருதிய பொருள்களை வெளிப்படையாகக் கூற விரும்பாது மறைமுகமாகக் கூறுகிறார். மறைமுகமாகக் கூறும்போது புறத்தே கூறும் சொற்கூட்டங்கள் சுட்டும் பொருளினின்றும் வேறுபட்ட பிறிதொரு பொருள் அங்கு தொனித்து நிற்கும். கல்வியறிவு கைவராத மக்களாற் குயிற்பாட்டைப் படித்து உணரமுடியாது; அன்றியும் அவர்கள் பாடலின் வெளிப்படைப் பொருளை உண்மையானது என மயங்குவர்.

எனவே குயிற்பாட்டிற் பாரதியார் காட்டும் புலமையும் கற்பனையும் கல்வியறிவு நிரம்பிய மக்களின் நுண்ணுணர்வு கொண்டு விளங்கி இன்புறத் தக்கவை. புலவனின் கற்பனை உலகுக்குத் தாமும் சென்று அவனது மனநிலையை அறியக் கூடியவராலேயே பாரதியார் கூறுவனவற்றின் உண்மையைப் பகுத்துணர முடியும்.

புலவனின் அனுபவத்திற்குத் தகக் கற்பனையும் வேறுபடும். அனுபவம் நோக்கத்தின் சூழலில் வாழ்வது. எனவே ஒரு புலவனே வெவ்வேறு மனவிகாரங்களுக்கு உட்படும் நேரங்களில் வேறுவேறு இயல்புடைய கவிதைகளைப் படைக்க முடியும் என்பது தெரிகின்றது. புலவர் ஒருவர் யாரை நோக்கிக் கவிதை புனைகிறாரோ அவரின் அனுபவத்திற்கு உட்பட்ட மொழிநடையினையும் கற்பனையினையும் கையாள்வது மிகப் பொருத்தமாகும். வாசகரின் மனவியல்பை முற்றவும் உணர்ந்து கவிதை படைத்தவர் பாரதியார். எனவே பாஞ்சாலி சபதம் பொதுமக்களுக்கெனப் படைக்கப்பட்ட காவியமாதலாற் பொதுமக்கள் உணரும் பான்மையிற் கற்பனையை எடுத்தாண்டார் பாரதியார். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு பாஞ்சாலி சபதத்தை ஆராயின் பாரதியாரின் புலமையும் கற்பனையும் விளங்கும் எனப் பேராசிரியர் எழுதியுள்ள கட்டுரையின் சாரம் புலனாவதோடு, அவரது இலக்கிய விமரிசன ஆளுமையையும் அறிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சதாசிவம் அவர்கள், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் பலவற்றிற் பங்குபற்றிச் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை வழங்கித் தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு ஆதரவு வழங்கியவர். மலேசியாவில் இறுதியாக நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிற் பங்குபற்றி சிறந்த இரு கட்டுரைகளை வழங்கியும் ஆராய்ச்சிக் கருத்தரங்குகளுக்குத் தலைமை தாங்கியும் உலகத் தமிழறிஞர்களின் சிறந்த பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டவர். தமிழ்மொழியினது தொன்மையையும் உலகில் தமிழ்மொழி பெற்றிருந்த செல்வாக்கினையும் விளக்கும் ஆய்வுகளிற் பேராசிரியர் அவர்கள் பெரிதும் ஈடுபட்டிருந்தார். சுமேரியமொழிக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள தொடர்புகளை விளக்கும் ஆராய்ச்சியில் பல ஆண்டு காலம் ஈடுபட்டிருந்தார். அதற்காகப் பல நாடுகளுக்குச் சென்றார். இவ்வாய்வு மிக்க சிறப்பும் பயனும் உள்ளதாய் அறிஞர்களின் பாராட்டைப் பெற்றது.

மேலும், **"19ஆம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சி: தமிழ் அறிவியல் வளர்ச்சி"** என்ற கட்டுரையின் முன்னுரையாக எழுதியுள்ள விடயம் சிந்தனைக்குரியதாக அமைகிறது:

> "பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தெழுந்த அறிவியல் நூல்களைப் பற்றி ஆராயுமுன் 'அறிவியல் நூல்' என்பதன் வரைவிலக்கணத்தைத் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அறிவியல் என்பது 'சயன்ஸ்' என்னும் ஆங்கிலப் பதத்தின் தமிழாக்கமாகும். இரசாயணம், பௌதிகம் முதலிய துறைகளே பொதுவாக அறிவியல் துறைகளாகக் கருதப்படுமெனினும் இன்று வேறு பல துறைகளையும் அறிவியலில் அடக்கிக் கூறுவர். தத்துவம், சமூகவியல், மொழியியல், சோதிடம் என்பனவாகும். வைத்தியம், பொறியியல் முதலியன அறிவியலின் முக்கிய பகுப்புக்களாகும். மேல்நாட்டவரின் இப்பகுப்பு முறையின்படி உணர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம், ஓவியம், சிற்பம் முதலியன 'கலைகள்' என்ற பகுப்பைச் சாரும். மக்களின் அனுபவ உணர்ச்சிக்குத் தகக் கலைகளின் மதிப்பீடு வேறுபடும். அறிவியல் துறைகள் அப்படியன்று. ஆய்வுக்கு உட்படுத்தப்படும் எப்பொருளின் மதிப்பீடும் ஒரே விடையை அளிப்பது அறிவியலாகும். இக்கருத்துப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தோன்றியதாகும். அதற்கு முன் நூல்களை அறிவியல் நூல்கள் என்றும மற்றும் கலை நூல்கள் என்றும் பாகுபடுத்தும் முறையானது மேல் நாடுகளிற் கூட நிலவவில்லை. இதற்குப் பகுத்தறிவு வளர்ச்சியே காரணமாகும். ..... பண்டைக் காலத்தில் நூல்கள் அனைத்தும் செய்யுளில் யாக்கப்பட்டன. உரைநடை நூல்கள் மிகச் சிலவே. பிற்பட்ட காலத்திலேயே உரைநடை நூல்கள் பெருகின. அச்சு இயந்திரத்தின் பெறுபேறு இது. எனவே செய்யுளில் யாக்கப்பட்ட தமிழ் நூல்கள் எல்லாம் இலக்கியங்கள் என்ற போர்வையில் அடக்கிக் கூறப்பட்டனவாயினும், அவை மனித சமுதாயத்தினுடைய அறிவு வளர்ச்சிக்காக எழுதப்பட்டன என்பது தமிழ்ப் புலவர் கருத்து. கலை என்றும் அறிவியல் என்றும் பாகுபடுத்திக் காணும்முறை அக்காலத்து மக்களின் பகுத்தறிவுக்குப் பொருந்துவதாக இருக்கவில்லை. எனவே செய்யுளிற் பாடப்பட்ட இலக்கியங்களில் எல்லாக் கருத்துக்களும் கூறப்பட்டன. ....."

இதன் அடிப்படையிற் பேராசிரியர் ஈழத்தில் 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய பரராசசேகரம் என்ற மருத்துவ நூல், மற்றும் செகராசசேகரம் முதலான நூல்களும் இலக்கிய வகையில் வைத்து மதிப்பிடப்பட்டன வெனினும் அவை அறிவியல் சார்ந்த நூல்களேயாகும் என்ற கருத்தை வலியுறுத்துவர். இவற்றைத் தொடர்ந்து பேராசிரியரின் இலக்கியப் பணிகளை நோக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (நூல் - 1) ஞானப் பள்ளு (திருத்திய பதிப்பு:1968) இரண்டாம் பதிப்பு: 2018

பிற மதங்களும் பிற மொழிகளும் தமிழிற் கலந்த போதெல்லாம் தேவைக்கேற்ப அவற்றையும் உள்வாங்கி, தமிழ்மொழிக்கே உரிய மரபுகளுடன் தமிழ் இலக்கியம் வளர்ந்து வந்துள்ளது. சமணம், பௌத்தம், இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகிய சமயங்கள் தமிழ்மொழி இலக்கிய, இலக்கண வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளன.

இப்பின்னணியிலேயே ஞானப்பள்ளு இலக்கியத் தோற்றம், அதன் முக்கியத்துவம் பற்றி அறிய வேண்டியுள்ளது. பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் இந்நூலாக்கம் பற்றி வருமாறு குறிப்பிடுவர்:

> "ஞானப்பள்ளு என்னும் இந்நூல் யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்க கிறித்தவப் புலவர் ஒருவராற் பதினேழாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும். இதன் காலம் கி.பி. 1642 என்பர் நல்லூர் ஞானப்பிரகாசர். இந்த நூலாசிரியர் பெயர் தெரியவில்லை."
>
> (பதிப்புரை பக்: VII)

தமிழ் நாட்டைப் போர்த்துக்கேயர் ஆட்சி புரிந்த 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சியாளர்களின் ஆதரவுடன் கத்தோலிக்க மதம் மக்களிடையே பரப்பப்பட்டது. இலங்கையிலே அக்காலத்தில் கத்தோலிக்க மதம் பரப்பிய மதகுருமார் மக்களிடையே மிகவும் பிரபல்யம் பெற்றிருந்த கூத்து இலக்கிய மரபைத் தழுவி, மூவிராசாக்கள், ஞானசவுந்தரி, எண்டிறீக்கு எம்பரதோர், கிஸ்தோப்பர் முதலான பைபிள் தழுவிய பல்வேறு கதைகளைத் தமிழ் அண்ணாவிமாரின் துணைக்கொண்டு கூத்துக்களாக எழுதுவித்து அவற்றினூடாகக் கத்தோலிக்க மத நம்பிக்கையை மக்கள் இடையே வேரூன்றச் செய்தனர். ஆயினும் சற்று மாறுபட்ட ஞானப்பள்ளு நூல் ஆக்கம் பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க காலம் முதலாகத் தமிழர் வழங்கிவந்த முகவைப் பாட்டு, ஏர்மங்கலம், உழத்திப்பாட்டு என்பன 14ஆம் நூற்றாண்டளவில் பள்ளு என்னும் சிற்றிலக்கியமாக வளர்ச்சி பெறுவதாயிற்று. அதற்கு முன்னர் கோயில் திருவிழாக்களில் பள்ளு நாடகமாக நாட்டுப்புறக் கூத்து மரபில் பாடி ஆடப்பட்டு வந்துள்ளது. அதன் இலக்கிய நயம் கருதிய புலவர்கள் அதனைச் சிற்றிலக்கிய மரபைத் தழுவி "பள்ளு இலக்கியம்" எனப் பாடலாயினர். 16ஆம் 17ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதிகளிற் கோயில்கள் தழுவிய சமய இலக்கியமாகவே பள்ளு இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. அவ்விலக்கிய மரபிலேயே, பறாளைவிநாயகர்பள்ளு, கதிரைமலைப்பள்ளு, ஞானப்பள்ளு, முக்கூடற்பள்ளு எனத் தொகையான பள்ளு இலக்கியங்கள் தோற்றம் பெறலாயின. தமிழகத்தில் அக்காலத்தில் இருந்த கோயில்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனியே பள்ளு, குறவஞ்சி என நாடகப் பாணியிலமைந்த இலக்கியங்கள் தோன்றி, மக்களைக் கோயில்களின்பாற் கவரும் கூத்து இலக்கியங்களாக அவை பேணப்பட்டன. பள்ளு நாடகங்களில் இடம்பெறும் பள்ளன், பள்ளி, பண்ணைக்காரன் முதலியோரும், மற்றும் குறவஞ்சி நாடகங்களில் வரும் குறவன், குறத்தி முதலான கதாமாந்தர்களும் பார்வையாளரின் கவனத்தை மிகவும் கவர்ந்ததால் அவ்விலக்கியங்களுக்கு மக்கள் மத்தியிற் பெரிதும் வரவேற்புக் கிடைத்தது.

இறைதூதன் யேசு கிறிஸ்துநாதரின் புகழைப் பாடவந்த ஞானப்பள்ளளு ஆசிரியர் இப்பின்னணியிலேயே இந்நூலை இயற்றியுள்ளமையைப் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் இந்நூலின் பதிப்புரையிலே மிகவும் தெளிவாக விளக்கி யுள்ளமையை இதனை வாசிப்போர் நன்கு அறிந்து கொள்வர். பள்ளு இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, பாட்டியல் நூல்கள் கூறும் பள்ளு இலக்கிய இலக்கணம், ஞானப்பள்ளின் அமைப்பு முறை, பள்ளு இலக்கிய வளர்ச்சி முதலான பல்வேறு விடயங்களைத் தமிழில் தோன்றிய பள்ளு இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து எழுதியுள்ள ஆய்வுரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகப் பல்கலைக்கழக மாணவருக்கும் தமிழ் ஆர்வலருக்கும் பெருந்துணையாக அமையத்தக்கவை.

இந்நூலின் தொடக்கத்தில் இருபத்தொரு பக்கங்களிற் "**பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**" என்ற தலைப்பில் அமைந்துள்ள ஆய்வுக்கட்டுரை இலக்கிய வரலாற்று ஆய்வுக்கு மிகவும் பயன்படத் தக்கதாகும். அதனைத் தொடர்ந்து ஒன்பது பக்கங்களில் - "**ஞானப்பள்ளு நூலாராய்ச்சி**" எனத் தரப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரை பேராசிரியர் சதாசிவம் அவர்களின் இலக்கியப் புலமையையும், இலக்கிய வரலாற்று நோக்கையும் நன்கு புலப்படுத்துகிறது. மேலும், தமிழில் தோன்றிய பள்ளு நூல்களின் பெயர்களைத் தொகுத்துத் தந்திருப்பதும் பயனுள்ள தரவாகும்:

> கதிரைமலைப் பள்ளு, ஞானப் பள்ளு, முக்கூட்டுப் பள்ளு, திருவாரூர்ப் பள்ளு, திருமலைப் பள்ளு, சிவசயிலப் பள்ளு, வைசியப் பள்ளு, வடகரைப் பள்ளு, உரிமைநகர்ப் பள்ளு, சீரகாழிப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, கண்ணுடையம்மை பள்ளு, திருவிடை மருதூர்ப் பள்ளு, மாந்தைப் பள்ளு, கூடற் பள்ளு, தஞ்சைப் பள்ளு, தென்காசிப் பள்ளு, கொடுமளூர்ப் பள்ளு, இராகைப் பள்ளு, புதுவைப் பள்ளு, முக்கூட்டுப் பள்ளு, மன்னார் மோகனப் பள்ளு, சண்பகராமன் பள்ளு, வையாபுரிப் பள்ளு, வடகரைப்பள்ளு, திருச்செந்தில் பள்ளு. (ஞானப்பள்ளு: பக். XIII).

17ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டுப் பல்லாண்டுகள் ஏட்டுப் பிரதியாக வழங்கி வந்த ஞானப்பள்ளை இரண்டாவது பதிப்பாக வெளிக்கொணரும்போது பேராசிரியர் அவர்கள் தமது முன்னுரையிற் குறிப்பிடும் தகவல்கள் நூற்பதிப்பாளர்கள் பின்பற்ற வேண்டிய பதிப்புத்துறை அறமாக அமைந்து உள்ளமையை நோக்கலாம்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கிறிஸ்து பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மருதநில மக்கள் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டும் இந்நூல் ஏறக்குறைய 250 ஆண்டுகளாக ஏட்டு வடிவிலிருந்து முதன் முதலாக 1904 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. இஃது சில்லாலை பண்டிதர் ஸ்ரீ. ச. அந்தாம்பிள்ளை அவர்கள் கேள்விப்படி பழைய ஏட்டுப்பிரதிகளிலிருந் தெடுக்கப்பட்டு மாதகல் ஸ்ரீ. வ. லோ. அமிர்தநாதபிள்ளை அவர்களால் தமது ‘தைரியநாத’ அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது. 1904 என்னுங் குறிப்பு மட்டும் அம்மூலப் பதிப்பிற் காணப்படுகின்றது. ஈழத்தெழுந்த பிற பள்ளு நூல்களாகிய கதிரைமலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு ஆகிய மூன்றும் சிதைந்த நிலையிலோ அன்றி அகப்படாத நிலையிலோ அச்சிடப்பட்டுள்ளன. அங்ஙனமின்றி ஞானப்பள்ளு முழு நூலும் மூலப்பதிப்பில் இடம்பெற்றுள்ளமை மகிழ்ச்சிக்கு உரியதாகும். நூலில் இடைச்செருகல்கள் எதுவும் நுழையாதிருப்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது”

(ஞானப்பள்ளு, பக்: VII –VIII).

முதற்பதிப்பை அமிர்தநாதபிள்ளை பதிப்பித்தபோது, மூல ஏட்டுப்பிரதியில் உள்ளவாறே சிறிதும் மாறுபடாமல் அப்படியே பதிப்பித்திருந்த உண்மை தவறாத உத்தி முறையைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஓர் இலக்கியம் 250 ஆண்டுகளாகப் பலராலும் தலைமுறை தலைமுறையாகப் பிரதிபண்ணும்போது ஏடு எழுதுவோரின் மொழியாற்றலைப் பொறுத்து அதிலே தவறுகள் ஏற்படுதல் இயல்பே. அன்றியும், பள்ளு இலக்கியத்தில் வரும் கதைமாந்தரின் பேச்சு வழக்குச் சொற்கள் பெரிதும் இடம்பெறுதல் இயற் பண்பாகும். அவர்களது உச்சரிப்பைச் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால் அந்நூலைப் பதிப்பிப்போர் பல தவறுகளை அப்படியே பதிப்பிக்க நேரிடுகிறது. பேராசிரியர் சதாசிவம் அவர்கள் சிறந்த மொழியியல் அறிஞர்களில் ஒருவர். அத்துடன் பேச்சுத் தமிழ் சொல்லகராதியையும் தொகுத்த அனுபவம் மிக்கவர். அவர் இந்நூலின் முதற் பதிப்பிற் காணப்பட்ட அத்தவறுகளைத் தனது பதிப்பிலே திருத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தவறுகளை அடிக்குறிப்பாகத் தந்துள்ளமை ஒரு பதிப்பாசிரியரின் சிறந்த பண்பாக அமைகின்றது. முதற் பதிப்பு நூல் (1904) கிடைக்காத நிலையிற், பேராசிரியர் 1968இல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்ட இந்நூல் வாசகருக்கு மூலநூலின் தன்மையை எடுத்தியம்புவதாக அமைகிறது.

1968இற் பதிப்பிக்கப்பட்ட அந்நூலைச் செம்மையாக மீள்பதிப்புச் செய்யும் நோக்கோடு நூல் முழுவதும் தட்டச்சு செய்யப்பட்டது. தட்டச்சு செய்யப்பட்ட நூற்பிரதியை மெய்ப்புப் பார்க்கும் முழுப் பொறுப்பையும் திருமதி ஞானேஸ்வரி சதாசிவம் அவர்கள் என்னிடம் ஒப்படைத்தார்கள். அதனை இயன்றவரை தன்னார்வ அடிப்படையிலும், பேராசிரியரின் மாணவன் என்றவகையிலும் செம்மையாகச் செய்துகொடுக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. பேராசிரியர் சதாசிவம் 1968இல் திருத்திய பதிப்பாக வெளியிட்ட **ஞானப்பள்ளு** நூலில் எவ்வித மாற்றமோ திருத்தமோ ஏற்படாதவாறு அந்நூல் மறுபதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. இப்பதிப்பு தமிழ் இலக்கிய மாணவர், ஆசிரியர், இலக்கிய ஆய்வாளர், படைப்பாளிகள், தமிழ் ஆர்வலர் அனைவருக்கும் பயன் அளிக்கும் தன்மையதாகும்.

## (நூல் - 2) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் - 1966

இலங்கையில் ஈழத்துப் பூதன்தேவனார் காலம் முதல் ஆங்கிலேயர் காலம்வரை வாழ்ந்த தமிழ்ப் புலவர்களின் நூல்களும் பாடல்களும் ஏடுகளில் இருந்து அழிந்துவிடாமற் பாதுகாப்பதற்காக அவற்றைத் தேடிப் பெற்றுக் கால அடிப்படையில் தொகுத்துத் தக்க குறிப்புக்களையும் தந்து இந்நூலை இலங்கை சாகித்திய மண்டலத்தின் வெளியீடாகப் பதிப்பித்து, ஈழத்துப் பழந்தமிழ் இலக்கியங்களை ஆவணப் படுத்திய பெருமைக்குரியவர் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள். தமிழ் நூல் பதிப்புத்துறை வழிகாட்டிகளுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவராகிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பித்த நூல்களில் எழுதியுள்ள குறிப்புக்கள் பயனுள்ளனவாக இருத்தல்போல இத்தொகுப்பு நூலில் பேராசிரியர் அவர்கள் எழுதியுள்ள குறிப்புக்கள் மிக்க பயனுள்ள தகவல்களைக் கொண்டவையாகும். ஈழத்து இலக்கியவரலாற்று நோக்கில் இப்பணி மிகவும் முக்கியமானது என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இந்நூலின் முகவுரையிற் பேராசிரியர் சதாசிவம் எழுதியுள்ள குறிப்புரை நோக்கத்தக்கது:

> "ஈழத்துத் தமிழ்ப் புலவர்களால் யாக்கப்பட்ட செய்யுள் இலக்கியங்களும் தனிப்பாடல்களும் ஈழத்து இயற்கைச் சூழலினடியிற் றோன்றியவை. மக்கள் தம்முடைய பண்பாட்டினையும் வாழ்க்கை முறைகளையுந் தமிழ் மரபு பிறழாது கூறுபவை. ஈழத்துக்கே சிறப்பாகவுரிய நல்லை, நயினை, மாவை, கோணாமலை, கதிர்காமம் முதலிய நூற்றுக்கும் மேற்பட்ட தலங்களின் பெருமையைப் பத்திரசம் ததும்ப உணர்த்துபவை. இந்து, இசுலாமிய, கிறித்தவத் தமிழ் மக்களது பண்பாட்டின் ஒருமையையுஞ் சிறப்பியல்புகளையுஞ் சொல்லோவியங்களில் வடித்துக் காட்டுபவை. இங்ஙனம் அமைந்த சிறப்புக்களுடன் நூற்று நாற்பத்து மூன்று ஈழத்துத் தமிழ்ப் புலவர்களாற் பாடப்பட்ட செய்யுள் இலக்கியங்கள், தனிப்பாடல்கள் என்பனவற்றினின்றுந் தெரிந்தெடுத்த தீஞ்சுவைக் கவிதைகளின் களஞ்சியமாகிய இந்நூலுக்கு 'ஈழத்துக் கவிதைக் களஞ்சியம்' எனப் பெயரிடப்பட்டது: (1968: பக். VI – VII)

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இந்நூலுக்குத் தனியிடமுண்டு. 1960களுக்கு முன்னர் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப் புலவர்களின் ஆக்கங்கள் கால வெள்ளத்தால் அழிந்து போகமுன்னர் பேராசிரியர் அவர்கள் அவற்றை அரிதின் முயன்று தேடித் தொகுத்து மிகவும் பெறுமதிமிக்க இலக்கிய ஆவணமாகத் தந்துள்ளார். சங்க இலக்கியங்கள் அழிந்து போகாமல் சங்க காலத்தின் இறுதியில் வாழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றரசர்களும் கொடைவள்ளல்களும் சான்றோர்களும் சேர்ந்து பழைய ஏடுகளைத் திரட்டி அவற்றிற் காணப்பட்ட செய்யுட்களை யாப்பு அடிப்படையிலும் பொருள் அடிப்படையிலும் வகைப்படுத்தி, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனத் தொகுத்து அவற்றுக்குப் பாதுகாப்பு அளித்தார்கள். அக்காலத்தில் அவர்கள் அத்தகையதோர் அரும்பணியில் ஈடுபடாது இருந்திருந்தால் பண்டைத் தமிழர் பண்பாடு பற்றிய தகவல்கள் இருள் சூழ்ந்தவையாகவே அமைந்திருக்கும். பண்டைத் தமிழிலக்கிய இலக்கண நூல்களும் இன்று எமக்குக் கிடைத்திருக்க வாய்ப்புமில்லை. சங்க இலக்கியத்தில் ஈடுபாடும், அவை சுட்டும் பின்புலங்களையும் நன்கு அறிந்திருந்த பேராசிரியர் சதாசிவம் ஈழத்தமிழரின் பழந்தமிழ் இலக்கியங்கள் அழிந்து போவதற்கு முன்னர், அவற்றைத் தேடித்தொகுத்துப் பாதுகாக்க வேண்டும் என்ற பெருநோக்குடையவராகக் காணப்பட்டார். அத்தகைய உந்துதலும், அவரது பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியும் ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தை அரிதின் முயன்று தேடித்தேடித் தொகுத்துப் பாதுகாக்கும் பணியிற் செலுத்தியிருக்க வேண்டும்.

இந்நூலிலே 143 ஈழத்துத் தமிழ்ப் புலவர்களுடைய கவிதைகளை அரிதில் முயன்று தேடித் தொகுத்துள்ளார். மதத்தாலும் இனத்தாலும் மற்றவர்களின் திறமைகளை மறைத்துவிடும் கற்றோர் மத்தியில், அவர்களிலிருந்து முற்றும் மாறுபட்டவராகப் பேராசிரியர் அவர்கள் இன, மத வேறுபாடின்றி அனைத்து மதங்களையும் சார்ந்த புலவர்களது பாடல்களையும் சேர்த்துத் தொகுத்துள்ளமை அவரது பரந்த மனப்பான்மையையும் புலவர்களுக்கு அளிக்கும் மதிப்பினையும் வெளிப்படுத்துவதாகும். பேராசிரியரின் இப்பண்பினைப் பெரிதும் மதித்து, ஈழத்து மூத்த தமிழ் அறிஞர் புலவர் சிவங்கருணாலய பாண்டியனார் அவர்கள் பேராசிரியரின் பணியைப் பாராட்டி எழுதிய சிறப்புப் பாயிரக் கவிதையின் ஒரு பகுதியை ஈண்டு நோக்கலாம்:

"அன்னை மொழியின் அயர்வு பெறாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை மரபும் பின்னை யாக்கமும்
ஒருங்குடன் பேணி யுயர்வு காப்ப
எழுந்த புலமை எழுத்திய லாளருள்
தொழுந்தகை யிறைவன் தூய அருளால்
மரபுவழித் திறம்பாப் புலவர் மாண்பு
நிலைபெறு மாறும் அவர்வாய் நிகழ்த்துஞ்
சொல்லும் பொருளும் ஓசையும் சொரியும்
பல்வகை நயமும் பாங்குறு முணர்வும்
மல்குறப் பின்னர் வாழுந் தமர்க்கு
நல்விருந் தாக ..........................
ஈழத்துப் பூதந் தேவன் முதலா
ஈழத் தெழுந்த புலவர் திறங்குறித்
தீழத் துத்தமிழ்க் கவிதைக் களஞ்சியம்
எனத்தொகை நூலென் றியற்றின னம்ம
தனக்கிணை யில்லாத் தண்டமிழ் மரபு
வனப்பொடு நிலவும் வகைபுரி நல்லோன்
தொல்கட லிலங்கையில் தோற்றி நிறுவும்
பல்கலைக் கழகச் சொல்வலர் தம்முள்
வராலுகள் வயல்வள மருவு
மராலிச் சதாசிவ மெனும்பெய ரவனே".

(நூல் பக். xvi)

பேராசிரியர் அவர்கள் தமிழ் இலக்கிய வரலாறு பற்றி ஆழ்ந்த சிந்தனையும் அக்கறையும் கொண்டிருந்தார். கொழும்புப் பல்கலைக்கழகத்திலே நான் முதலாண்டு பயிலும்போது அவர் கொண்டிருந்த பரந்து விரிந்த இலக்கிய வரலாற்றுச் சிந்தனையை அறியக் கூடியதாக இருந்தது. பேராசிரியர் சதாசிவம் அவர்களுக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றை நுண்ணிதாக நோக்கும் வாய்ப்பானது, அவர் மாணவராக இருந்த காலத்திற் கிடைப்பதாயிற்று. பேராசிரியர் வி. செல்வநாயம் ஈழத்தில் முதன் முதலாக 1951இல் **தமிழ் இலக்கிய வரலாறு** என்ற நூலை எழுதி வெளியிட்டவர் ஆவார். பேராசிரியர் வி. செல்வநாயம் அவர்களிடம் (1966–1969)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புக்கலை மாணவனாகத் தொல்காப்பியத்தைச் சிறந்த முறையிற் கற்றுக்கொள்ளும் நல்வாய்ப்பும் எனக்கும் கிடைத்தது. அவரது தமிழ் இலக்கிய வரலாற்று நூலின் முன்னுரையிற் சதாசிவம் அவர்களைப் பற்றி அவரது ஆசிரியர் செல்வநாயகம் குறிப்பிடுவது ஈண்டுப் பொருத்தமாகிறது:

> "சதாசிவம் அவர்கள் தமது நேரத்தைப் பொருட்படுத்தாது பல நாட்களாக என்னுடனிருந்து இதன் கையெழுத்துப் பிரதியை எழுதியும், அட்டவணை முதலியவற்றைத் தயாரித்தும், அச்சுப்பிழைகளைத் திருத்தியும் பலவாறு உதவிய மாணவன் பண்டிதர் ஆ. சதாசிவம் அவர்களுக்கும் எனது நன்றி உரியது. இவ்வாறு உதவி புரிந்த அனைவரும் பல்லாண்டு வாழவேண்டும் என்று இறைவனை வழுத்துவதன்றி, நான் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறு வேறு யாதுளது."
>
> (வி. செல்வநாயகம்: 1951 பக். பக்: IV)

இந்தக் குறிப்பிலிருந்து, பேராசிரியர் சதாசிவம் அவர்கள் பல்கலைக்கழக மாணவராக இருக்கும் காலத்திலேயே தமிழ் இலக்கிய வரலாற்றினை முழுமையாக எழுத்தெண்ணிப் படித்தவர் என்பது நன்கு புலனாகின்றது. தமிழகத்தை **முதன்மையாகக்** கொண்டு எழுதப்பட்ட தமிழக அறிஞர்களின் இலக்கிய வரலாற்று நூல்கள் ஈழத்து இலக்கிய வரலாற்று ஆவணங்களைத் தேடித் தொகுத்து வெளியிட வேண்டும் என்ற உணர்வைப், பேராசியருக்குத் தூண்டியிருக்கலாம். இவர் 1959இல் எழுதி வெளியிட்ட "கருத்துரைக் கோவை" என்ற கட்டுரைத் தொகுப்பு நூலிலே முதற்கட்டுரையாக அமைந்துள்ள "ஈழமுந் தமிழும்" என்ற கட்டுரை அவர் ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றிற் கொண்டிருந்த ஆரம்ப கால அக்கறையைக் குறிப்பதாகிறது. அக்கட்டுரையின் ஒரு வாக்கியம் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழை வளர்த்த முச்சங்கங்களின் பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் விளங்கும் பாண்டிய நாட்டின் அண்மையில் ஈழநாடு உள்ளமையின் பாண்டிய நாட்டைப் போன்று ஈழத்திலும் செந்தமிழ் மணம் வீசுகின்றது" (1951:பக்.1)

சதாசிவம் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராக இருந்த காலப்பகுதியில் (1970-1980) அவரிடம் முதுமாணிப்பட்டம், முனைவர் பட்டம் என்பன பெறுவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள வந்த ஆராய்ச்சி மாணவர்களை ஈழத்து இலக்கியம், ஈழத்துப் பண்பாடு, நாட்டுப்புறவியல், ஈழத்துச் சமயம் ஆகிய துறைகளில் ஆய்வு செய்யும்படி அவர் வழிநடத்தியுள்ளமையும் அவருக்கு ஈழத்து இலக்கிய ஆய்வில் இருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றது. இத்தகைய ஆய்வு மாணவர்களில் 1970களில் இலங்கை வானொலிக் கூட்டுத்தபான தமிழ்ச் சேவைப் பகுதியின் கட்டுப்பாட்டாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. க. செ. நடராசா அவர்கள், **'ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி'** என்ற தலைப்பில் பேராசிரியர் ஆ. சதாசிவத்தின் மேற்பார்வையில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. நடராசா அவர்கள், தமிழ் ஈழத்து வரலாற்று ஆவணமாகத் தோன்றிய "வையா பாடல்" பற்றிய ஆய்வில் ஈடுபடுவதற்கும் பேராசிரியர் வழிகாட்டியாக அமைந்தவர் என்பதையும் கூட்டிக்காட்டுதல் பொருத்தமாகும்.

'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி கருத்துத் தெரிவிக்கும்போது, இந்நூற் பதிப்பானது அவரது முக்கிய பிரசுரப் பங்களிப்பாகும் என்றும், ஈழத்துத் தமிழ் செய்யுட் பாரம்பரியத்தினை விளங்கிக் கொள்வதற்கு இத்தொகுப்பு உதவும் என்றும் குறிப்பிட்டு உள்ளமையும் நோக்கத்தக்கதாகும். இத்தொகுப்பில் ஈழத்தில் வாழ்ந்து, சங்கப் புலவராகத் திகழ்ந்த ஈழத்துப் பூதன்தேவனார் முதல், 1965 வரை வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்கள் (கலாநிதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு. நடேசபிள்ளை வரையிலான) எழுதிய பாடல்களின் தொகுப்புக் களஞ்சியமாக இந்நூல் விளங்குகிறது. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை முழுமையாக முறைப்படி ஆராய்ந்து எழுத முனைவோருக்கு இந்நூல் தக்க சான்றாக அமையத் தக்கதாகும். பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் இந்நூலுக்கு எழுதிய அணிந்துரையிற் குறிப்பிடுவது நோக்கத்தக்கது:

> "ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் இயற்றிய செய்யுட்களுட் சிறந்த சிலவற்றை அப்புலவர்கள் வாழ்ந்த காலமுறைப்படி தொகுத்துக் கூறும் "ஈழத்தத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" என்னும் இந்நூல், பல நூற்றண்டுகளாக இந்நாடு தமிழ் இலக்கியப் பணியில் ஈடுபட்டுவந்துள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஈழநாட்டுப் புலவர்கள் பாடிய பல பிரபந்தங்களுட் சிலவே அச்சிடப்பட்டுள்ளன. இங்ஙனம் அச்சிடப் பட்டுள்ளனவற்றுள் பெரும்பாலானவை ஒருமுறை மட்டும் பதிப்பிக்கபட்டமையால், அந்நூற் பிரதிகள் அருகியே காணப்படுகின்றன. அவற்றையும் ஏட்டு வடிவிலுள்ள ஏனைய நூல்களையுந் தேடிப்பெற்று அவற்றிலுள்ள செய்யுட்களுட் சிலவற்றைத் திரட்டி நூல் வடிவில் உதவிய கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களின் தமிழ்த் தொண்டும், அதனை அச்சிடுவதற்கு வேண்டிய பணத்தை உதவி ஊக்கிய இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் பணியும் பாராட்டுதற்குரியவை. ஈழநாட்டுத் தமிழிலக்கிய வளத்தினை வரலாற்று முறைப்படி ஆராய்வதற்கும், ஈழத்துத்தமிழ்ப் பிரபந்தங்களின் இலக்கியச் சிறப்பினை மட்டிடுவதற்கும் ஒரு சிறந்த கருவியாக இந்நூல் அமைந்துள்ளது."
>
> (ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் - 1966, பக்.VII)

இந்நூல் பின்வரும் தலைப்புக்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. அவை முறையே அணிந்துரை, சிறப்புப் பாயிரம், முகவுரை, 1. சங்க காலம், 2. யாழ்ப்பாணத்துத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேந்தர் காலம், 3. போர்த்துக்கேயர் காலம், 4. ஒல்லாந்தர் காலம், 5. ஆங்கிலேயர் காலம், 6. தேசிய எழுச்சிக்காலம் என்பவற்றுடன், இறுதியற் பிற்சேர்க்கையாகப் புலவர் அகராதி, நூல் அகராதி, செய்யுள் அகராதி ஆகியனவற்றையும் உள்ளடக்கியதாகும். மேற் குறிப்பிட்ட கால அடிப்படையிற் புலவர்களும் அவர்களது படைப்புக்களும் தரப்பட்டுள்ளமை அவரது நூற் பதிப்பின் சிறப்பு அம்சங்களாகும்.

இந்நூல் ஈழத்து இலக்கிய வரலாற்றை ஆராய்வோருக்கு அரியதொரு நம்பகத்தன்மை கொண்ட அரியதோர் ஆவணமாகப் பயன்படும் தன்மை கொண்டது. அதுமட்டுமல்லாமல் சாகித்திய மண்டலப் பதிப்பாக வெளிவந்த முதலாவது தமிழ் நூலும் இதுவேயாகும். இவ்வகையில், சாகித்திய மண்டலத்தினூடாகச் சிறந்த தமிழ் நூல்கள் வெளிவருவதற்கும் பேராசிரியர் கால்கோள் அமைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## (நூல் - 3) ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை - 1963, 2020

ஆராய்ச்சிக்கலை மேனாட்டுப் பல்கலைக்கழகங்களினாலும் உயர்தர ஆராய்ச்சி மன்றங்களினாலும் மிகப் போற்றி வளர்க்கப்பட்டு வருகின்றது. ஆங்கிலம், ஜேர்மன் முதலிய மொழிகளில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறைபற்றி வெளிவந்துள்ள நூல்கள் ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பெரிதும் வழிகாட்டியாக அமைந்துள்ளன. அவற்றைப் பின்பற்றித் தமிழிலும் அத்தயைதொரு நூல் எழுதப்பட வேண்டும் எனச் சதாசிவம் அவர்கள் விரும்பினார்.

பல்கலைக்கழகப் பட்டப் படிப்புக்குரிய ஆய்வு ஏடுகளை எழுதுவதே ஒரு தனிக் கலையாகும். சதாசிவம் அவர்கள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து கொண்டிருந்த காலத்தில் ‘ஆய்வுமுறையியல்’ என்ற அறிவுத் துறை வளர்ந்துகொண்டிருந்தது. அத்துறை பற்றியும் கற்றுத் தேர்ந்த சதாசிவம் அவர்கள் அப்புதிய ஆய்வுமுறைகளைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்திப் பல்கலைக்கழகத்திற்குத் தான் சமர்ப்பிக்க வேண்டிய ஆய்வேட்டை நிறைவுசெய்து D.Phil பட்டமும் பெற்றுக்கொண்டார்.

வெளிக்கள ஆய்வு செய்யப் புறப்படும் ஆராய்ச்சி மாணவர்களை நெறிப்படுத்தவும் "How to do Fieldwork Studies"?, "Field Work Methodology" என்ற பொருண்மைகள் பற்றி ஆங்கிலத்தில் வெளிவந்த நூல்கள் அக்காலத்தில் பயன்பாட்டில் இருந்தன. இந்நிலையில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறையில் தான் பெற்ற அறிவையும் பட்டறிவையும் துணைக்கொண்டு ஆய்வு மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் **"ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை"** என்ற நூலை எழுதி, 1963 இல் வெளியிட்டார். இந்நூல் ஆக்கம் பெறுவதற்குரிய முக்கிய காரணத்தைப் பேராசிரியர் அவர்கள் வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> "செந்தமிழ் மொழியில் இதுவரையும் இத்தகைய ஒரு நூலாவது வெளிவராதது பெரும் குறையாகும். இக்குறையைப் போக்க யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிருத்திச் சங்கத்தினர் முன்வந்தது மகிழ்ச்சிக்குரியது. ஈழத்திலே செந்தமிழையும் ஆரியத்தையும் போற்றிப் பாதுகாத்து வரும் இச்சங்கத்தினர் ஆராய்ச்சிக் கலையில் மாணவர்களை ஈடுபடுத்தித் தமிழ் மக்களின் கலைகளையும் பண்பாட்டையும் ஆராய்ச்சி செய்யத் தூண்டுவது காலத்தின் ஒரு நல்ல அறிகுறியெனவே யான் கருதுகிறேன்". (பக்.vi)

இந்நூல் பின்வரும் இயல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது:

1. ஆராய்ச்சிக் கட்டுரை,
2. ஆராய்ச்சிக் கட்டுரையின் அமைப்பு,
3. மேற்கோள்,
4. அடிக்குறிப்பு,
5. மேற்கோள் நூற்பட்டியல்,
6. உத்திகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றுடன் மேற்கோள் நூற்பட்டியலும் கொண்டுள்ளது.

அக்காலத்தில் ஈழத்திற் கல்விமானாகத் திகழ்ந்த சு. நடேசபிள்ளை அவர்கள் இந்நூலின் சிறப்புப் பற்றி அதன் முன்னுரையில், வருமாறு எழுதுகிறார்:

> "இந்நூல் தமிழ் ஆராய்ச்சித் துறையில் ஈடுபடுவோருக்கு மிகவும் பயன் தருவதாகும். தமிழில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுபவர்கள் இக்காலத்திற் கவனிக்க வேண்டிய முக்கியமான முறைகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம் முதலிய மேற்றிசை மொழிகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல துறைகளில் வெளிவருகின்றன. அவற்றிற் கையாளப்படும் முறைகள் படிப்பவர்களுக்குத் தெளிவை உண்டாக்கத்தக்கன. அவற்றைத் தமிழுக்கியைந்தவாறு பொருத்தி அமைத்து இந்நூல் விளக்குகின்றது. தமிழிலக்கண நூல்களிலே தொல்லாசிரியர்கள் காட்டிய உத்தி வகைகளும் இந்நூலில் இடம்பெறுகின்றன. இவ்வுத்திகள் எல்லாக் காலத்திலும் நூலாசிரியர்கள் மேற்கொள்ள வேண்டியன என்பதையும் இந்நூல் வலியுறுத்துகின்றது."

ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவோர் முதலில் தாம் எடுத்துக்கொண்ட ஆய்வுப் பொருளையும், தலைப்பையும் நன்கு ஆலோசித்துத் உறுதியாகத் தீர்மானித்து, அதன் எல்லைகளையும் வரையறை செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு செய்துகொள்ளாவிட்டால் அடிக்கடி தமது ஆய்வுத் தலைப்பை மாற்றுவதோடு, கால விரயத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அடுத்ததாக ஆய்வுக்கட்டுரையின் அமைப்பை ஒழுங்குபடுத்தும்போது, ஆராயப்படவுள்ள பொருளைப் பற்றிய அறிமுகம் (முன்னுரை), உள்ளடக்கத்தின் உபபிரிவுகள், முடிவுரை, ஈற்றிலே துணைநூற் பட்டியல், பின்னிணைப்பு என்பன அமைதல் என்ற விடயங்களைக் கருத்திற் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இத்தகைய இன்றியமையாத பொருண்மைகள் இந்நூலில் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டிருத்தல் இதன் இன்றியமையாமையை உணர்த்துவதாகும்.

பல்கலைக்கழகங்களில் அறிவியல், இலக்கியம், கலைகள், தத்துவம், பொருண்மியம் எனப் பல்வேறு துறைகளில் முதுகலைமானி, முனைவர் ஆகிய பட்டங்கள் பெறுவதற்காகப் பல நூற்றுக் கணக்கானோர் ஆண்டு தோறும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து வருகிறார்கள். பல ஆய்வாளர்கள் எழுதும் ஆய்வுக் கட்டுரைகளின் வரைவிலக்கணங்களுக்கு அப்பால் அமைந்திருப்பதை நன்கு அவதானிக்கலாம். அதுபோன்றே கருத்தரங்குகளில் வாசிக்கப்படும் சிலரது கட்டுரைகளும் ஆய்வுக்கட்டுரையின் அமைப்பற்ற தன்மை கொண்டனவாக உள்ளன. "தாம் எடுத்துக்கொண்ட பொருளை விளக்குவதற்கு இன்றியமையாதன எனக் கண்ட கருத்துக்களைப் பல நூல்களிலிருந்து திரட்டித் தம் நுண்மதி கொண்டு ஆராய்ந்து, அக்கருத்துக்களைத் தமதாக்கி, ஆராய்ச்சியாளர் புதிதாகப் படைக்கும் படைப்பே ஆராய்ச்சிக் கட்டுரையாகும்" எனப் பேராசிரியர் குறிப்பிடுவது ஆய்வுக் கட்டுரை எழுதுவோரை நன்கு நெறிப்படுத்தும் வாசகமாகும். ஆய்வுக் கட்டுரை எழுத முற்படுவோர் முதலிற் படிக்க வேண்டியதொரு வழிகாட்டியாக இந்நூல் அமைகிறது என உறுதியாகக் குறிப்பிடலாம்.

## (நூல் - 4) கருத்துரைக் கோவை – 1959

பேராசிரியர் அவர்களின் இந்நூல், பாடசாலைகளில் உயர் வகுப்புக்களிலே தமிழ் பயிலும் மாணவர்களுக்காக எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக 132 பக்கங்களில் அமைந்துள்ளது. அதில் இடம்பெற்றள்ள கட்டுரைத் தலைப்புக்கள் வருமாறு:

1. ஈழமுந் தமிழும்
2. வினோபாவின் கனவு
3. வான்வெளிப் பயணம்
4. ஏடு காத்த கிழவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எனது மேல்நாட்டனுபவம்
6. பறம்புமலைப் பாவலர்
7. இயற்கையின் விந்தை
8. வித்துவக் காய்ச்சல்
9. தத்துவஞானி சுவைட்சர்
10. தமிழ் இலக்கியமும் மக்கள் வாழ்க்கையும்.

மேற்குறிப்பிட்ட தலைப்புக்களில் அமைந்த இந்நூல் மாணவருக்கு வாசிப்பு ஆர்வத்தைப் பெரிதும் தூண்டுவதாக அமையும் தன்மையதாகும். இலக்கியம், அறிவியல், தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதையர் (ஏடு காத்த கிழவர்), பெரியோர் வாழ்க்கைமுறை, தமிழ் நாட்டின் பெருமை, திருக்குறளுக்குப் பெருமை சேர்த்த தத்துவஞானி அல்பேர்ட் சுவைட்சர் வாழ்க்கை வரலாறு, முதலான பல அரிய பொருள்கள் பற்றிய தகவல்களை இந்நூல் கொண்டுள்ளது. குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் தமிழ் அறிவைப் பெருக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் எழுதப்பட்டதே இந்நூலாகும். இந்த நூலுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக மேனாட் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரன் எழுதிய அணிந்துரையின் ஒரு பகுதியை நோக்குதல் பொருத்தமாகும்:

> "அறிஞர் ஆ. சதாசிவம் அவர்கள் எழுதிய கருத்துரைக் கோவையினை ஓதும் பேறு பெற்றேன். மாணவர்களுக்கு ஏற்றவகையில் இந்த நூல் அமைந்துள்ளது. பல வகையான பொருள்களைப் பற்றிய கட்டுரைகளை இங்கே காணலாம். பழமை, புதுமை, இலக்கியம், பயணம், இன்றைய குறிக்கோள், நாடு, மொழி, வாழ்க்கை முதலியவற்றைப் பற்றிய கட்டுரைகள் மாணவர்கள் கற்கவேண்டியவை."

## இலக்கியக் கட்டுரைகள்:

பேராசிரியர் அவர்கள், மேற்குறிப்பிட்ட நூல்களோடு தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, மொழியியல், சமயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன பற்றி எழுதிய ஆய்வுக் கட்டுரைகளையும் பல்வேறு இதழ்களிலும் வெளியிட்டுள்ளார். அவற்றுட் சில கட்டுரைகளின் விபரம் வருமாறு:

- "ஈழத்துத் தமிழ் அறிஞர்கள்", செந்தமிழ், தொகுதி-56, தமிழ் நாடு.
- "பழமையும் புதுமையும்", கலைப் பூங்கா, 1964 புரட்டாதி இதழ், சாகித்திய மண்டலம் வெளியீடு. பக். 5-8
- "தொல்காப்பியம்", கலைப் பூங்கா, 1963,சாகித்திய மண்டலம், வெளியீடு
- "பண்டிதம்", கலைப்பூங்கா,1964 புரட்டாதி இதழ், சாகித்தியமண்டலம், பக் 5-7
- "செந்தமிழ்" (ஆசிரியர்கருத்து) கலைப் பூங்கா, 1963 ஏப்ரல் இதழ், சாகித்திய மண்டலம், வெளியீடு. பக். 5-8
- "எமது இலக்கியப் பாதை", (ஆசிரியர் கருத்து) கலைப் பூங்கா, புரட்டாதி 1963
- "19ஆம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி: தமிழ் அறிவியல் நூல் வளர்ச்சி"
- "சைவ சித்தாந்தம்", இந்து தர்மம், 1958-1959, பேராதனைப் பல்கலைக்கழகம், பக்.46-48.
- "காலத்தால் மூத்த செந்நெறி: சிவநெறியும் திருமுறைகளும்" வீரகேசரி வார வெளியீடு. 07.11.1982
- "திராவிடத் தாய்", இளங்கதிர் 1959-1960, தமிழ்ச் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம். பக். 113-116.
- "பாஞ்சாலி சபதம் - புலமையும் கற்பனையும்", இளம்பிறை, 1970, பக்.17-23.
- "தமிழ்க் காப்பியங்கள்", இளம்பிறை, கார்த்திகை, 1964
- "இலக்கியமும் மக்கள் வாழ்க்கையும்", கலைப் பூங்கா, பக். 77- 86
- "ஈழமுந் தமிழும்", "ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்", செந்தமிழ்த்தேன், பக், 1-9; 93-98.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- “தமிழில் வேர்ச் சொற்கள்”, இளங்கதிர், பேராதனைப் பல்கலைக்கழகம். 1957-58, பக். 104-109.
- “தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கைகள்”, கலைப் பூங்கா, சித்திரை, 1963:பக். 19-27
- “நன்னூல் இலக்கணமும் மொழியியற் கோட்பாடுகளும்”, இளந்தென்றல், 1969-1970.
- “சிந்துவெளி நாகரிகம்'', ஆத்மஜோதி, பக் 117—118
- “சிவநெறியும் திருமுறை மரபுகளும்'', வீரகேசரி வார வெளியீடு, 07.11.1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 4

# சைவ நெறிமுறைகளை மக்களுக்கு உணர்த்திய சைவப் பெரியார்

பேராசிரியர் அவர்களின் சைவ சித்தாந்த அறிவும் தெளிவும் குறிப்பிடத் தக்கவை. அவர் எழுதியுள்ள "சைவ சித்தாந்தம்" என்ற கட்டுரையைச் சைவ சித்தாந்தத் தத்துவக் கருத்துக்களைப் பாமரரும் விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடனே எழுதி மக்களுக்குச் சைவ சித்தாந்தம் கூறுவது என்ன என்பதைப் புரியவைத்தவர். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது 'சைவம்'. விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டது 'வைணவம்'. இன்று சைவ மக்கள் வாழும் ஈழநாட்டின் முக்கிய நகரங்களிலெல்லாம் சைவக் கோயில்கள் காணப்படுகின்றன. சைவம் ஒரு பக்தி மார்க்கம். சைவசமய தத்துவங்களை அறியாதோரும் சைவ சமயத்தில் முத்தி அடையலாம். கடவுளின் முன்னின்று அவனை நினைந்து உருகிப்பாடி வழிபட்டுத் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் அவனுக்கு அர்ப்பணஞ் செய்ய முன்வருவோர் பிறவாப் பேரின்ப நிலையை அடையலாம் எனச் சைவம் கூறுகிறது.

மனிதன் தன் இழிமையையும் கடவுளின் பெருமையையும் உணர உணர அவனுக்குக் கடவுளின் ஆற்றலில் ஈடுபாடு ஏற்படுகிறது. இந்த ஈடுபாடு வளர்ந்து விட்டால் மனிதன் கடவுளை ஆண்டானாகவும் தன்னை ஓர் அடிமையாகவும் உணர்கிறான். வெறும் பக்தியனால் இறைவனை அடையலாம் என்பதற்குச் சைவ நாயன்மார்களின் வாழ்க்கை சான்றாக அமைகின்றது. 'சைவ சித்தாந்தம்" என்பது சைவத்தின் முடிந்த முடிபு என்னும் பொருள்கொண்டது. சைவ சித்தாந்தம் என்பது பதி, பசு, பாசம் (கடவுள், உயிர், உலகு) என்னும் முப்பொருள் உண்மையைக் குறிப்பதாகும். இவற்றில் உயிர் அறவழி சென்று, நல்லனவற்றைச் சாதித்துக்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளை அடைவதையே சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது. கடவுள் எல்லாம் அறிந்தவர்; உலகம் மாயையில் இருப்பது; உயிர் உலகமயப்பட்டது அது, ஆணவம் கன்மம் மாயை என்ற மலங்களுக்கு ஆட்பட்டு கடவுளை அடைய முடியாதுள்ளது. ஆனால் உயிரானது, "சார்ந்ததன் வண்ணமாயுள்ளது" என சிவஞானபோதம் கூறுகின்றது. எனவே உயிர் நல்லனவற்றை அறிந்து, இறைவனை அடையும் வழியைக் காட்டுவது சைவசமய தத்துவ நெறியாகும்.

இவ்வழி ஒழுகுவோர் **சாலோகம்** (இறைவனுடைய உலகில் ஆன்மா இருப்பது), **சாமீபம்** (இறைவன் முன்னிலையில் ஆன்மா இருப்பது), **சாரூபம்** (சிவன் உருவத்தில் அருகில் இருப்பது), **சாயுச்சியம்** (இறைவனுடன் இரண்டறக் கலந்த நிலை) ஆகிய நான்கு முத்திநிலைகளை அடைவர். இவற்றை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனக் கூறப்படும் நான்கு படிமுறைகளால் அடையலாம் என்பதற்கு முறையே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் பெற்ற முத்தி நிலைகள் உதாரணமாகும் என்றும் விளக்கியுள்ளார். சைவ சித்தாந்த உண்மையை எளிதிற் புரிந்து கொண்ட தெளிவு பேராசிரியரிடம் இருந்தது என்பதற்கு இக்கட்டுரை தக்க சான்றாகும்.

**திருமுறைகளை எவ்விடத்தும் ஓதலாம்:**

ஈழம் சிவ பூமியாகும். இலங்கைத்தீவின் நான்கு திசைகளிலும் கடற்கரை ஓரங்களில் அமைந்துள்ள சிவ ஆலயங்களின் தொன்மை இவ்வுண்மையைச் சான்றுபடுத்துகிறது ஈழத்தில் பௌத்தம் அறிமுகமாக முன்னரே பல ஆயிரம் ஆண்டுகளாக சைவம் இந்நாட்டில் நிலைபெற்றிருந்தது என்பது அகழ்வாராய்ச்சிகளின் மூலம் உறுதியாகியுள்ளது. ஆரிய மயப்பட்ட சைவசமய வழிபாட்டு முறைகளும், வேதம், ஆகமம், புராணங்கள் என்பன கூறும் ஆரியச் சடங்குகள் மற்றும் வழிபாட்டு முறைகளும், பூர்வீகத்திராவிடர் வழிவந்த தமிழ் மக்களின் வழிபாட்டு முறைகள், வாழ்வியற் சடங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகள் என்பனவற்றிற் புதிதாகப் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திவிட்டன. அவற்றின் தொடர்ச்சியாகவே சைவ மக்களின் மரணவீட்டில் திருமுறைகள் ஓதக்கூடாது என்ற சர்ச்சையை ஆரிய வழிபாட்டினர் ஏற்படுத்திவிட்டனர். ஈழத்துச் சைவப் பெரியார்கள் பலர் இதனை மறுத்துப் பத்திரிகைகளிற் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டனர். எனினும் அப்பிரச்சினை தீர்க்கப்படாமலேயே தொடர்ந்து இருந்துவந்த வேளையிற், பேராசிரியர் சதாசிவம் அவர்கள் தனது சைவசித்தாந்த அறிவையும் பட்டறிவையும் துணையாகக் கொண்டு இதுபற்றி மிகவும் உறுதியான முறையிற் பத்திரிகையில் எழுதியுள்ள விளக்கம் அனைவருமே அறிந்துகொள்ள வேண்டியதாகும்.

பேராசிரியருக்குப் பழமையிலும், சமய இலக்கியங்களிலும் ஆழமான பற்று இருந்தது. சைவ சமயத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் நெருக்கடி ஏற்பட்டபோதெல்லாம் அவர் குரல்கொடுக்கத் தயங்கியதில்லை. அதுபற்றி எழுதவும் பின்நிற்கவில்லை. மரணச் சடங்குகளில் திருமுறை பாடக் கூடாது என்ற பிரச்சினை தோன்றியபோது பேராசிரியர் வருமாறு எழுதினார்:

> "முப்பது ஆண்டுகளாகச் சைவ சமயத்தையும் சித்தாந்த தத்துவத்தையும் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் போதித்து வரும் ஆசிரியர் என்ற முறையில் யான் சில விளக்கங்கள் கூறுவது பொருத்தம் என உணர்கிறேன். ஆன்மாக்கள் பிறவி எடுப்பதற்கு முன்னர் அவை சிவத்தின் நிலையை ஒத்தவை எனவும், வீடுபேறு என்பது ஆன்மா மீண்டும் தன் சுயநிலையை அடைதல் எனவும் சைவ சித்தாந்தந்தம் கூறுகின்றது. பிறவி எடுத்த ஆன்மா ஆணவ மலத்துடன் பந்தப்பட்டுச், சூக்கும சரீரம், தூலசரீரம் என இரண்டையும் பெறுகிறது. பிறப்பு - இறப்பு என்பன போக்கு வரவு புரியும் ஆன்மாவின் செயல்களாகும். மரணம் என்பது எமது கண்ணுக்குத் தெரியும் தூல சரிதத்தைவிட்டு ஆன்மா பிரிதலாகும் என்பதை 'சிவஞான பாடியம்" நன்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகிறது. எனவே மரணம் என்பது ஆன்மாவின் போக்கு வரவு ஆகும். அது ஆன்மாவின் ஒரு புனிதமான செயலாகின்றது. ஆதலினாலேதான் சைவசமயத்தவர் திருமுறை ஓதுதல் மூலமே இறைவனை வேண்டி ஆன்ம ஈடேற்றம் பெறுகின்றனர். ஆரியர் வகுத்த வேதங்களை ஆரியர் வகுத்த மேல்தட்டு மக்கள் மட்டுமே ஓதலாம்; கேட்கலாம். எனவே சைவ மக்களாகிய நாம் திருமுறைகளைத் தேவையான இடங்களிற் கட்டாயமாக ஓதவேண்டும். அதனைத் தடைசெய்யவோ தவறு எனக் கூறவோ ஆரியருக்கு அதிகாரம் இல்லை." ("சிவநெறியும் திருமுறை மரபுகளும்", வீரகேசரி, 07.11.1982)

வேதங்கள் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்துப் பண்பாட்டை உடையது சைவ நெறி. தமிழ் மொழியிற் பூசை செய்தலே வேத காலத்திற்கு முற்பட்ட முறையாகும். காலத்தாற் பின்னர் வந்த ஆரியக் கோட்பாடுகளைப் பின்பற்றியோரால் தமிழ் மக்களிடையே நான்கு வருணப் பாகுபாடுகள் திணிக்கப்பட்டன. சைவ ஆலயங்களில் வேதம் ஓதும்முறையும் புகுத்தப்பட்டது. ஈழத்துப் பாடசாலைக் கல்வியிற் சமய பாடத்தின் மூலம் பெற்ற அறிவினால் சைவ மக்களிடையே திருமுறைகள் இப்போது பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளது. ஆரியரின் சாதிப்பாகுபாடு தகர்க்கப்பட்டு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கோட்பாடும் தமிழரிடையே தலையெடுத்து விட்டது. தமிழ் நாட்டிலே தமிழிற் கோயிற் பூசைகள் நடை பெறுகின்றன. அதனை அரசே முன்னின்றும் நடத்துவிக்கின்றது. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளின் அடிப்படையிற் கோயிற் கிரியைகளிலும், மற்றும் மிக முக்கியத்துவம் வாய்ந்த மரணக் கிரியைகளிலும் திருமுறைகள் ஓதப்படுதல் மனிதகுலம் நல்வழியில் வாழ வழிகாட்டுவதாகும். மரண வீட்டில் மனம் கலங்கிய நிலையில் இருக்கும் சைவ மக்களின் மனதைச் சாந்தப்படுத்தவே உருக்கமான முறையிலே திருமுறைகளைப் பாடவல்லவராலே திருமுறைகள் பாடப்படுகின்றன. அவற்றைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவோர் சிறந்த மெய்யடியார்களாவர். (மேலது: வீரகேசரி. 07.11.1982).

பேராசிரியரின் மேற்குறிப்பிட்ட கருத்துக்களிலிருந்து அவர், சைவத் தமிழ்ப் பண்டிதராக இருந்தும், ஆரிய வேதநெறி வழிப்பட்ட பிராமணர், சைவத்தமிழ் மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்படுத்திய சாதிப்பிரிவினைகள், வாழ்வியற் சடங்குகளில் ஏற்படுத்திய தடைகள், பொய்ப் பரப்புரைகள் என்ற விடயங்களில் அறிவுவழிப்பட்டுச் சமய சித்தாந்த வழியாகவும், மானுடதர்ம அடிப்படையிலும் மிகவும் துணிந்து மக்கள் சமூகத்திற்குத் தேவையானதும் பின்பற்றத்தக்கதுமான கருத்துக்களை முன் வைத்தவர் என்பது புலப்படுகின்றது.

## சமயங்களும் உலக சமாதானமும்:

பல்வேறு நாடுகளில் வாழும் மக்கள் மதங்களின் பெயராற் பிரிவுபட்டு வாழ்வதோடு, மதங்களின் பெயரால் போர்களும் மக்கள் அழிவுகளும் காலம் காலமாக இடம் பெற்றே வந்துள்ளன. அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ச்சி பெற்றுள்ள இந்நூற்றாண்டில் மதங்களின் பெயரால் அரசுகளின் உதயமும், மதத்தின் பெயரால் கொடூர போர்களும் ஏற்படுவதைத் தடுத்து, மதங்களுக்கிடையே ஒற்றுமையையும், உலக சமாதானத்தையும் நிலைபெறச் செய்யும் வகையில் உலக சமாதானத்திற்கான அமைப்புகளும், உலக சமய – சமாதான மாநாடுகளும் 1960களுக்குப் பின்னர் இடம்பெற்று வருகின்றன. அவ்வகையில் ஆசிய நாடுகளின் சமயங்களின் அடிப்படையில் சிங்கப்பூரிலும், யப்பானிலும் சமய-சமாதான மாநாடுகள் (Asian Conference on Religion and Peace) நடைபெற்றுள்ளன. அதுபோன்றே உலக நாடுகளின் சமயங்களும் சமாதானமும் (World Conference on Religion and Peace) என்ற அடிப்படையில் நியுயோர்க், ஜெனிவா ஆகிய இடங்களில் மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இம்மாநாடுகளின் ஒழுங்கமைப்பில் இலங்கைப் பிரிவுக்குத் தலைவராகப் பேராசிரியர் சதாசிவம் அவர்கள் செயற்பட்டதோடு, உலக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதன மாநாடுகளில் இந்து சமயத்தின் பெயரால் அவற்றிற் பங்குபெறும் இலங்கைப் பேராளராகவும் நியமிக்கப்பட்டமை அவரது கல்வித் தகுதியையும் இந்து சமயம் பற்றி அவர் பெற்றிருந்த அறிவையும் வெளிப்படுத்துவனவாகும்.

அடுத்ததாக இந்து சமயம் - சைவ சமயம் என்ற பெயர் பற்றிய சர்ச்சைகள் இப்போது தொடங்கியுள்ளன. 'இந்து சமயம்' என்ற சொற்றொடரில் உள்ள பல்வேறு சிக்கல்களையும், அதன் பொருத்தமின்மையையும், இந்திய வரலாறு, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் முதலான சான்றுகளின் அடிப்படையில் நிறுவி, இந்து சமயம் என்ற பெயருக்குப் பதிலாகச் சைவம், சைவசமயம் என்பனவற்றையே பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப் பட்டுள்ளது. பேராசிரியர் சதாசிவம் அவர்கள் அரை நூற்றாண்டுக்கு முன்பாகவே 1960களில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஈடுபட்டவராவார். பேராசிரியர் அவர்கள் இலங்கை கல்வி அமைச்சின் இந்துசமய ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றிருந்தவர். இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் **"இந்து சமய பாடம்"** என்ற பெயரிலேயே கல்விப் பொதுத்தராதர சாதாரணத் தேர்வு (G.C.E.-O/L Examination) நடத்திவந்தது. அத்திணைக்களத்தின் தலைமை அலுவலராக இருந்த பெருமதிப்புக்குரிய திரு. உடகம அவர்களின் உதவியுடன், "இந்து சமய பாடம்" என்பதைச் **'சைவநெறிப் பாடம்'** என மாற்றியதிற் பேராசிரியர் சதாசிவம் அவர்களுக்கும் பெரும் பங்குண்டு என்பது பதிவுசெய்யப்பட வேண்டியதாகும்.

**இந்து நாகரிகம்** என்ற பெயரிற் கல்விப் பொதுத் தராதர உயர்தரத் தேர்வுக்குரிய (G.C.E.-A /L Examination) கல்வி பாடசாலைகளில் வழங்கப்படுகிறது. பல்கலைக்கழகங்களில் இந்துநாகரிகம் என்ற துறையும் பீடமும் அமைந்துள்ளன. இப்பெயரை மாற்றுவதற்கான பல்வகை முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது. பல்கலைக்கழகத்தில் இக்கல்வி நெறிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்பும் உயர்வும் அளித்தவர் பேராசிரியர் சதாசிவம் அவர்களே என்பது பற்றிய விபரங்கள் ஐந்தாம் இயலிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

சைவ சமய நடைமுறைகள் தொடர்பான சிக்கல்கள், பிரச்சினைகள் சமூகத்தில் ஏற்படும்போதெல்லாம் பேராசிரியர் துணிந்து செயற்பட்டு அவற்றுக்குத் தீர்வு வழங்கியவராவார். யாழ்ப்பாணத்தில் மரணவீடுகளிலே திருமுறை ஓதப்படுதல் தவறு என ஆரிய வேத மரபினர் எதிர்ப்புக்காட்டினர். இதற்கு எதிராகப் பல சைவப் பெரியார்கள் மறுப்பு எழுதினர். திருமுறைகளே சைவ மக்களின் வாழ்வியல் வழிகாட்டியாகும். திருமுறைகளே சைவ வேதம் என்ற அடிப்படையில் வாதங்கள் நடைபெற்றன. இவ்வேளையிற் பேராசிரியர் **"காலத்தால் மூத்த செந்நெறி: சிவநெறியும் திருமுறைகளும்"** என்ற விரிவான ஒரு கட்டுரையை 01.11.1982இல் வீரகேசரியில் எழுதினார். அக்கட்டுரையிற் பின்வரும் முதன்மையான கருத்துக்களை பேராசிரியர் முன்வைத்தார்:

> "வேதங்கள் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்துப் பண்பாட்டை உடையது சைவநெறி. கி.மு. 4000 ஆண்டுவரை ஏற்பட்ட பிரளயத்தின் பின் குமரிக் கண்டத்திலிருந்து பாரசீகக் குடா நாடுகளிற் குடியேறி உலகத்தின் முதலாவது பேரரசினை அமைத்துப் புகழ்பெற்ற சுமேரி (குமரி) யர் எனப்படும் தமிழர்கள் கி.மு. 2700 வரையில் அங்கு பொறித்து விட்டுச் சென்ற கல்வெட்டுக்களிற் "சிவ" என்ற சொல்லும், அதன்பொருள் "எல்லா உயிர்களிலும் இறைவன் காணப்படுகிறான்" என்றும், அதே காலத்திற் சிந்து வெளியிற் பொறிக்கப்பட்ட முத்திரைகளில் நான்கு மிருகங்களின் நடுவே வீற்றிருக்கும் வடிவம் பசுபதி நிலையிலுள்ள "சிவன்" என்றும், அங்கு அகப்பட்ட சிவலிங்க முத்திரைகளின் அடிப்படையில் விளக்கங் கூறுவர் சேர். ஜோன் மார்சல். சிவன் ஒரு காத்தற் கடவுளாகவே கருதப்பட்டு வந்தார். வேத காலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஆரியர் தமது அழித்தற் கடவுளாகிய உருத்திரனைச் சிவனுடன் இணைத்து அவரது திருநாமங்களில் ஒன்று எனக் கூறிச் சிவநெறியைத் தழுவினர். யாகங்களைச் செய்வதன் மூலம் தமக்குக் கீழ்ப்பட்ட வருணத்தினடமிருந்து பொருள் பெற்றுக் கடவுளை காட்டிக் கொடுக்க முற்பட்ட பிராமணர்களின் செய்கையைப் புத்தபெருமானே கடிந்து கூறிப் பிறிதொரு மதத்தையே தோற்றுவித்தார். பகுத்தறிவும் அறிவு வளர்ச்சியும் ஏற ஏறச் சமுதாயப் புரட்சிகள் தொடரலாயின. வழக்காறு அற்றுப்போன வேதியர்களின் வைதீக மரபுகளைச் சைவமரபுகளுடன் இணைப்பதன் மூலம் பிராமணர்கள் யாகசாலைக்குப் பதிலாக முற்றிலும் மாறுபட்ட பண்பாடுடைய பயன்தரும் சைவக் கோயில்களுட் புகுந்து கடவுளைக் காட்ட முற்பட்டனர். பல்லவர் காலத்தில் தோற்றம்பெற்றப் பக்திப் பாடல்களில் நாயன்மார்கள் சைவமரபின் அடிப்படைகளை மீண்டும் வற்புறுத்தியதன் மூலம் சாதி வருணப் பாகுபாடற்ற மனித குலத்தின் ஒருமைப்பாட்டை நன்கு விளக்கியுள்ளனர். இவர்களிற் பெரும்பாலானோர் பிறப்பினால் அந்தணர்களாயினும், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் போன்று "சாதிகள் இல்லையடி பாப்பா" என்ற கருத்தை வற்புறுத்திச் சைவ உலகின் ஆன்மீக மரபுகளுக்கு விளக்கம் கூறிவிட்டுச் சென்றனர். சாதிவகுப்புகளற்ற சமுதாயத்தை உருவாக்கும் பண்பினை அடிப்படையாகக் கொண்ட சைவத்திருமுறைகள் ஆன்மாக்களின் தனிநிலையை வற்புறுத்துவதன் மூலம் வேதாகம மரபுகளின் அடித்தளத்தையே உடைத்துவிட்டன".

இக்காரணங்களை முன்னிட்டே இலங்கையிலுள்ள சைவசமயத்தவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகாட்டும் சைவசித்தாந்தப் பேராசிரியர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும், அதற்காகிய நிதியைத் திரட்டுவதற்குப் பொதுமக்களும், நிறுவனங்களும், பெரிய கோயில்களின் ஆட்சிக் குழுக்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்றும் தீர்மானித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவுக்கு மனுச்செய்துள்ளனர் எனவும் அறிகிறோம். இது கைகூடும்போது பெரியார் சிவபாதசுந்தரனார் விட்டுச் சென்ற சைவசித்தாந்த மரபுநெறி எம் ஈழவள நாட்டிலே துலக்கம் பெறும் என நம்புகிறோம்.

இடைக்காலத்திற் சைவநெறியிற் புகுத்தப்பட்ட வைதீக மரபுகளைக் களைந்தெறிவதையே 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என வழிபடும் சிவநெறியாளர்களின் முழுமுதற் கடவுளாகிய சிவனும் விரும்புவர். சிவன் தமிழ் மொழியை நேசிப்பவர். தமிழாற் சொன்மாலைகள் தொடுத்தும், பாடி வழிபட்ட நாயன்மார்களின் வேண்டுகோள்களைச் செவிமடுத்த இறைவன் எத்தனை அற்புதச் செயல்களைச் செய்து காட்டியுள்ளார். தெய்வமொழியாகிய வடமொழியிற் பூசை செய்தால்தான் இறைவன் செவிசாய்த்துக் கேட்பார் என்ற போலி வாதம் இடைக்காலத்தில் ஏற்பட்டது. வேதங்களும் அவற்றின் மரபுகளும் தோன்றுவதற்கு மிக முற்பட்ட காலத்திலிருந்தே சிவநெறி வளர்ந்து வருகின்றது என்பது மேலே காட்டிய வரலாற்றிலிருந்து தெரிகிறது. தமிழ் மொழியிற் பூசை செய்தலே வேதகாலத்திற்கு முற்பட்ட சிவநெறி மரபாகும். மக்கள் மொழியாகிய தமிழில் பூசை நடைபெறுங்காலம் மிகத் தொலைவில் இல்லை. ... "இந்து சமயம்" என்ற போர்வையில் ஊடுருவலான வைதீகக் கருத்துக்கள் இலங்கை முழுவதிலும் வழக்கிலிருக்கும் "சைவநெறி" யினாற் களைந்தெறியப்பட்டுவிட்டன. எனவே இந்த நூற்றாண்டு முடிவதற்கிடையிற் சிவநெறி மரபுகளும் சித்தாந்தக் கோட்பாடுகளும் இலங்கை வாழ் 20 இலட்சம் சைவ மக்கள் மத்தியில் வேரூன்றிவிடும். எனவே மனிதனின் ஆன்மீகப் பண்பாட்டுக்குக் கோயிற் கிரியைகளிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த மரணச் சடங்குகளிலும் திருமுறைகள் ஓதப்பட்டு மனிதனை நல்வழியில் நெறிப் படுத்தும். இதனைத் தடுக்க எவராலும் முடியாது."

இவ்வாறு சைவ சமயப் பாதுகாவலராகப் பேராசிரியர் சதாசிவம் அவர்கள் சைவ சித்தாந்தவாதியாகவும் செயற்பட்டார் என்பது நன்கு தெளிவாகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் 5

# கொழும்புப் பல்கலைக்கழகத்திற் பேராசிரியரின் வினைத்திறன்கள்

கொழும்புப் பல்கலைக்கழகத்திலே தமிழ், இந்து நாகரிகம் என்ற கற்கை நெறிகளின் பிதாமகன் பேராசிரியர் சதாசிவம் அவர்களே ஆவார். 1965ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு (University Grant Commission) இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கொழும்புப் பிரிவை கொழும்பில் அமைத்தது. அங்கு தமிழ், சமஸ்கிருதம், சிங்களம், வரலாறு, புவியியல், பொருளாதாரம், ஆங்கிலம் முதலான துறைகளும் அமைக்கப் பட்டன. முதன் முதலாக 303 தமிழ் மாணவர்கள் அனுமதி பெற்றுக் கொழும்பு வளாகத்திற்கு 1965இல் வந்திருந்தனர். அவர்களில் நானும் ஒருவராக இடம்பெற்றுப் பேராசிரியர் சதாசிவம் அவர்களிடம் தமிழ் கற்கும் பேறும் பெற்றோம். அவரே எனது முதல் பல்கலைக்கழக ஆசிரியருமாவார். அவரே தமிழ்த்துறைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். முதலிற் கொழும்பில் முதலாம் வருடத் தேர்வு முடிந்த பின்னர் மாணவர்கள் அனைவரும் பல்துறைகளைத் தேர்ந்தெடுத்துக் கற்கும் வகையிற் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்படுவது வழக்கமாக இருந்தது.

1970இல் கொழும்புப் பல்கலைக்கழகப் பிரிவு தனித்து ‘கொழும்புப் பல்கலைக்கழகம்’ எனத் தரம் உயர்த்தப் பட்டது. அப்போது சதாசிவம் அவர்களுக்குக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் பதவியும் வழங்கப் பட்டது. 1969இல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற் சிறப்புக் கலைமானித் தேர்வில் முதலாம் பிரிவிற் சித்தியடைந்து அப்பல்கலைக்கழகத்திலே தற்காலிக உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். பேராசிரியர் சதாசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் என்னைப் பல்கலைக்கழக நேர்முகத் தேர்வுச் சபையின் மூலமாகத் தேர்ந்தெடுத்துக் கொழும்புப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் நிரந்தர விரிவுரையாளராக 1971இற் சேர்த்துக்கொண்டார்.

இதனிடையே வித்தியாலங்காரா (களனி), வித்தியோதய (மகரகமை) என்ற இரு பல்கலைக்கழக வளாகங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் உருவாக்கப்பட்டன. வித்தியலங்காரா வளாகத்திலே தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது. அப்பொறுப்பும் பேராசிரியர் சதாசிவம் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. தொடக்கத்தில் இரு ஆண்டுகள் அவ்வளாகத்தில் தமிழ் கற்பித்தலுக்கு என்னைப் பொறுப்பாக நியமித்தார்கள். நான் கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் வித்தியாலங்காரா வளாகத்திலும் விரிவுரைகள் நடத்தினேன். பின்னர் ஏனைய விரிவுரையாளர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றதும், நான் எனது கலாநிதிப்பட்ட ஆய்வில் முழுமையாக ஈடுபடலானேன். பேராசிரியர் சதாசிவம் அவர்களே எனது மேற்பார்வையாளராக இருந்து என்னை நெறிப் படுத்தினார் என்பதும் எனக்குப் பெருமையாகும்.

பௌத்த நாகரிகம் என்ற கற்கைநெறி பல்கலைக் கழகத்திற் கற்பிக்கப்பட்டு வந்தது. அதுபோன்று தமிழ் மாணவர்கள் இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகக் கற்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதிற் பேராசிரியர் பெரிதும் அக்கறை கொண்டு, அதற்குரிய பல்வகை முயற்சிகளில் ஈடுபட்டு வந்ததை நான் நன்கு அறிவேன். அப்போதைய உடுப்பிட்டி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரத்தின் முயற்சியால் பல்கலைக்கழக மானியக் குழு இந்து நாகரிகத்தைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாகக் கற்பிப்பதற்கு ஒப்புதல் அளித்தது. பேராசிரியர் வி. செல்வநாயகம், கைலாசநாதக் குருக்கள் ஆகியோர் இந்து நாகரிகப் பாடநெறியைத் தயாரித்துப் பல்கலைக்கழக மூதவையிடம் அனுமதியும் பெற்றனர். அந்தப் பாடநெறியைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலிற் செயற்படுத்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்வீரர் பேராசிரியர் சதாசிவமே ஆவார். அதுவரையும் இலங்கையிலோ, வேறு நாட்டுப் பல்கலைக்கழங்களிலோ இந்து நாகரிகம் என்ற கற்கைநெறி இருக்கவில்லை என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் பேராதனை, மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களிலும் இந்து நாகரிகத்துறை அமைக்கப்படுவதாயிற்று. பேராசிரியர் சதாசிவம் கொழும்புப் பல்கலைக் கழகத்திலே தொடக்கிவைத்த இந்து நாகரிகக் கற்கைநெறியானது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிக பீடமாக வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் அவர்களின் கற்பித்தல் முறையானது மிகவும் விதந்து கூறப்பட வேண்டியதாகும். 1965இல் எங்களது முதலாம் ஆண்டுத் தமிழ் வகுப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இருந்தனர். விரிவுரைகள் ஒலிபெருக்கி மூலமாகவே நடைபெறும். விரிவுரை மண்டபத்தின் அமைப்பின் தன்மையினால் (Grandstand - Race horse Pavilion) அவருக்கும் மாணவருக்கும் இடைவெளி சற்றுத் தூரம் இருக்கும். ஆனால் அவர் பேச்சு எங்களுக்கு முன்னிருந்து உரையாற்றுவது போலிருக்கும். நேரம் போவதே தெரியாது. மேலும் அவர் அந்த விரிவுரையைத் தொடர்ந்து எடுக்கமாட்டாரா என எல்லோரும் விரும்புவர். அவரது விரிவுரைகளுக்கு இலக்கணமாக அமையும் திருக்குறள் வருமாறு:

"கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்." (குறள்: 463)

பேராசிரியரின் விரிவுரையிற் பொருட்டெளிவு, அழுத்தம், கவர்ச்சி, இனிமை முதலான பண்புகள் அமைந்திருக்கும். அவரது சிலப்பதிகார விரிவுரைகள் எங்களைச் சிலப்பதிகாரம் முழுவதையும் படிக்கத் தூண்டுவதாக அமைந்திருந்தன. எமக்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவரிடம் தமிழ் கற்ற மாணவர்களில் ஒருவராகிய திரு. மு. சுந்தரராஜன் என்பவர் பேராசிரியரின் விரிவுரை பற்றி வருமாறு குறிப்பிடுதல் நோக்கத் தக்கது:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கலை, வர்த்தகத் துறை மாணவர்களுக்கு முதலாம் கல்வியாண்டில் ‘பண்பாடும் அபிவிருத்தியும்’ என்ற ஒரு பாடமும் கற்பிக்கப்படும். அப்பாடத்தைப் பேராசிரியர் அவர்களே கற்பிப்பார். ஒவ்வொரு ஆண்டும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் மண்டபம் நிறைந்திருப்பார்கள். நகைச்சுவை ததும்ப துல்லியமான மொழிநடையில் ஆற்றொழுக்காக விரிவுரை நிகழ்ந்து கொண்டிருக்கும். உலக மக்கட் சமூகம், அவர்களது பண்பாடு, மக்கட் சமூகங்கட்கிடையே உள்ள பொதுத்தன்மை, நாடுகளுக்கு இடையே வேறுபட்ட பழக்க வழக்கங்கள் என்பன பற்றித், தான் நேரடியாகக் கண்டனவற்றையும் படித்தனவற்றையும் நகைச்சுவை ததும்ப நிகழ்த்துவார் பேராசிரியர் சதாசிவம் அவர்கள். மாணவர்கள் தம்மை மறந்த நிலையில் அவ்வுரையில் மிதப்பதுண்டு. ஆழ்ந்த கருத்துக்களைப் பல அறிஞர்களின் நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி விரிவுரை நிகழ்த்துவது வியப்பை ஏற்படுத்தும். கிழக்கு, மேற்குநாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள் துருவப்பகுதி மக்களின் வாழ்க்கை முறை என்பனவற்றை அலசி, உலக மக்களின் வாழ்க்கை முறையின் பொதுத்தன்மையை நிரூபித்துச் சொல்லுவார். அவருடைய உரையை நேரடியாகக் கேட்டவர்களுக்குப் பேராசிரியர் அவர்கள் அறிவுக் கடலாகத் தோன்றியதை எண்ணும்போது மெய்சிலிர்க்கின்றது. தமிழ்மொழிப் பாடத்திட்டத்திற்கு யாப்பலங்காரிகை, மலையாளம், ஆங்கிலத்திலிருந்து நுட்பமொழிபெயர்ப்பு போன்ற பாடங்கள் அன்னார் கற்பிப்பதுண்டு. யாப்புப் பற்றிய பாடநேரத்திலே தொல்காப்பியம், யாப்பருங்கலக்காரிகை, நன்னூல், தண்டியலங்காரம் ஆகிய நூல்களிலிருந்து (சான்றுகளை) எடுத்துக் காட்டும்முறை அலாதியாகவே அமையும். ஒருமுறை எண்பதாம் ஆண்டளவிலே கொழும்புப் பல்கலைக்கழகத்தில் யாப்பிலக்கணப் பாடம் விரிவுரை நடைபெற்றது. தமிழ் சிறப்புப் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களாகிய எங்களிடம் வெண்பா இயற்றுவதற்கான யாப்புமுறையை விளக்கிவிட்டு ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு வெண்பாப் பாடலை இயற்றும்படி எங்களிடம் கேட்டார்கள். நாங்கள் ஒருவர் ஒருவரைப் பார்த்து விழித்துக்கொண்டிருந்தோம். எங்களது இயலாமையைப் புரிந்து கொண்ட பேராசிரியர் அவர்கள்,

"மட்டுநகர் தந்த விபுலாநந்த மாதவனை
இட்டமுடன் வாழ்த்திப் புகழவே - திட்டமிட்டு
முத்திரையை வெளியிட்டுப் போற்றிடும்
புத்தன் புகழ்பூத்த நாடு."

என்ற வெண்பாவை இயற்றிப் பாடினார்கள். பல்கலைக் கழகத்தில் நான்கு ஆண்டுகள் பல மாணவர்கள் அன்னாரிடம் நல்லறிவைப் பெற்றுக்கொண்டோம்."

(மு. சுந்தரராஜன் பீ.ஏ. ஆர்னர்ஸ், வெயாங்கொடை. தினகரன். 01. 07. 1989)

பேராசிரியர் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்திலே தமிழ்த்துறைத் தலைவராக மட்டுமன்றித், தற்காலிகக் கலைப் பீடாதிபதியாகவும் பதவி வகித்தவராவர். அத்துடன் கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்களின் தமிழ் மன்றக் காப்பாளராகவும் இருந்து மாணவர்களின் கலை, பண்பாட்டுச் செயற்பாடுகளுக்கும் உறுதுணையாகச் செயற்பட்டுள்ளார்.

அவர் கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்த காலத்திற் பல்வேறு புலமைப் பரிசுகள் பெற்றுப் பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று ஆய்வுகள் மேற்கொண்டுள்ளார். பல்வேறு உலக நாடுகளின் ஆராய்ச்சி மாநாடுகளிற் பங்குகொண்டு மொழியியல், இலக்கியம், பண்பாடு, சமயம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். பல நூல்கள் வெளியிட்டுள்ளார். சதாசிவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்துகொண்டு, தமிழகத்து அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், மற்றும் கேரளாப் பல்கலைக்கழகம், மலேசியப் பல்கலைக் கழகம், இங்கிலாந்தின் எடின்பரோப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் முனைவர் பட்ட ஆய்வேடுகளின் வெளிநிலைத் தேர்வு மதிப்பீட்டாளராகவும் இறுதிவரை பணியாற்றி, அப்பல்கலைக்கழகங்களின் மதிப்பினையும் பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டவராவார்.

பேராசிரியர் சதாசிவம் அவர்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நம்பிக்கைக்கும் மதிப்புக்கும் உரிய தேர்வாளராகக் கடமையாற்றி நற்பெயர் ஈட்டியவர். பரீட்சைத் திணைக்களத்தின் மேலதிக கட்டுப்பாட்டு ஆணையாளராகக் கடமையாற்றிய ஆர்தர் வேதமல்ல (Mr. Arthur Wedamalla, Additional Commissioner of Examinations) அவர்கள், இலங்கைப் பரீட்சைத்திணைக்களத் தேர்வுகள் தொடர்பாகப் பேராசிரியரின் கடமை, கண்ணியம், நேர்த்தி என்பன பற்றி தனது இரங்கல் உரையிற் கூறியுள்ளதை ஈண்டுப் பதிவுசெய்தல் தகும்:

> "Prof. Sathasivam associated himself very closely with Department of Examinations from the time its inception by rendering invaluable services till the time of his death. As controlling Chief Examiner of Tamil and Hinduism for G.C.E.(A/L) Examinations and Tamil Language and Saivism for G.C.E. (O/L) Examinations he discharged his duties very earnestly. He showed a very high academic excellence in all these evaluation activities. He had also the rare privilege of serving as a member of the Board of Examiners for the prestigious Examinations such as the Ceylon Civil Service and late the Sri Lanka Administrative Service Examinations. ...... He was simple, unassuming, humorous and soft


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

spoken and these noble qualities of this great man attracted his friends and foes equally towards him" (பேராசிரியர் சதாசிவம் நினைவு மலர்:1988: பக். 51-52)

பேராசிரியர் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்திற் பணிபுரிந்த காலத்தில் உலக சமாதனம் குறித்துச் செயற்பட்ட கழகங்களுடன் தொடர்புகொண்டு தானும் உலக சமாதானத்திற்கு உரியவழி சமய ஒருமைப்பாடு என்ற கோட்பாட்டுடன் இயங்கி வந்துள்ளார். இவர் சைவப் பழமாகவும், தமிழ்ப் பண்டிதராகவும் அவரது ஆரம்பகால வாழ்க்கை அமைந்தமையால் அவரது உள்ளம் தூய்மை அடைந்திருந்தது. பல்லினங்களையும், பிற சமயங்களையும் மதித்து, நேசிக்கும் பக்குவம் அவர் பெற்றிருந்தார். சமயமும் உலக சமாதானமும் என்ற நோக்கில் இயங்கிக் கொண்டிருந்த அமைப்பு நடத்திய உலக மாநாடுகளிற் பங்குபற்றித் தனது கருத்துக்களை உலகளாவிய நிலையிற் பரப்பினார். இவருடன் இணைந்து செயற்பட்ட பௌத்த மதப் பேராசிரியர் எல். ஜி ஹேவாஹே அவர்கள் இச் செயற்பாட்டிற் பேராசிரியரின் பங்களிப்புப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதை நோக்கலாம்:

"I met Prof. Sathasivam first when we were both members of the Religious Education Advisory Committees of the Ministry of Education. In that work I had the good opportunity of knowing about his personal convictions and deep interests in promoting religious education for peace. When we had to nominate a Hindu delegate from Sri Lanka for the First Asian Conference on Religion and Peace (ACRP), held in Singapore 1976, he was our choice. He has been with us thereafter at the ACRP-2 in New Delhi (1981), ACPR -3 in Seoul (1986), World Conference on Religion and Peace-3 (WCRP) in Princeton, New Jersey (1979), WCRP-4 in Nairobi (1984), and all the Board Meetings of the ACRP were held in between. In all these conferences he


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

represented Sri Lanka in General and the Hindu Community of Sri Lanka in particular, consistently as a leader who stood for one Sri Lanka where Buddhists, Hindus, Muslims, and Christians could live together in peace as they did in the past for several centuries. In all these conferences there were several Hindu delegates from India and some even from Nepal. Therefore, writing background papers etc. based on Hindu philosophy went invariably to the Indian scholars. However, his contribution was highly appreciated and in great demand at all deliberations whenever he was present. …. He was the model of a good education based on a religious philosophy and he never failed to express his gratitude to our leading Buddhist school, Ananda College, where he said, he had a significant part of his education. He always avoided extremes and tried to follow a Middle path as he understood it"

(பேராசிரியர் சதாசிவம் நினைவு மலர்: 1988: பக். 53-55)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்துறை விரிவுரையாளர்களை 1982இல் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு இடமாற்றம் செய்தபோது, என்னைத் தவிர்ந்த அனைவரும் பேராதனைக்கு அனுப்பப் பட்டனர். தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் கொழும்புப் பல்கலைக்கழகத்திலே தமிழ் சிறப்புப் பாடம் பயின்ற மாணவர்களின் தேர்வுகள் முடியும் வரையும் அவர்களுக்குப் பொறுப்பாக இருக்கும்படி துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர என்னைத் தமிழ்த்துறையின் தலைவராக நியமித்து, அப்பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்.

இலங்கையில் 1983இல் ஏற்றட்ட இனக்கலவரச் சூழல்களால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 1984இல் நான் மாற்றம் பெற்றுச் சென்றதுடன் கொழும்புப் பல்கலைக் கழகத்திலே தமிழ்த்துறையின் வரலாறும் முற்றுப்பெற்றது. பேராசிரியர் சதாசிவம் அவர்கள் இறக்கும்போது பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார். அவரது மறைவுக்குத் துயர்பகிர்வு செலுத்தும் வகையிலே துணைவேந்தர் பேராசிரியர் அலுவிகார அவர்கள் பல்கலைக்கழக மூதவை அமர்வில் (Senate Meeting) பின்வரும் செய்தியை அவர் பதிவு செய்திருந்தார்:

> "Prof. A. P. R. Aluvihare, vice chancellor of the University of Peradeniya moving a condolence vote at the University Senate. Professor A. Sathasivam, Professor of Tamil of the University of Peradeniya, who died recently, had been served in three universities, Colombo, Vidyalankara and Peradeniya. This is an unusual phenomenon. Professor A. Sathasivam has been in the University service since 1952. He has been a professor here for approximately 18 years. His death was an unexpected one and his burial took place in Jaffna a few days ago. I think that as a university we must have for teachers who have served with such a degree of dedication through all kinds easy and difficult circumstances should be eternal. One suggestion which I would like to make is perhaps the Faculty of Arts might like to consider an Emeritus Posthumous Professorship".
> (Professor A. P. R. Aluvihare, Vice Chancellor, University of Peradeniya: Island News Paper.30.07.1988)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்: 6

# இலக்கிய மரபுசார் இயக்கமும் பேராசிரியரின் செயல் திறன்களும்

**இலங்கை சாகித்திய மண்டல இலக்கியக் குழுவிற் செயற்படுதல்:**

இலங்கை அரசாங்கம் 1955ஆம் ஆண்டிற் சுதேசிய கலை இலக்கியங்களையும் சுதேசியப் பண்பாடுகளையும் பேணும் வகையிற் சாகித்திய மண்டலம் என்ற அமைப்பை சிங்களம், தமிழ் ஆகிய இன-மொழி அடிப்படையில் அமைத்து, அவற்றுக்குரிய தனித்தனி குழு உறுப்பினர்களையும் நியமித்துச் செயற்பட வைத்தது. அவ்வகையில் இலக்கியக் குழு, நாடகக் குழு என்ற சான்றோர் குழுக்கள் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டன. இலங்கை கலாசார அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இலக்கியக் குழு, நாடகக் குழு என்பன மொழி, இலக்கியம், கலைகள் ஆகியனவற்றைப் பேணலும், அத்துறைகளில் ஈடுபட்டுச் சாதனை புரிவோரைக் கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் கலை, இலக்கிய சாகித்திய விழாக்களை நாடளாவிய வகையில் நடத்தி விருதுகள் வழங்கலும் மேற்கொண்டு வந்தன.

இக்குழுக்களிற் பேராசிரியர் இலக்கியக் குழுவிற் செயற்பட்டு வந்துள்ளார். இலக்கியக் குழுவினர் ஆண்டுதோறும் சிறந்த கலை இலக்கியப் படைப்பாளிகளைத் தெரிவுசெய்து விருது விழாக்கள் கொழும்பில் நடத்தி வந்துள்ளனர். இவ்விழாவில் அரச தரப்பிற் பிரதமர், பின்னாளில் ஜனாதிபதி, அமைச்சர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

சாகித்திய மண்டலத்தின் இலக்கியக் குழுவில் கீழைத்தேய மொழித்துறை உறுப்பினராகப் பேராசிரியர் 1962-1965 வரை செயற்பட்டுள்ளார். 1964இல் செந்தமிழ் குழுவின் தலைவராகவும், 1968இல் தமிழ் நாடகக் குழுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவராகவும் செயற்பட்டுள்ளார். பேராசிரியர் சதாசிவம் அவர்கள் இதழியல் துறையிலும் ஈடுபாடு கொண்டு இயங்கியுள்ளார். சாகித்திய மண்டல இலக்கியக் குழு '**கலைப் பூங்கா**' என்னும் இலக்கிய இதழை ஆண்டுக்கு இருமுறை வெளியிட்டுவந்துள்ளது. பேராசிரியர் கலைப் பூங்காவின் ஆசிரியராகவும், 1964ஆம் ஆண்டிலிருந்து செ. துரைசிங்கம் அவர்களுடன் இணைந்து கலைப் பூங்காவின் இணைஆசிரியராகவும் செயற்பட்டுள்ளார். இக்கலைப் பூங்கா செந்தமிழ் ஏடு எனக் குறிப்பிடப்படுதல் சிறப்பாக நோக்க வேண்டியதாகும். 1964ஆம் ஆண்டு புரட்டாதி, இதழ் - 2இல் **ஆசிரியர் கருத்து** என்ற பகுதியில் பேராசிரியர் சதாசிவம் குறிப்பிடுவதை நோக்கலாம்:

> "தமிழ்மொழி மிக்க பழமையும் பெருமையும் இனிமையும் உடையது. அவற்றோடு புதுமையும் உடையது. தொன்மை மிக்க தொல்காப்பியமும் புதுமையைத் தழுவ வேண்டும் என்பதையே பெருநோக்காகக் கொண்டுள்ளது. புதுமையைத் தழுவுவது பேணப்படாத இடத்து மரபென ஒன்று வகுக்கப்பட முடியாதென்றும் தொல்காப்பியரும் மரபைப் பேணுவதற்காகப் புதுமையை உள்வாங்க வேண்டும் என்பதை "விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" எனக் கூறும் நூற்பாவும் புதுமையைத் தழுவும் வழிமுறைகாட்டுகிறது. ..... மக்கட் சமுதாயம் வளர்ந்து கொண்டே வருகிறது. ஒவ்வொரு தனி மனிதனும் வளர்ந்துகொண்டே வருகிறான். இந்த வளர்ச்சிகள் பழமையின்றி நடப்பதில்லை. பழமை வேண்டாம் என்கிறவர்களும் பழமையைத் தழுவியே வளருகிறார்கள். ..... வாழ்க்கையின் வளர்ச்சி மின்னலைப்போலத் தோன்றி உடன் மறைவதில்லை. அது முன்பின் தொடர்புடையது. .... தமிழ் மொழியின் பழமையை 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பதைப் புதைபொருள் ஆய்வாளரின் கருத்துக்களையும், இறையனார் களவியல் கூறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10,000 ஆண்டு காலப் பழமையான தமிழ்மொழியின் வரலாற்றையும் கலைப்பூங்கா இதழ் மக்களுக்கு அறிவுறுத்துகிறது. மேலும் பல்லாயிரம் ஆண்டுப் பழமை மிக்க தமிழ்மொழி, காலம் காலமாகப் புடம்செய்யப்பட்ட தூய்மையுடையது என்பதும், புதுமை அவ்வாறு அமைவதில்லை என்பதும் பெறப்படும்''. (கலைப் பூங்கா 2, 1964: பக்.5-8)

சமுதாயம் வளர வேண்டும், புதுமை இலக்கியம் தோன்ற வேண்டும் எனத் தொல்காப்பியர் முதலானோர் கூறிய போதிலும் சமுதாயத்தின் குறிக்கோள் மாறக் கூடாது என்பதற்காகவே முன்னோர் மரபுகளை ஏற்படுத்தினர். அதனைப் போற்றியும் வருகின்றனர். பழமையைப் பேணுவோர் எவ்வளவு முயன்றாலும் தமிழில் புதுமை வந்தவண்ணமே உள்ளது. அதுவே புதுமையின் உயிர்ப்பாகும். அதுபோன்றே புதுமையாளர் பழமையை எவ்வளவு வெறுத்தாலும் பழமைக்கு முரண்பட்ட புதுமை எப்போதும் நிலைபெற்றதே இல்லை. எனவே பழமையைத் தழுவிய புதுமையே வேண்டப்படுவதாகும் என்ற கருத்துக்களும் ஆசிரியர் கருத்தாகக் கூறப்பட்டுள்ளன.

சங்ககாலத் தனிச்செய்யுள் மரபு சோழர் காலத்திற் பெருங்காவிய மரபாக மாறியபோது கம்பர் தமிழ் இலக்கிய மரபைப் பெரிதும் பின்பற்றிப் பெருங்காப்பியஞ் செய்து தமிழுக்குப் பெருமையூட்டினார். அதுபோல் தொல்காப்பியத்துக்கு 2000 ஆண்டுகளுக்குப் பின்னர் தோன்றிய நன்னூல் தமிழ் மொழியில் வடமொழித் தாக்கத்தால் ஏற்பட்ட புதுமைகளை - மாற்றங்களை ஏற்று, அவற்றுக்கும் இலக்கணம் செய்து தமிழ் மொழியின் பழமையைக் காப்பாற்றியமை கருத்திற் கொள்ளத்தக்கது. இவ்வாறு பழமையும் புதுமையும் இணைந்து பழமை மாறாத வகையில் தமிழ் வளர வேண்டும் என்ற கருத்தை ஆசிரியர் கருத்தாக முன்வைத்திருப்பதன் மூலம் பேராசிரியர் பழமைக்கும் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் தமிழ் மொழியின் சிறப்பைப் பேணும் கொள்கையாளர் என்பதைத் தமது ஆசிரியர் கருத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் வெளிப்படுத்தி யுள்ளமையை அறிந்து கொள்ளலாம். மேலும் பேராசிரியர் இளைஞர்களையும் ஊக்கப்படுத்தும் போக்குடையவர் என்பதற்குப் பின்வரும் அவரது கருத்துச் சான்றாகின்றது:

> "இன்றைய நிலையிலே மந்தநிலையுற்றுக் கிடக்கும் தமிழ் மொழிக்கு ஆக்கங்கொடுக்க இளைஞர்கள் விழிப்புற்று இருப்பது வரவேற்கத் தக்கதாகும். இளைஞர்களே எதிர்கால ஆட்சியாளர்கள். அவர்களின் எழுச்சி போற்றப்பட வேண்டும். ... இளைஞர்கள் பண்டைய மரபு நூல்களைத் தழுவிப் புடஞ்செய்து தமிழ் அன்னையை அலங்கரிப்பார்களாக".

புதிய படைப்பாளிகளுக்கு ஊக்கம் அளிப்பதோடு, அவர்களை நெறிப்படுத்தும் பண்பும் இவரது எழுத்திற் காணப்படுகிறது. அவ்வகையில் இச்சிறப்பிதழாக வெளிவந்த கலைப்பூங்கா பழமைக்கும் புதுமைக்கும் தொடர்புடைய கட்டுரைகளைத் தாங்கிவருவதோடு, அவை எவ்வாறு புதுமைப் படைப்புக்கள் அமைய வேண்டும் என்பதற்கு வழிகாட்டுவதாகவும் அமைந்துள்ளன எனவும் கூறப்பட்டுள்ளது. இச்சிறப்பிதழ் வெளியீடும் 1964ஆம் ஆண்டுக்குரிய இலக்கிய விழாவும் மட்டக்களப்பிலே இடம்பெற்றன. அதற்குக் கூறப்படும் காரணம் மிகப் பொருத்தமாக அமைகின்றது:

> "சுவாமி விபுலாநந்தர் எனப் போற்றப்படும் பண்டிதர் மயில்வாகனனார் **பழமையைத் தழுவிப் புதுமையிலே தமிழ்த்தொண்டு செய்த பெரியாராவார்.** அவர் வாழ்ந்த மட்டுநகரிலே இவ்வாண்டுக்குரிய இலக்கியவிழா நடக்கிறது. அவரின் கொள்கைக்கும் தமிழ்த் தொண்டுக்கும் பெரிய மதிப்புக் கொடுப்பதாகும்." (மேலது பக்.8)

"பழமையும் புதுமையும்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஆசிரியர் கருத்தில் அமைந்த இக்கட்டுரையும், அது கொண்டுள்ள குறிக்கோள்களையும் நோக்கும்போது பண்டித மரபிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சதாசிவம் அவர்கள், தமிழ் மரபைக் கட்டிக்காக்க வேண்டும், அதேவேளை கால மாற்றங்களுக்கு அமைவாகப் புதுமைகளையும் உள்வாங்கி மரபைப்பேணித் தமிழை வளர்க்க வேண்டும் என்ற கொள்கை உடையவராக இருப்பதை நோக்கலாம்.

கலைப் பூங்கா செப்ரெம்பர் 1964 இதழில் இடம் பெற்ற கட்டுரைகளில் "தமிழ் மரபும் பேராசிரியரும்" (இது தொல்காப்பிய உரைகாரர் பேராசிரியரைக் குறிப்பதாகும்) (க. நாகலிங்கம்), "மரபும் வழக்கும" (பி.சே.சே. நடராசா), "மரபும் ஆக்கமும்" (புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை), "மரபு" (பண்டிதர் செ. துரைசிங்கம்), "இலக்கிய மரபு" (புலவர் பாண்டியனார்), "இசை மரபு" (இசைமணி பி. சந்திரசேகரம்), "நாடக மரபு" (ஆ. த. பொன்னுத்துரை), " உரைநடையிற் சிறுகதை மரபு" (எஸ். பொன்னுத்துரை) ஆகிய மரபு பற்றிய கட்டுரைகள் ஆதிக்கம் பெற்றிருத்தலை அவதானிக்கலாம்

"தமிழ் மரபும் பேராசிரியரும்" என்ற ஆய்வுக் கட்டுரையின் இறுதியில் கட்டுரை ஆசிரியர் க. நாகலிங்கம் வருமாறு குறிப்பிடுதல் நோக்கத்தக்கது:

> " எழுத்து, சொல், பொருள் ஆகிய மரபுகளைப் புறக்கணித்து எழுதும் நூல்வழக்கம், பேசும் உலக வழக்கம் தமிழாகாது. மரபு திரிந்த தமிழ் அறிவுடையோரால் ஏற்றுக்கொள்ளப்படின் தமிழ்மொழி அழிவதற்கு அதுவே முக்கிய காரணமாகும். தமிழ் மரபுணர்த்துவது தமிழைப் பிழையற எழுதுவதற்கும் பேசுவதற்குமுள்ள ஒரேயொரு வழியாகும். " (பக்-14)

ஈழத்துச் சிறுகதை இலக்கியப் படைப்பாளிகளிற் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்களில் ஒருவரான எஸ். பொன்னுத்துரை " உரைநடையிற் சிறுகதை மரபு" என்ற கட்டுரையில், கலை-இலக்கியத் துறையிலே நாம் நமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவ ஆட்சியை மரபிற் காலூன்றி நிலைநாட்டுவது நமது தலையாய கடமையாகும். (பக்-74) எனக் கூறுவதும் நோக்கத்தக்கது.

இவற்றை ஆராய்ந்து நோக்கும்போது பேராசிரியர் சதாசிவம் அவர்கள் அழுத்திக் கூறும் தமிழ் இலக்கிய மரபுக் கோட்பாட்டின்படி, சிறுகதை, நாவல் முதலானவை புதிய இலக்கியமெனினும் அவை தமிழ் இலக்கிய மரபினின்றும் வழுவாது நவீனத்துவ இலக்கியங்களாகப் படைக்கப்பட வேண்டுமென்ற மரபுபேணல் கோட்பாடு வலுப்பெறுதைக் கவனிக்கலாம்.

பல்கலைக்கழகத்திலே தமிழ் மரபு பேணல் என்ற விடயம் பற்றிச் சிந்திக்கும்போது முதலிற் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரை நினைவிற் கொள்ள வேண்டும். சுவாமிகள் மரபுவழிவந்த தமிழ்ப் பண்டிதராகவும், கேம்பிறிஜ் பல்கலைக் கழகப் பட்டதாரியாகவும் திகழ்ந்தவர். கிழக்கும் மேற்கும் இணைந்த நிலையிலும்கூட சுவாமி விபுலாநந்தர் பழமையின் அத்திவாரத்தில் முற்போக்குச் சிந்தனையையும் மரபு பேணலையும் தழுவிக் காத்தவராவார். அதுபோன்றே பேராசிரியர் சதாசிவம் அவர்களும் தமிழ் மரபைப் பேணி புதிய சிந்தனைகளுடன், இலக்கியங்களைப் படைக்க வேண்டும் என்ற கோட்பாட்டில் உறுதியாகச் செயற்பட்டவர் என்பதைக் குறிப்பிட வேண்டும். சுவாமி விபுலாநந்தர் இறக்கும்வரையும் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகவே இருந்தார். சுவாமிகள் தனது இறுதிக்காலம் வரை ஆராய்ந்த பண்டைத் தமிழ் இசைமரபின் மூலவேர்களைத் தேடித்தேடி ஆராய்ந்து **யாழ் நூல்** என்ற அரும்பெரும் இசைத்தமிழ் ஆராய்ச்சி நூலை எழுதி முற்றுப் பெறச்செய்து அதனைத் தமிழகத்தில் ஆன்றோர் முன்னிலையில் அரங்கேற்றமும் செய்தார். இது போன்றே சொற்பிறப்பியல் அடிப்படையில் பண்டைத் தமிழ் மொழியின் மூலத்தை ஆராய்ந்தவர் என்ற அடிப்படையிலும் பேராசிரியர் சதாசிவம் அவர்கள் பல்கலைக்கழகத்தில் மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணியவராகவும், பண்டைத் தமிழ் மொழியின் தொன்மை, அதன் தோற்றம் என்பன பற்றி ஆராய்ச்சி செய்தவராகவும் தோற்றம் அளிக்கின்றார்.

பேராசிரியர் சாகித்திய மண்டல இலக்கியக் குழுவின் தலைவராக இருந்தபோது, 20ஆம் நூற்றாண்டுவரை ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களின் செய்யுட்களைத் திரட்டி, "ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சிம்" எனத் தனி நூலாகவும், சாகித்திய மண்டலத்தின் முதல் தமிழ் நூல் வெளியீடாகவும் கொண்டுவந்தமையைப் பாராட்ட வேண்டும். இந்த வாய்ப்பைப் பிற எழுத்தாளரும் இலக்கிய ஆய்வாளரும் பயன்படுத்தித் தமிழ் நூல்களைப் பதிப்பிக்க வழிகாட்டியாக அமைந்தார் என்று கூறுவது பொருத்தமாகும்.

## இலக்கிய மரபு பேணலிற் பேராசிரியரின் பங்களிப்பு:

இலங்கையில் 1960களில் இலக்கிய விளிப்புணர்ச்சி மேம்பட்டிருந்தமை அக்காலத் தமிழ் அறிஞர்களதும், தமிழ் எழுத்தாளர்களதும் செயற்பாடுகளிலும் ஆக்கங்களிலும் பெரிதும் காணப்படுவதாயிற்று. அக்காலத்தில் அரசுப் பின்னணியில் ஏற்படுத்தப்பட்ட சாகித்திய மண்டல இலக்கியக் குழுவும் இம்மரபுப் போராட்டத்திற் பங்கு கொண்டது என்றே கூறவேண்டும். அக்காலத்தில் இலக்கிய விமர்சகர்களாக விளங்கிய கனக. செந்தில்நாதன், எஸ். பொன்னுத்துரை, கே. எஸ். சிவகுமாரன் பல்கலைக்கழகத்திலே தமிழ் விரிவுரையாளர்களாக விளங்கிய ஆ. சதாசிவம், சு. வித்தியானந்தன் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, முதலியோரும், தமிழ்ப் பண்டிதர்களும் அந்தப் போராட்டத்திற் சேர்ந்துகொண்டனர். இவர்களிடையே முற்போக்கு எழுத்தாளர், மரபுவழி எழுத்தாளர், நற்போக்கு (நடுநிலை) எழுத்தாளர் என்ற கட்சிகளும் தோற்றம் பெற்றிருந்தன. இம்மூவகை இலக்கியக் கோட்பாட்டுக் கட்சியினரும் ஈழத் தமிழ் இலக்கியநெறியை வளம்பெறச் செய்ததோடு, தம்மிடையே இலக்கியக் கோட்பாட்டுச் சமர்களும் புரிந்துள்ளனர் என்பதைக் குறிப்பிடுதலும் அவசியமாகிறது. மேற்குறிப்பிட்ட இலக்கியக் கோட்பாட்டளர்களில் **நற்போக்குக் குழுமத்தில் குறிப்பிடத் தக்கவகையில் ஆ. சதாசிவம், எஸ். பொன்னுத்துரை முதலியோர் இடம்பெற்றிருந்தனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவம் அவர்கள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் 1957இல் முனைவர் பட்டம் பெற்றவர். ஆனால் பல்கலைக் கழகத்திற்கு மாணவனாக வருவதற்கு முன்பாகவே தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பண்டித மரபில் முறையாகக் கற்றவர். மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்வில் தோற்றி, முதலாம் பிரிவிலும் சித்தியடைந்தவராவார். அவ்வகையில் அவர் அறிவும் புலமையும் பெற்ற ஓர் அறிவுசால் தமிழ்ப் பண்டிதருமாகத் திகழ்ந்தார்.

பல்கலைக்கழகத் தமிழ் அறிஞர்களில் ஒரு சாரார் தொல்காப்பிய இலக்கண வழி செந்தமிழ் மரபைச் சிக்கெனப் பிடித்திருந்தனர். சிலர் முற்போக்கு எழுத்தாளர் அணியினருக்குச் சார்பாகச் செயற்பட்டனர். முற்போக்குக் கொள்கையுடையோர் **'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்'** ஒன்றை அமைத்து நிறுவன ரிதியாக இயங்கினர். அவர்கள் அடிக்கடி முற்போக்கு ரிதியான கருத்தாடல்களை நடத்தி வந்தனர். மரபு காத்தல் - மரபு மீறல் பற்றிய கருத்தாடல்களும், அவை தொடர்பான எழுத்துக்களும் வேகம் பெற்றிருந்தன. ஆனால் பண்டித மரபிலே தளங்கொண்டு, தமிழ்ப் பற்றாளராகத் திகழ்ந்த பேராசிரியர் சதாசிவம் துணிபும் உறுதியுப்பாடும் உடையவராக மரபு பேணல் பற்றிய தமது கோட்பாட்டைப் பற்றிச் சொற்பொழிவுகள் செய்தும், ஊடகங்களில் கட்டுரைகள் எழுதியும் வந்தார். அக்காலத்து நிகழ்வுகளை நன்கு அவதானித்த பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் கூறுவது ஈண்டுப் பொருத்தமாகிறது:

> "பல்கலைக்கழகம் புகுவதற்கு முன் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதரான அமரர் பேராசிரியர் அவர்கள் பெற்றிருந்த பண்டிதர் பயிற்சி அவருடைய ஆளுமையிற் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. பழமையிலும் சமய இலக்கியங்களிலும் அவருக்கு ஆழமான பற்று இருந்தது. ... அறுபதுகளிலே தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் என்போர் இக்காலத் தமிழ் எழுத்திலே மரபு எந்த அளவுக்குப் பேணப்பட வேண்டும் என்பதை விவாதப் பொருளாக்கியபோது பழைய மரபு பேணப்பட வேண்டும் என்ற கட்சிக்குப் பேராசிரியரே தலைமை தாங்கினார்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிந்தாமணி:31.07.1988)

இச்சந்தர்ப்பத்திலே தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன், பேராசிரியர் காலமானார் என்ற தலைப்பில் எழுதிய இரங்கல் செய்தியில் (தினகரன் 04.07.1988) குறிப்பிடும் மரபுப் போராட்டம் பற்றிய கருத்தை ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாகிறது:

> "பேராசிரியர் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்டதன் காரணமாகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளுக்குத் தவறாது சென்றவர். இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரவேற்கப்படுபவை. குறிப்பாகத் தமிழின் சுமேரியத் தொடர்பு பலரின் கவனத்தைப் பெற்றது. பேராசிரியர் தமிழின் பழமை உருவங்களை விரும்புபவர். இதனால் புதிய இலக்கிய உருவங்களையும் உத்திகளையும் கையாளும் முற்போக்காளரோடு கருத்து வேற்றுமை ஏற்பட்டது. இவர் தான் நற்போக்குவழி செல்வதாகக் கூறுபவர். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் இவர் ஆதிக்கம் கொண்டிருந்தபோது பல சர்ச்சைகள் உருவாகின. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சாகித்திய விழாக் காலத்திலேயே பேராசிரியர் தமிழிலக்கியக் கோட்பாடுகளில் தான் செல்லும் வழியை விளக்கினார். பலர் பாராட்டினார்கள். பலர் எதிர்த்தனர். ஆனால் பேராசிரியர் தான் சென்ற வழியிலேயே தொடர்ந்து சென்றார். தமிழிலக்கிய உருவங்களை மாற்றி மாசு படுத்துதல் கூடாதென்பது இவரது கொள்கை."

பேராசிரியர், தான் கற்பித்த பல்கலைக்கழகங்களிற் செந்தமிழ் மரபை உறுதியாகப் பின்பற்றி வந்தார். மரபு வழியில் நின்று அம்மரபைப் பேணுவதற்குரிய பற்றுறுதி அவரிடம் ஏற்படுவதற்கு அவர் பிறந்து வளர்ந்த அராலிக் கிராமமும், அதன் அயற் பதியாகிய மேலைநாட்டு மோகம் கொண்டிருந்த வட்டுக்கோட்டைக் கல்லூரியும் காரணமாக அமைந்திருந்தன. இதுபற்றி பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் வருமாறு குறிப்பிடுவர்:

> "பேராசிரியர் பிறந்த ஊர் அராலி. சைவ பக்தியிலும் பழமையிலும் ஊறிய கிராமம் ஒரு புறம். அராலிக் கிராமத்தில் மரபுகளினதும் பழமைகளினதும் மேலோங்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்து கொண்டிருக்க, மறுபுறம் அதன் அயற் கிராமமாகிய வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியை நடுநாயகமாகக் கொண்ட மேலைப்புலத்து நவீன சிந்தனைகள் எழுச்சி கொண்டன. அந்த விசைகளினூடே பழமை மற்றும் மரபுகள் மீதான உளக்கோலங்கள் பேராசிரியரிடத்துச் சிறுவயதிலிருந்தே ஆழப் பதிந்திருந்தன. கிராமத்துப் பதிவுகள் அவரது புலமை நீட்சியிலே தொடர்ந்து வளர்ந்துகொண்டிருந்தன"

(கலைகேசரி ஆளுமை:பக் 56-58).

இத்தகு தமிழ்ப்பெரியார், பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்களின் கல்விப்புலம், மொழியியல் ஆராய்ச்சி, அவர் வெளியிட்ட ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியன அவரைத் தலைசிறந்த மொழியியற் பேராசிரியராக ஆய்வுத்துறையில் அடையாளப்படுத்தியுள்ளன. அத்துடன் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்த காலத்திலே தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றுக்கு அவரது பங்களிப்புக்கள் மிகப் பரந்தவை என்பதை இந்நூல் நன்கு பதிவுசெய்து உள்ளது. சைவசமயக் கல்வியிலும், தமிழ்ச் சமூகம் சார்ந்த சமய நடைமுறைகளிலும் அவரது பணிகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் அவர்கள் புதிய ஆக்க இலக்கியத்துறையில் மரபு பேணப்பட வேண்டும் என்ற கோட்பாட்டிற் பெரிதும் பற்றுறுதி கொண்டவராகவும், அந்தக் கோட்பாட்டினரான நற்போக்குவாதிகளின் அணிக்குத் தலைமை தாங்கியும் செயற்பட்டவர். ஈழத் தமிழ் இலக்கியம், மொழியியல் ஆகிய துறைகளில் ஆழமாகத் தடம்பதித்த பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் கல்விசார் வரலாற்றுக் களஞ்சியமான இந்நூல், ஈழத்துத் தமிழ் இலக்கியம், மொழியியல் ஆகிய துறைகள் சார்ந்த ஆய்வாளர்களுக்கும், அத்துறைகளில் இளங்கலைமாணி, முதுகலைமாணி பயிலும் மாணவர்களுக்கும் பெரிதும் துணையாக அமைவது இதன் சிறப்பாகும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வுத்துணை நூல்கள், இதழ்கள்:

* சதாசிவம், ஆ., மொழியியலும் தமிழ்மொழி வரலாறும், (பதிப்பாசிரியர்) பாலசுந்தரம் இளையதம்பி, நியூ எவர்கிறீன் அச்சகம், பிறைவேட் (லிமிட்டெட்), யாழ்ப்பாணம், 2021.

* ......................., ஞானப் பள்ளு, முதற் பதிப்பு 1968, இரண்டாது பதிப்பு, 2018

* ......................., ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், தொகுப்பு நூல், 1966

* ......................., ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை?, 1963, இரண்டாம் பதிப்பு. 2019

* ......................., தமிழ் வினைச் சொற்களின் அமைப்பு - தொகுதிகள்: 1-2, 1956

* ......................., தமிழ்ச் சொற்களின் பிறப்புநெறி, தட்டச்சுப் பிரதி, 1986

* ......................., கருத்துரைக் கோவை – 1959

* சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள், மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு, 1995.

* செல்வநாயகம், அருள்., விபுலாநந்த இலக்கியம், திருவருள் வெளியீடு, மட்டக்களப்பு, இலங்கை,2008

* செல்வநாயகம், வி., தமிழ் இலக்கிய வரலாறு - சுருக்கம், (முதற் பதிப்பு. 1951), இரண்டாம் பதிப்பு – குமரன் அச்சகம், கொழும்பு, 2013.

* தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை, பதிப்பாசிரியர் மு. சண்முகம்பிள்ளை, முல்லைநிலையம், சென்னை, 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பாலசுந்தரம் இளையதம்பி, தமிழர் நாட்டுப்புற இயல் களஞ்சியம், சுவாமி விபுலாநந்தர் தமிழியல் ஆய்வு மையம் வெளியீடு, ரொறன்ரோ, 2019.

* பேராசிரியர் கலாநிதி ஆ. சதாசிவம் அவர்களின் நினைவு மலர், 31.07,1988

* முருகேசு கௌரிகாந்தன், "பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களது தமிழ் மற்றும் பண்பாட்டுப் பணிகள்", யாழ்-ஸ்கந்தவரோதயக் கல்லூரி நிறுவுநர் நினைவுப் பேருரை, 2018

* ஜெயராசா. சபா., "செந்தமிழ் மரபை இறுகப் பற்றிநின்ற பேராசிரியர் ஆ. சதாசிவம்", கலைக்கேசரி. பக். 56-58

* கலைப் பூங்கா இதழ்கள், சாகித்திய மண்டலம். இலக்கியக் குழு வெளியீடுகள்

* Danesi, Marcel., Andrea Rocci, Global Linguistics: An Introduction, Mouton de Gruyter, Berlin, Newyork, 2009

* Marcel Danesi., Andrea Rocci, "Global Linguistics: An Introduction, Mouton de Gruyter, GmpH & Co.KG, Berlin, 2009

* Ramasamy., Sumathi., The Lost Land Lemuria. Fabulous Geographics, Catastrophic Histories, University of California, Press, Berkeley, Los Angeles, London, 2004.

* Sathasivam, A., Proto-Sumero Dravidian Sumerian- The common Origin of Sumerian and Dravidian, History and Heritage Unit, Tamil Information Centre, Kingston, England, 2017

* ..................., Sumerian a Dravidian Language, University of California, Berkeley, California 1965

* ..................., The Structure of the Tamil verbs, (Ph. D Thesis), University of Oxford, Electronic Book, 1956



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்புக்கள்- I - IX

## பின்னிணைப்பு- I பேராசிரியர் ஆங்கிலத்தில் எழுதிய நூல்கள்:

2017: Proto-Sumero Dravidian – The Common Origin of Sumerian and Dravidian Languages, History and Heritage Unit, Tamil Information Centre, Kingston, England. http://noolaham.net/project/555/55444/55444.pdf.

1965: Sumerian A Dravidian Language, University of California, Berkeley, California.

1956: The Structure of the Tamil Verb- (Ph.D. Thesis), University of Oxford. Volume I, pp.1-429; Vol. II, pp 430-80 (Electronic Book -1956)

Link given by ORA,
https://ora.ox.ac.uk/objects/uuid:b7e6e76e-3309-4187- 8d9ae9924ee5
https://ora.ox.ac.uk/objects/uuid:b7e6e76e-3309-4187-97c3
8d9ae9924ee5

## பின்னிணைப்பு- II பேராசிரியர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகள்:

1. "Linguistics in Ceylon II. Tamil: Current trend in Linguistics". Linguistics in South Asia Vol. 5, pp. 752 – 759.

2. "The Suffix Cin (rpd;) in Cankam Tamil", Tamil Culture, Vol. V11. No. 2 April, 1958.

3. "The Current Status of Dravidian Historical & Comparative Studies", The Proceedings of the 9th International Congress of Linguist Cambridge, Mass.1962, pp. 570-573

4. "Syntax of old Tamil", All India Oriental Conference, Sri Nagar, 1961. XX1 st Session, (Abstract Pages 158 – 159 )

5. "Primitive Tamil & Proto Dravidian", Summaries of Paper. Supplement 26th International Congress of Orientalists, New Delhi, 1964 (Abstracts, pp. 31-33)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. "Accentual System of Old Tamil", Meenakshisundaram Manivila Malar, Annamalai University, pp, 401- 420.

7. " From Kumari to Sumer: 1976, Publisher: The Indian Ocean in Focus. International Conference on Indian Ocean Studies, Perth, W.A., 15-22 August 1979. Section V1. Archives & Resources Study. University of Western Australia. Nedlands. Pp.1-17

8. "Studies in Sumero-Dravidian Phonology", Sixth International Conference - Seminar of Tamil Studies held at Kaula Lumpur, Malaysia -15th-19th Nov. 1987

9. "The Dravidian Origin of Sumerian Writing", First International Conference - Seminar of Tamil Studies held at Kaula Lumpur, Malayasia. April. 1966

10. "Affinities Between Dravidian & Sumerian", Paper Presented at the Seminar on Dravidian Linguistics II held at Annamalai, Tamil Nadu: 14th to 16th Nov. 1969

11. "The Hindu Religious Heritage in Sri Lanka: Revived & Remembered", Religiousness in Sri Lanka, Edited by John Ross Carter. Marga Institute 1979. pp. 161 – 173

12. Early Tamil Religion in Sangam Texts for Sir Maharajah Singh Prize: Essay presented to Balliol College Oxford. 1955, pp.1 – 32

**பின்னிணைப்பு -III பேராசிரியரின் தமிழ் நூல்கள்:**

2022: ஈழத்துக் கவிதைக் களஞ்சியம் - இலங்கை சாகித்திய மண்டல வெளியீடு. கொழும்பு. **மீள் பதிப்பு**, சதாசிவம் வெளியீடு, மதி அச்சகம். யாழ்ப்பாணம்,

2021: மொழியியலும் தமிழ்மொழி வரலாறும், (பதிப்பாசிரியர்) பாலசுந்தரம் இளையதம்பி, நியூ எவர்கிறீன் அச்சகம், பிறைவேட் (லிமிட்டெட்), யாழ்ப்பாணம்.

2020: ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை – முதற்பதிப்பு 1963 மீள் பதிப்பு, சதாசிவம் வெளியீடு, மதி அச்சகம். யாழ்ப்பாணம், http://noolaham.net/project/52/5165/5165.pdf



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018: ஞானப் பள்ளு, (முதற் பதிப்பு - 1968), இரண்டாம் பதிப்பு, 2018. சதாசிவம் பதிப்பகம், யுனி ஆர்ட்ஸ் அச்சகம், (பிரைவேட்) லிமிடெட், கொழும்பு.
http://noolaham.net/project/ 631/63061/63061.pdf

2006: தமிழ்ச் சொற்களின் பிறப்புநெறநி, தஞ்சைப் பல்கலைக்கழகம், 311ஆம் வெளியீடு.

1959: கருத்துரைக் கோவை, சென்னை.
http://noolaham.net/project/172/17107/17107.pdf

****: இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள் அகராதி, தொகுதிகள்1-7 (விரைவில் வெளிவரவுள்ளது)

## பின்னிணைப்பு - IV பேராசிரியர் தமிழில் எழுதிய மொழியியற் கட்டுரைகள்

- "நன்னூல் இலக்கணமும் மொழியியற் கோட்பாடுகளும்", இளந் தென்றல், தமிழ் மன்றம், கொழும்புப் பல்கலைக்கழகம், 1970.
- "பழமையும் புதுமையும், கலைப் பூங்கா", 1964 புரட்டாதி இதழ்
- "செந்தமிழ்", கலைப் பூங்கா, 1964 சித்திரை இதழ்
- "தொல்காப்பியம்", கலைப் பூங்கா, 1963
- "குமரித் தமிழ் அல்லது சுமர் மொழி".
- "தமிழ் வேர்ச் சொற்கள்", இளங்கதிர், தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், தமிழ் மன்ற வெளியீடு, 1957-1958
- "திராவிடத் தாய்", இளங்கதிர், தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம் தமிழ் மன்ற வெளியீடு, 1959-1960

## பின்னிணைப்பு - V பேராசிரியர் பெற்ற புலமைப் பரிசுகளும் ஆய்வுகளும்.

1986: யப்பான் டோக்கியோ காகுஸின் பல்கலைக்கழக ஆய்வாளர் புலமைப் பரிசு பெற்று அப்பல்கலைக்கழத்தில் மொழியியல் ஆய்வு மேற்கொண்டார்.

1985-1986: தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கும் சிறப்பாய்வாளர் புலமைப் பரிசு பெற்று சுமேரிய மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பினை ஆராய்ந்தார்.

1973-1974: பொதுநலவாய நாடுகள் - இங்கிலாந்து வழங்கும் ஆய்வாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப் பரிசு பெற்று, ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

1964-1965: மொழியியல் ஆய்வுக்கான புள்பிரைட் புலமைப் பரிசு பெற்று, அமெரிக்கா - கலிபோர்னியா பல்கலைக்கழகம் - பேர்க்லி ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு மேற்கொண்டார்.

1954-1956: இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்டார்.

1955: பாலியோல் கல்லூரி, ஒக்ஸ்போர்ட், சேர் மகாராஜா சிங் விருது.

1943: மதுரைப் பிரவேச பண்டிதர் தேர்வு, முதற் பிரிவு சித்திக்கான விருது

**பின்னிணைப்பு- VI பேராசிரியர் பல்கலைக்கழகங்களின் முனைவர் பட்ட ஆய்வேடுகளின் வெளிநிலைத் தேர்வாளர்:**

- எடின்பரோ பல்கலைக்கழகம்
- கேரளா பல்கலைக்கழகம்
- மதுரைப் பல்கலைக்கழகம்
- மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
- சென்னைப் பல்கலைக்கழகம்
- மலாயாப் பல்கலைக்கழகம்

**பின்னிணைப்பு- VII பேராசிரியர் பங்கு பற்றிய புலமைசார் கல்விக் கழங்கள்:**

- இந்திய மொழியியற் கழக உறுப்பினர்
- இங்கிலாந்தின் மொழி ஆராய்ச்சிக் கழக உறுப்பினர்
- அமெரிக்க மொழி ஆராய்ச்சிக் கழக உறுப்பினர்
- 1961-1988 கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆலோசனைச் சபை உறுப்பினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1980-1988: கல்வி அமைச்சின் தமிழ், இந்துசமய பாட ஆலோசனைக்குழு உறுப்பினர்
- 1978-1988: சமயத்திற்கும் சமாதானத்திற்குமான ஆசிய மாநாடு-இயக்குநர்.
- 1979-1988: சமயத்திற்கும் சமாதானத்திற்குமான தேசியகுழு துணைத்தலைவர்.
- 1985: நடனத் தேர்வுக்குழு உறுப்பினர், இலங்கை ரூபவாகினி கூட்டுத் தாபனத்தின் மதியுரைக் குழு உறுப்பினர்.
- 1976 - 1988 இயக்குநர்: சமயமும் சமாதானமும்: உலக மாநாடு, ஜெனிவா.
- 1970 சாகித்திய மண்டலத்தின் நாடகக்குழுத் தலைவர்.
- 1966 சாகித்திய மண்டலத்தின் இலக்கியக் குழுத் தலைவர்.
- 1962-1965 சாகித்திய மண்டலத்தின் இலக்கியக் குழுவில் கீழைத்தேய மொழித்துறைப் பிரதிநிதி
- 1963 ஆரிய திராவிட பாஷாபிருத்திச் சங்க ஆலோசகர்.
- 1963 தமிழ்ப் பண்டிதர் சங்கத் தலைவர்
- 1948 ஆரிய திராவிட பாஷாபிருத்திச் சங்க உறுப்பினர்

## பின்னிணைப்பு- VIII பேராசிரியர் பங்கு பற்றிய பன்னாட்டு மாநாடுகள்:

### அ). இலக்கியம் - பண்பாடு:

- 1987 ஆறாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு. மலேசியா
- 1981 ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு, மதுரை
- 1970 இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு, சென்னை
- 1966 முதலாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு, மலேசியா

### ஆ). சமயம்:

- 1986 சமயத்திற்கும் சமாதானத்திற்குமான 3ஆவது மாநாடு, தென்கொறியா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1984 சமயத்திற்கும் சமாதானத்திற்குமான 4ஆவது மாநாடு, நைரோபி, ஆபிரிக்கா
- 1981 சமயத்திற்கும் சமாதானத்திற்குமான 3ஆவது ஆசிய மாநாடு, புதுடெல்கி, இந்தியா
- 1979 சமயத்திற்கும் சமாதானத்திற்குமான 3ஆவது மாநாடு, உலகமாநாடு,
- பிரின்ஸ்ரன், நியுஜேர்ஸி, அமெரிக்கா.

**இ). மொழியியல்:**

- 1984 கீழைத்தேய மொழியியல் காங்கிரஸ் - 26ஆவது அனைத்துலக மாநாடு, புதுடெல்கி, இந்தியா.
- 1962 ஒன்பதாவது மொழியியல் மாநாடு, மசசூட், ஐக்கிய அமெரிக்கா
- 1961 அகில இந்திய கீழைத்தேய மொழியியல் மாநாடு, ஸ்ரீநகர், இந்தியா.

**பின்னிணைப்பு- IX இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் வகித்த பதவிகள்:**

- இலங்கை நிர்வாக சேவையாளர் தேர்வு - தேர்வாளர்
- க. பொ. த. (சாதாரணம்) பிரதான கட்டுப்பாட்டுத் தேர்வாளர் பாடங்கள்: தமிழ், சைவசமயம்,
- க. பொ. த. (உயர்தரம்) பிரதான கட்டுப்பாட்டுத் தேர்வாளர் பாடங்கள்: தமிழ், இந்துசமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியரைப் பற்றி...

பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி அவர்கள் 1969-லிருந்து பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள பல்கலைக்கழகத்திலே தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றியவர். இந்தியா, ரஷியா, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளின் அரசுகளும், பல்கலைக்கழகங்களும் வழங்கிய புலமைப் பரிசுகள் பெற்று நாட்டுப்புறவியலில் ஆய்வுகளை மேற்கொண்டவர். தமிழியல், பண்பாடு சார்ந்த அனைத்துலக மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகள் படித்தவர். 2020 முதலாக இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்குகளில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட ஆய்வுரைகள் வழங்கியவர்.

பேராசிரியர் இதுவரை வெளியிட்டுள்ள 16 ஆய்வு நூல்களிற் 'கனடாவில் இலங்கைத் தமிழரின் வாழ்வும் வரலாறும்' என்ற நூலுக்குக் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் 2017 ஆம் ஆண்டின் சிறந்த நூலென வழங்கிய பரிசு, 'பண்டைத் தமிழர் பண்பாடு - ஒரு புதிய நோக்கு' என்ற நூலுக்குத் தமிழகத்து 'சேக்கிழார் ஆய்வு மையம்' வழங்கிய 2015ஆம் ஆண்டின் அதிசிறந்த ஆய்வுநூற் பரிசு, 'நாட்டாரிசை இயல்பும் பயன்பாடும்' என்ற நூலுக்கு இலங்கை அரசின் சாகித்திய மண்டலம் 1991இல் வழங்கிய பரிசு எனப் பல பரிசுகள் பெற்றுள்ளன. 'ஈழத்து இடப்பெயர் ஆய்வு - யாழ்ப்பாண மாவட்டம்' (2002) என்ற நூலும் ஈழத்தமிழர் ஊர்கள் பற்றிய ஓர் அரிய ஆவணமாகும்.

2005ஆம் ஆண்டிலிருந்து தென்னாசிய நுண்கலை கற்கை மையத்தின் (அண்ணாமலை கனடா) தமிழ்துறைத் தலைவராகப் பணியாற்றுகிறார். ரொறன்ரோவில் இலக்கியம், பண்பாடு, சமயம், ஊர், கல்லூரி சார்ந்த மன்றங்களின் காப்பாளராகவும், தலைவராகவும், 'சுவாமி விபுலாநந்தர் தமிழ் ஆய்வு மையம் - கனடா' அமைப்பின் பணிப்பாளராகவும் பல்வேறு சேவைகளை மேற்கொண்டு வருகின்றார்.

பேராசிரியரின் கல்விப்பணி, பன்முக சமூகப் பணி ஆகியவற்றைப் பராட்டிக் கனடா அரசு, சமூக நிறுவனங்கள், ஊடகங்கள் ஆகியன வாழ்நாள் சாதனையாளர் விருகள் எனப் பல்வேறு விருதுகளை வழங்கிப் பேராசிரியரை மதிப்பளித்துள்ளன. கல்வி, சமூகம், பண்பாடு என ஓயாது இயங்கி வரும் மாண்புமிகு பேராசியர் பாலசுந்தரம் அவர்களின் பன்முகச் சேவைகள் தொடர வேண்டும் என **A FAST PRINT** பதிப்பகத்தாரும் வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org